கோகுலம்

Gokulam


ஏப்ரல் '91 ரூ. 3/-




MAGGI CLUB
MAGGI CLUBBERS FUN LOVERS
மேகி கிளப்
பரிசுகள், இலவசம்.
வனவிலங்குகளுடன்
பெறுவீர், உல்லாசம்!
குழந்தைகளே! மேகி கிளப்பில் சேருங்கள். வருடம் பூராவும் கொண்டாட்டம் பெறுங்கள். நியூஸ் லெட்டர்கள், பரிசுகள், விளையாட்டுகள் இன்னும் நீங்கள் செய்வதற்கு எத்தனை எத்தனையோ!
இந்த சின்னத்தை மேகி நூடுல்ஸ் 5 காலி உறைகளின் முன்பக்கத்திலிருந்து வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் பெயர், விலாசத்துடன் உங்களுக்குப் பிடித்த பரிசையும் குறிப்பிட்டு எழுதுங்கள். நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட மறந்துவிடாதீர்கள். இதுவரை உறுப்பினர் ஆகவில்லை என்றால் இப்போது ஆகலாம்.
மேலே குறிப்பிட்ட விவரங்களை அனுப்பும்போது, உறுப்பினர் ஆக விரும்புவதாகவும் எழுதுங்கள். நாங்கள் உங்கள் பரிசுப் பொருளுடன் இலவச மேகி கிளப் உறுப்பினர் அட்டையையும் அனுப்புவோம்.
எங்கள் விலாசம் :
மேகி கிளப்
தபால்பெட்டி எண் : 5788.
புது டில்லி-110 055.
மேகி "ஆபரேஷன் ஜங்கிள் ஹை..ப்" விளையாட்டில் வனவிலங்குகளைக் காப்பாற்றுங்கள்!
KING OF THE JUNGLE
மேகி "கிங் ஆ..ப் தி ஜங்கிள் கேம்" விளையாட்டில் வனத்தை வெல்லுங்கள்!
மேகி "ஜூ ஜங்கிள்" மூலம் சொந்தமாக ஒரு காட்டை உருவாக்குங்கள்!
TO LET
மேகி "பர்ட்ஹவுஸ்" உருவாக்குங்கள்!
Archie
ஆர்ச்சி காமிக்
MAGGI
2-minute noodles
EASY TO COOK - GOOD TO EAT
HTA 7105TAM
மேலும் பெறுவீர்: இதுவரை "லாஸ் ஆ..ப் ஜங்கிள் கேம்" நீங்கள் பெறவில்லையென்றால், இப்போது பெற்றுக்கொள்ளுங்கள்!

கோகுலம்

1991 ஏப்ரல் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 3





அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள். உலகைச் சூழ்ந்துள்ள போர் அபாயம் விலகி, மனித குலம் அமைதியாக வாழ இந்தப் புத்தாண்டு வழி வகுக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டுவோம்.

கோகுலத்தில் வரும் கதைகள், கல்வி வளர்க்கும் ஆசிரியராகிய எங்களைப் பெருமையோடு தலைநிமிர வைக்கின்றன, என்று ஆசிரியப் பெருமக்கள் எழுதும் பாராட்டுக் கடிதங்கள் தினமும் வந்து குவிகின்றன. அவர்களுக்கெல்லாம் தனித்தனியாக நன்றி கூற இயலாத நிலையில் இதையே நன்றியறிவிப்பாக எண்ண வேண்டுகிறேன்.



கோகுலத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாலே பெருமை என்று எல்லோரும் எண்ணும் அளவுக்கு உங்கள் ஆதரவுடன் கோகுலம் மேன்மேலும் வளரப் பாடுபடும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு விழா இந்த மாதம் வருகிறது. தனது கவிதைத் திறனை, காப்பியங்கள், சமுதாய விழிப்புணர்வு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தி வேகமளித்த பாரதிதாசன், குழந்தைகளுக்காகவும் எழுதியுள்ளார் என்பது குழந்தை இலக்கியத்திற்குக் கிடைத்துள்ள ஏற்றம். பாவேந்தர் குறித்து இந்த இதழில் இரண்டு பகுதிகள் வெளியாகின்றன.



புதிய தொடர்கதையைப் பற்றிய அறிவிப்பை இந்த இதழில் காணலாம்.



கேளுங்கள் சொல்லப்படும் பகுதியை மீண்டும் தொடங்கியுள்ளோம். உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

இந்த இதழில்

- தலையங்கம் 1
- பிறந்தநாள் கவியரங்கம் 2
- பாவேந்தரின் குழந்தைப் பாடல்கள் — 4 பேர் உரையாடல் 4
- மலை மேலே ஏறலாம்! 14
- தெனாலிராமன் — படக்கதை 11
- உயிர் காத்த தோழன் 18
- நூலகம் 10
- பிருந்தாவனம் 16
- வானம் இடிந்து விழுகிறதே! ... 17
- கேளுங்கள், சொல்லப்படும் ... 22
- திருமணமாம், திருமணம்! 23
- பொன்மொழிகள் இங்கே! சொன்னவர்கள் இங்கே? — போட்டி 28
- நீயே போதும்! 29
- சிரிப் 33
- கதையரங்கம் 34
- அன்பின் பங்கு 35
- கதையரங்கம் தொடர்ச்சி 39
- பாரதிதாசன் கவிதை 40
- மந்த புத்தி! துஷ்ட புத்தி! தர்ம புத்தி! 41
- மந்திரச் சங்கு 58
- ஏன்? ஏன்? ஏன்? 63
- பிருந்தாவனக் கவியரங்கம் 64
- இறந்தும் இருப்பவர் 65
- இசையைக் கேட்குமா பாம்பு? 69
- தேனீக்கள் 74
- கதையரங்கம் தொடர்ச்சி 74
- எங்க வீட்டுக்கு வராதே! 79
- பிருந்தாவனக் கவியரங்கம் தொடர்ச்சி 78
- ஸ்போர்ட்ஸ் 82
- ஏப்ரல் ஃபூல் கதை 88
- பிருந்தாவனம் தொடர்ச்சி 90
- இரும்மா இரு! 91
- கேட்கட்டுமா டாக்டர்? 94
- சார் தபால் 96



பிறந்தநாள்



அன்னை கஸ்தூரிபா

'பாரதத் தாய் வடிவினை
படமாய் வரைந்து கொடுக்கணும்;
பொருத்த மான படத்துக்கு
பொன் பதக்கம் தருகிறேன்...'

என்று தாத்தா சொன்னதும்
எடுத்தேன் வரை கருவிகள்;
என்னென் னவோ வகைகளில்,
எழுதிப் பார்த்தேன் படங்களை.

எந்தப் படமும் பொருத்தமாய்,
எனக்கே பட மறுத்ததால்,
நொந்து போன மனத்துடன்,
நுழைந்தேன் பூஜை அறைக்குள்ளே...

ஒரே நிமிடப் பிரார்த்தனை...
உள்ளத் துள்ளே பேரொளி!
அடுத்த கணமே பாரத
அன்னை வடிவம் தெரிந்தது!

கஸ்தூரி பா திருஉரு
காந்தித் தாத்தா பின்னணி...
சுற்றுக் கோடாய் இந்திய
தேசப் பட ரேகைகள்!

இப்படி ஓர் படத்தினை
எழுதி முடித்த நொடியிலே
உலகப் பரிசே பெற்றதாய்
உள்ளம் நிறைவு கொண்டதே!

— ரா. பொன்ராசன்.

முந்தி முயன்றவர்

அன்னை நாட்டின் விடுதலைக்காய்
அந்நிய நாட்டில் போராடி,
மண்ணிதை மீண்டும் அடைவதற்கே
மாயம் செய்தவர் வ. வே. சு!

காவலர் கண்ணில் மண்தூவ,
காட்டிய கோலம் எத்தனையோ!
பார்ஸியர், சீக்கியர், பக்கிரியாய்
பல வேடம் போட்டவர் வ. வே. சு!

வள்ளுவர் என்னும் வைர ஒளி
வையம் முழுதும் வீசிடவே,
அள்ளி அழகாய் ஆங்கிலத்தில்
அளித்தவர் அய்யர் வ. வே. சு!

'கம்பன் போலொரு கவிவேந்தன்
கவியுலகில் எங்கும் இல்லை'யென
நம்பும் வகையில் ஆராய்ந்தே
நயமாய்ச் சொன்னவர் வ. வே. சு!

இல்லை யென்றேதும் தமிழ்மொழியில்
இல்லை' யென்றே சொல்லிடவே,
நல்ல நல்லச் சிறுகதைகள்
நமக்குத் தந்தவர் வ. வே. சு!

நன் கை கொண்டே தனக்குதவும்
தத்துவத்தில் ஒரு தனிப்பள்ளி
தந்திட கல்வி, தொழில், பண்பு
முந்தி முயன்றவர் வ. வே. சு!

— ஆர். பி. சாரதி.



கவியரங்கம்



வள்ளல் அழகப்பர்

செட்டிநன் னாட்டில் பிறந்தவராம்,
செல்வச் செழிப்பில் வளர்ந்தவராம்!
பட்டங்கள் பற்பல பெற்றவராம்!
பாரிஸ்டர் டாக்டர் அழகப்பர்!

ஈகை என்னும் சொல்லுக்கே
எடுத்துக் காட்டாய் இலங்கியவர்!
சாவைக் கண்டும் அஞ்சாமல்
சரித்திரம் படைத்த பெருந்தகையார்!

காரைக் குடியில் தன்பெயரால்
கல்லூரி ஒன்றை நிறுவியவர்!
தேடிக் குவித்த பெருநிதியைத்
தினமும் அதற்கே வழங்கியவர்!

பண்டித நேருவின் நண்பரவர்
பயன்கரு தாமல் உதவியவர்
மண்டும் மடமை இருள்நீங்க
மணிவிளக் கேந்திய மாமனிதர்!

அடையாக் கதவம் அவர்வீடு
அவர்போல் வள்ளல் எவருண்டு!
உடலால் இன்றவர் இலையெனினும்
உளத்தில் நிறைந்தே வாழ்கின்றார்!

கல்விக் கேதம் வாழ்க்கைதனைக்
காணிக்கை யாகத் தந்தவரை
அல்லும் பகலும் நினைத்திருப்போம்,
அவர்போல் புகழ்பெற நாம் முயல்வோம்!

வெற்றியூர் சுப. திருஞானம்

4 பேர் உரையாடல்:

பாவேந்தரின் குழந்தை இலக்கியப் பாடல்கள்

‘சப்பளம் போட்டுக் குந்தி அம்மா: அப்பளம் போட்டார் சும்மா சும்மா’ என்று பாடியவாறு வந்தாள் இந்துமதி.

‘என்னது? அப்பளத்தைப் பற்றிய பாட்டா? அதிசயமா இருக்கே? யார் எழுதியது?’’ என்று கேட்டான் பாலாஜி.

‘‘‘தமிழுக்கு அமுதென்று பேர்.’ ‘துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ.’ ‘தலைவாரிப் பூச்சூட்டி உன்னை’ போன்ற புகழ் படைத்த பாடல்களைப் பாடிய அதே பாவேந்தர் பாரதிதாசனார் பாடிய குழந்தைப் பாடல் தான் இது. எனக்குத் தெரிந்து அப்பளத்தைப் பற்றி வேறு யாருமே பாடியதில்லை!’’ என்றாள் இந்துமதி.

‘‘பாரதிதாசன் குழந்தைப் பாடல்கள் பாடியிருக்கிறாரா?’’ என்று வியப்போடு கேட்டான் பாலாஜி.

‘‘உங்களுக்கெல்லாம் பாரதிதாசன் என்றதுமே அவரது பெரியவர்களுக்கான கவிதைகளைத்தான் நினைக்கத் தோன்றுகிறதே தவிர, அவ நம் குழந்தைகளுக்காகப் பாடிய கவிஞர் என்பதே மறந்து விடுகிறது. தம் குருநாதர் பாரதியாரைப் போலவே இவரும் குழந்தைப் பாடல்களைப் பாடியிருக்கிறார். இன்னும் சொன்னால், பாரதியாவது குழந்தைகளுக்காக ஓரிரு குழந்தைப் பாடல்களைத்தான் பாடியிருக்கிறார். ஆனால், பாவேந்தர் ஏராளமாய்ப் பாடியிருக்கிறார். ‘இளைஞர் இலக்கியம்’ என்ற நூல் முழுக்க முழுக்கச் சிறுவர் – சிறுமியருக்காகப் பாடியவை. அதைத் தவிரவும் குழந்தைகளுக்காக அவர் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்’’ என்றாள் இந்துமதி.

‘‘பாவேந்தர் என்று பாராட்டப்பட்ட அவ்வளவு பெரிய கவிஞர், குழந்தைகளுக்காகவும் பாடியிருக்கிறார் என்பது எவ்வளவு அதிசயமானது?’’ என்று வியந்து கொண்டே வந்தாள் கோதை.

‘‘மற்ற கவிஞர்களைப் போலவே இவரும் குழந்தைகளுக்குப் பிடித்தமான நிலவு, கடல், விலங்குகள், பறவைகள், குடும்பத்தார், இயற்கை, கல்வியின் அவசியம் போன்ற பல தலைப்புகளில் பாடியிருக்கிறார் என்றாலும், மற்றவர்கள் தொடாத பல தலைப்புகளில் பாரதிதாசன் மட்டுமே பாடியிருக்கிறார். அந்தப் பெருமை அவருக்கு மட்டுமே உண்டு’ என்றாள் இந்துமதி.

‘‘அப்படியென்ன புதுமைப் பாடல்கள்?’’ என்று கேட்டுக் கொண்டே வந்தான் சீனிவாச வரதன்.

‘‘சுகாதாரத்தைப் பற்றிப் பாவேந்தர் பாடியது போல் குழந்தைகளுக்காக வேறு யாரும் பாடவில்லை. நேர்பட ஒழுகு என்று தலைப்பிட்ட ஒரு பாடல், ‘கண்ட இடத்தில் துப்பாதே. காலிலே சேற்றை அப்பாதே. துண்டு துணிகளைக் கிழிக்காதே. துடுக்காய் எவரையும் பழிக்காதே’ பண்டம் எதையும் பாழாக்காதே. பாலைத் தரையிலே வார்க்காதே என்கிறது. இதன் இனிய சந்தத் தாளம் போட வைக்கிறது இல்லையா? இதே மாதிரி,‘கண்ணாம்பூக் கட்டியை நறுக்காதே. சுவரிலும் கதவிலும் கிறுக்காதே. கண்ணாடி எடுத்தால் மெது வாய் வை – அது கைதவறி விட்டால் உடைவது மெய்’ என்று இன்னொரு பாடல். பெரிய பெரிய நகரங்களில் கூடக் குழந்தைகளைத் தெருவில் மலம்




‘‘குழந்தைகளுக்காகவும் பாடல்களை எழுதியுள்ளவர் என்ற வகையில் நாமும் பெருமை கொள்வோம்’’
— ஆர். இந்துமதி.

கழிக்க வைக்கிறார்கள். நன்கு படித்தவர்கள் கூட இதற்கு விதி விலக்கு இல்லை.’’ என்றாள் இந்துமதி.

‘‘இதை நீ சொல்ல வேண்டுமா? சென்னை நகரிலே கூட நாம் அன்றாடம் காணும் காட்சிதானே இது?’’ என்றான்

வரதன்.

'இதைக் கண்டித்துக் கூடப் பாவேந்தர் பாடியிருக்கிறார். கட்டாயக்கல்வியின் அவசியத்தை உணர்த்தும் பாடலில் 'பன்றி எதற்குத் தெருவில் வந்தது? பாட்டையிலுள்ள கழிவை உண்ண. என்ன கழிவு தெருவில் இருக்கும்? இருக்கும் பிள்ளைகள்



''நகைச்சுவைப் பாடல்கள் கூடவா இருக்கு!''
— வி. பாலாஜி.

வெளிக்கிருந்தனர்' என்று நேரிடையாகவே சாடுகிறார். இதில் இன்னொரு வேதனை என்ன தெரியுமா? பாவேந்தர் இதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பாடி வைத்தார். ஆனால், இன்னமும் இந்த நிலை பெரிய பெரிய நகரங்களில் கூட மாறவில்லை. இன்னும் கேட்டால், அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்றே கூறலாம்' என்றாள் இந்துமதி.

''தனக்குத் தவறு என்று பட்டதை வெளிப்படையாகச் சாடுவதில் பாவேந்தருக்கு ஈடு இணை யாருமே இல்லை என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். குழந்தைப் பாடல்களில் அவர் அப்படி வேறு எதையாவது கண்டித்திருக்கிறாரா?'' என்று கேட்டான் கோதை.

''ஏன் இல்லாமல்? காப்பி உடலுக்குக் கெடுதி என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதைக் குழந்தைகளாவது பழக்கிக் கொள்ளக் கூடாது என்பதில் பாவேந்தர் தீவிரமாக இருந்திருக்கிறார். புகைபிடிப்பதைப் பற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே கடிந்திருக்கிறார். கிராமங்களில் உள்ள மாட்டுக் கொட்டில்கள் தூய்மையோடு இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்! நாம் நகை நட்டுகளில் அதிக நாட்டம் காட்டுகிறோம் இல்லையா...? அது தவறு என்று நமக்கும் தெரியும். அதையும் கூடப் பாவேந்தர் கண்டித்து அறிவுரை கூறியிருக்கிறார்!'' என்றாள் இந்துமதி.

''நான் கூடப் படித்திருக்கிறேன். வறுமையிற் செம்மை என்று அந்தப் பாடலுக்குத் தலைப்பு. தாயும் மகளும் பேசிக் கொள்வது போல் இருக்கும். அந்தப் பாடல்தானே?'' என்று கேட்டான் கோதை.

''அதேதான். கைக்கு வளையல்களும் காதுக்குக் கம்மலும் வேண்டும். அவை அணிந்து சென்றால்தான் தோழிகள் மதிப்பார்கள் என்று சிறுமி ஒருவள் தன் தாயிடம் கேட்கிறாள். ஒவ்வொன்றுக்கும் பதில் கூறிக்கொண்டே வரும் தாய் இறுதியில் 'கற்பது பெண்களுக்காபரணம் — கெம்புக்கல் வைத்த நகை தீராத ரணம். கற்ற பெண்களை இந்த நாடு — தன் கண்ணில் ஒற்றிக் கொள்ளு மன்போடு' என்று முடிக்கிறாள். இந்தப் பாடலைப் பொறுத்தவரை பாவேந்தர் இப்பொழுது இருந்திருந்தால் நம்மைப் பார்த்து மகிழ்ச்சியே அடைந்திருப்பார். ஏன் தெரி





யுமா? அவர் நகை என்று குறிப்பிட்டவை பொன்னால் ஆனவைகளையே. ஆனால், இப்பொழுது நாம் அணிந்திருப்பவை தங்க நகைகள் அல்ல. எல்லாமே இரண்டே ரூபாய் விலையுள்ள மலிவுப் பொருள்கள்,'' என்றாள் இந்துமதி.

பாவேந்தர் பாடல்களில் நகைச்சுவைப்

''கதைப் பாடல்களும் நிறைய இருக்கு!''
— ஆர். கோதை.

பாடல்கள் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான் பாலாஜி.

''நிறைய இருக்கிறது. குதிரை வண்டி என்று ஒரு பாடல். 'ஓடும் நன்றாய் ஒரு குதிரை. உதைக்கும் நன்றாய் ஒரு குதிரை. ஓடையில் தள்ளும் வண்டியையே. உயிரை வாங்கும் ஒரு குதிரை.' 'எலிப்பொறி' என்று ஒரு எட்டு வரிக் கதைப் பாடல். 'எலிப் பொறியில் போனி — அதை. இழுத்தது பெருச்சாளி. எலிப் பொறியின் கதவு — தான் சாற்றிக் கொண்டது பிறகு. ஒளிந்தது பார் உள்ளே — அது வரப்பார்த்தது வெளியே. வலியக் கோணியில் பிடித்தார் — அதை மாண்டு போக அடித்தார்!'' என்றாள் கோதை.

''பெருச்சாளியைப் பிடித்து அடிப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கி றாரே!'' என்றான் சீனிவாசவரதன்.

''இன்னொரு பாடல் 'சிரித்த பொம் மைகள்' என்ற தலைப்பில். வீட்டில் அம்மா முறுக்குச் சுடுகிறாள். அதில் ஒன்றை அம்மாவுக்குத் தெரியாமல் தம்பி எடுத்து வந்து தின்கிறான். அவனுடைய அக்காவும், அம்மாவுக்குத் தெரியாமல் ஒன்றை எடுத் துக் கொண்டு அதே அறைக்கு வருகிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதில்லை என்று முடிவு செய்து கொள்கின்றனர். கடைசியில் அம்மா அதே அறைக்குச் சுட்ட எல்லா முறுக்குகளையும் பத்திரமாக வைத்து மூட எடுத்து வருகி றாள்!'' என்று சிரித்தாள் இந்துமதி.

எல்லோரும் சிரித்தனர்.

''பாவேந்தரின் குழந்தைப் பாடல்களில் கதைப் பாடல்களும் நிறைய இருக்கிறது. அவற்றில் ரொம்பச் சுவையானது 'காக்கை எறும்பு' என்ற பாடல். இதோ கேளு. 'எரு மைக் கொம்பில் ஒரு காக்கா, ஏறிக் கொண் டதாம். எறும்பை அது கூவிப் பெருமை காட்டிச் சிரித்ததாம். எருமை காதில் அந்த எறும்பு புகுந்து கொண்டதாம். எருமை காது வலியால் தன் தலையை அசைத்ததாம். இருந்த காக்கா விரைவாகப் பறந்து விட்ட தாம். எறும்பதனைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்ததாம். பெருமை பேசித் திரிந் திடுவோர் அது சரியில்லை. பின்னால் சிறு மையடையக் கூடும் அது பொருந்தெல்லை'' என்றாள் கோதை.

''நாட்டின் மேன்மைக்காகவும், தமிழின் ஏற்றத்திற்காகவும், மூடப் பழக்கங்களைக் கண்டித்தும் பாடல்கள் பாடிய பாவேந்தர் குழந்தைகளுக்காகவும் எழுதியுள்ளது குழந்தை இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப் பதாகும்,'' என்றான் சீனிவாச வரதன்.

''நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்



''பெருச்சாளியைப் பிடித்து அடிப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறாரே!''
— ஆர். சீனிவாசவரதன்.

கவிஞர் — குழந்தைகளுக்காகவும் பாடல் களை எழுதியுள்ளவர் என்ற வகையில் குழந்தைகளான நாமும் பெருமை கொள் வோம்.'' என்றாள் இந்துமதி.

படங்கள், கட்டுரை: பிரபுசங்கர்.

உயிர் காத்த தோழன்

ஆர். சண்முகப்பிரியா

படம் இங்கே — கதை எங்கே? — போட்டியில் முதல் பரிசு பெற்ற 2 வது கதை:

பணக்கார பரமுவின் ஏழை நண்பன் சோமு. இருவரும் ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். அச்சிற்றூரில் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் இல்லை. மேல் நிலைப் பள்ளியில் கல்வி பயில பரமுவை பக்கத்துப் பெரிய ஊரான மயிலப் பட்டியில் சேர்த்து விட்டார் அவன் தந்தை பெரிய பண்ணையார். பண்ணை வீட்டில் வண்டி ஓட்டிப் பிழைக்கும் சோமுவின் தந்தைக்கு சோமுவை ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க வைக்க வசதியில்லை. எனவே படிப்பை நிறுத்திவிட்டு வயல் வேலைகளில் ஈடுபட்டான் சோமு.


இருவரும் வெவ்வேறு ஊரில் இருந்தாலும், பரமு, ஊருக்கு வரும் போதெல்லாம் சோமுவுடன் இணைந்து, ஆற்றங்கரை, தோப்பு போன்ற இடங்களில் ஒன்றாக அமர்ந்து, தான் படிப்பதிலிருந்து பலவற்றைக் கற்றுக்கொடுப்பான். சோமுவும், தன் நண்பன் நன்றாகப் படிப்பதில் மிகவும் பெருமை கொள்வான். இருவரும் படிப்பிலும், பணத்திலும், அந்தஸ்திலும் வேறுபட்டவர்களாயிருந்தாலும், ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புடன் இருந்தனர்.

அதே ஊரில், கேசவன் என்றொரு பொறாமையே உருக் கொண்டவன்; நண்பர்களைப் பிரிக்கும் மனப்போக்குள்ளவன் இருந்தான். அவன் எப்படியாவது பரமுவுக்குக் கெடுதல் செய்ய எண்ணினான். ஒருமுறை பள்ளியில் பரீட்சை முடிந்து, விடுமுறைக்கு ஊருக்கு வந்தான் பரமு. விடுமுறையில் பரமு, சோமு இருவரும் சேர்ந்து பலவிஷயங்களைப் பரிமாறிக்கொண்டனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கேசவன், இந்த இணை பிரியாத நண்பர்களை எப்படியும் பிரித்து விடுவது என முடிவு செய்து திட்டமிட்டான்.

விடுமுறைமுடிந்து மீண்டும்மயிலப் பட்டிக்குக் கிளம்பினான் பரமு. சோமுவின் தந்தை வண்டியோட்டிச் செல்ல, அதில் பயணம் செய்ய ஆரம்பித்தான் பரமு. சோமுவிடம் பிரியா விடை பெற்று, பிரிய மனமில்லாமல், படிப்பை உத்தேசித்துக்கிளம்பினான். சோமுவும், விடை கொடுத்து விட்டு பரமு திரும்பி வரும் அடுத்த லீவை எண்ணிக் கொண்டே வயலுக்குச் சென்றான்.

அங்கே,


வழியில் புன்னை மரத்தடியில், கேசவன் மிகுந்த உற்சாகத்துடன்; அவன் தங்கையிடம், "பரமு, இன்று ஒழுங்காக ஊருக்கு போய்ச் சேர



அடுத்தது என்ன என்று ஆவலைத் தூண்டும் புதிய தொடர்கதை..!

மலைக் கோட்டை மர்மம்!

வீரவசந்தன்





• ஆர். சண்முகப்பிரியா

மாட்டான். கையோ, காலோ, இடுப்போ, இல்லை மூன்றையுமோ உடைத்துக் கொள்ளப் போகிறான்," என்று கூறிக் கொண்டு வந்தான்.

"என்ன அண்ணா சொல்றே நீ!" என்று அதிர்ந்து கேட்டாள் தங்கை.

"இதோ பார் வண்டியின் அச்சாணி. பழி வாங்கிட்டேன். இருவரும் எவ்வளவு நண்பர்கள் இந்த நிமிஷம் வரைக்கும்! இனிமேல் ஜென்ம விரோதிகள் தான். பழி சோமுவின் அப்பா மீது. எப்படி என் ஐடியா! அச்சாணியைக் கழற்றி விட்டு மரக்குச்சியைச் செருகியிருக்கேன். கொஞ்ச தூரம் போனதும் வண்டி பாரம் தாங்காமல் குச்சி முறிந்து கவிழ்ந்து விடும்!" என்றான் கேசவன்.

சோமுவின் காதில் எல்லாம் தெளிவாக விழுந்தது. அவன் திடுக்கிட்டான். உடனே, எடுத்தான் ஓட்டம்......

கல்லிலும் முள்ளிலும் விழுந்து ஓடினான் சோமு. வண்டி எப்படியும் ஒரு கி.மீ. தூரம் சென்றிருக்கும். வண்டிப் பாதையில் போனால் நேரமாகி விடுமே. குறுக்குப் பாதையில் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். 'ஆ' நறுக்கெனக் குத்திய முள் வலித்தது. வலியைப் பொறுத்துக் கொண்டு ஓடினான். தூரத்தில் வண்டி தெரிந்தது.

'பரமு, பரமு, அப்பா, அப்பா' — கத்திக் கொண்டே ஓடினான் சோமு. 'வண்டியை நிறுத்தி இறங்குங்கள் சீக்கிரம்!' எனக் கூச்சலிட்டான். இருவரும் வண்டியை நிறுத்தி இறங்கினர். கேசவன் செய்த ஈனச் செயலைக் கூறினான் சோமு. அதற்குள் 'படக்' என்ற சத்தத்துடன் வண்டி சாய்ந்தது. தன்னைக் காப்பாற்றிய சோமுவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பரமு தன் தந்தையிடம் கூறி சோமுவின் மேல் நிலைக்கல்விக்கு ஆகும் செலவை ஏற்கச் செய்தான்.

உங்கள் நூலகம்

அருளிச் செய்த ஆழ்வார்கள்

(அழகு பழனிச்சாமி — பக். 92 — ரூ. 10/— ஸ்ரீலதா பதிப்பகம், 36, சூடியம்மன் பேட்டை தெரு, சைதை, சென்னை — 15)

குழந்தைகளுக்கு எழுதுவதில் நன்கு அனுபவம் பெற்றுள்ள இந்த ஆசிரியர், ஏற்கெனவே கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகமானவர். வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரின் வரலாற்றையும் சுவையாகத் தந்துள்ளார். இடையிடையே ஒழுக்கத்தின் பெருமை, கூட்டு வழிபாட்டின் அவசியம், ஒற்றுமையின் மேன்மை போன்றவற்றையும் இழையோட விட்டுள்ளார். தெளிவான நடை. பாராட்டத் தகுதி பெற்ற படைப்பு.

பாப்பா! பாட்டுப் பாடுவோம்!


(செல்ல கணபதி — பக். 24, ரூ. 6/—, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14.)


குழந்தைக் கவிஞரால் பயிற்றுவிக்கப்பட்ட கவிஞர்களுள், சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள செல்ல கணபதியின் பதினோரு குழந்தைப் பாடல்கள் இதில் உள்ளன. கற்கண்டை எங்கே கடித்தாலும் இனிக்கும். ஆறு பாடல்களில் எல்லாமே இனிமையாக; நெஞ்சை அள்ளும் சந்தம் நிறைந்தவையாக;கைதட்டித் தாளம் போடும் படியாக உள்ளன.

வெள்ளை முயல் காட்டிலே
துள்ளித்துள்ளி ஓடுதாம்.
அள்ளிக் கொள்ள நெஞ்சிலே
கொள்ளை ஆசை தோன்றுதாம்.

பள்ளத்தையே பார்த்ததும்
வெள்ளை முயல் தாவுதாம்.
உள்ளத்திலே ஆசைபோல்
அள்ளிக் கொள்ள முடியுமா?

நூலின் மற்றொரு சிறப்பு, அழகான பல வண்ண ஓவியங்களும், கெட்டித் தாளும், அயல்நாட்டுப் புத்தகங்களுக்கு நிகரான பெருமை மிக்க படைப்பு. பரிசளிக்க ஏற்றது.


கினாலிராமன்
அமைப்பு 'ரே'
ஓவியம்
கருத்து: V.R.ஜெயஸ்ரீ.
அறிவால் உலகப் புகழ் பெற்றான் தெனாலிராமன். அசட்டுத் தனத்தால் அடி வாங்கியவன் கினாலிராமன்!
ஒரு நாள் ராமனின் அம்மா...
ஏதாவது வேலை கத்துண்டால் தான் சோறு! இல்லே பட்டினி தான் போடுவேன்.
எனக்கு என்ன வேலை தெரியும்மா?
வைத்தியரிடம் சிஷ்யனாபோ, அதிர்ஷ்டம் இருந்தால் ராஜ வைத்திய-னாகவும் ஆகலாம்!
சரிம்மா...
வைத்தியர் வீட்டில்...
சரி, ராமன் இங்கேயே இருந்து வைத்தியம் கத்துக்கட்டும்!



ராமா, இந்த மூலிகை-யை அரைத்து வை.
சரிங்க!
ராமன் மருந்து தயாரிக்கக் கற்றான்.
ஐயா, கிராம அதிகாரிக்கு வயிற்று வலி அதிகமாயிடுச்சு!
இதோ வரேன்! ராமா புறப்படு!
கிராமாதிகாரி வீட்டில்-
திடீர்னு வலி ஏன் அதிகமாச்சு? கண்டதை ஏதாவது தின்னாரா!
கடலைத் தோல் வைத்தியர் கண்ணில் படுகிறது!
வயிற்று வலியோட கடலை தின்னு இருக்கார்! இனிமே கடலை திங்காம மருந்தைக் குடிச்சால் குணமாகும்!
இப்படியும் வைத்தியம் பண்ணலாமா?


ஒரு முறை வைத்தியர் ஊரில் இல்லாத போது.
ஜமீன்தார் குழந்தைக்கு வயிற்று வலி. வைத்தியர் இல்லேன்னா என்ன, சிஷ்யர் நீங்க வாங்க!
இதோ வரேன்..
ஜமீன்தார் வீட்டில்..
ராமன் புலித்தோலைப் பார்க்கிறான்.
குழந்தை புலியைத் தின்னுருக்கு. அதான் வயிற்று வலி.
இந்த முட்டாள் வைத்தியனை அடிச்சு விரட்டுங்க!
தன்னை அவர்கள் அடிப்பதற்கான காரணம் ராமனுக்கு புரியவில்லை! உங்களுக்கு...?

மலை மேலே ஏறலாம்! மேகத்தைப் பிடிக்கலாம்!



* மேட்டுப்பாளையம் — உதகை ரயில் வண்டியில் பயணம் செய்தால் நாம் மேகத்துக்குள் புகுந்து செல்லலாம்! மேகத்தைத் தொட்டுக் கூடப் பார்க்கலாம்!

* நீலகிரி மாவட்டத்தில் மேட்டுப்பாளையத்திற்கும் — உதகமண்டலத்திற்கும் இடையே ஓடும் ரயில் பல பெருமைகளைப் பெற்றது.

* பல் சக்கரம் வைத்த தண்டவாளம் இதன் சிறப்பு. இந்தத் தண்டவாளம், இரண்டு இருப்புப் பாதைகளுக்கு நடுவே அமைந்துள்ளது.

* பல் சக்கர ரயில் பாதை, குன்னூர் ரயில் நிலையத்தில் முடிந்து விடுகிறது. அதற்கப்புறம் உதகை வரை சாதாரண ரயில் பாதைதான்.

* இந்தியாவிலேயே இத்தகைய ரயில் வண்டி அமைந்திருப்பது இங்கு மட்டும்தான்.

* நீலகிரி மலையில் இருப்புப் பாதை அமைந்திருப்பது 8½ மைல் உயரத்தில், இதன் நீளம் 28 மைல். இதன் குறுக்கே 16 சுரங்கப் பாதைகள் வருகின்றன. இவற்றின் மொத்த நீளம் 3090 அடி.

* இந்த மலைப்பாதை ரயிலுக்குக் கண்களுக்குக் குளுமை தரும் நீல வண்ணம் பூசியிருக்கிறார்கள். கண்காட்சிகளில் பொம்மை ரயிலுக்கு இருப்பது போல்தான் பெஞ்சுகள். இந்தப் பெட்டிகளில் கழிப்பறைகள் கிடையாது.

* இந்த ரயிலை இஞ்சின் பின்னாலிருந்து உந்தித் தள்ளிக் கொண்டு போகும்!

* இந்த விநோதமான ரயிலின் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு 8½ மைல்! இதைவிட மெதுவாகப் போகக் கூடிய ரயில் வண்டி இப்போதைக்கு இந்தியாவில் இல்லை!

* மணிக்கு 8½ மைல் வேகத்தில் இப்படி ஒரு ரயில் அவசியமா என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? இதில் பயணம் செய்து பார்த்தால் இன்னும் சிறிது மெதுவாகப் போகக் கூடாதா என்று தோன்றும்!

* இருபுறமும் இயற்கைக் காட்சிகள் மண்டிய மலைப் பகுதிக்குள் இந்த அழகு ரயில் போகிறது. ஒரு பக்கம் பார்த்தால் கழுத்து வலிக்கும் அளவுக்கு வானை முட்ட முயலும் மரங்கள்.

இன்னொரு பக்கம் 'கிடுகிடு' பள்ளங்கள்! அந்தப் பள்ளங்களில் துள்ளி விழுந்து ஓடும் அருவிகள். வண்ண மலர்க் கூட்டங்கள். வகை வகையாகக் குரலெழுப்பி வரவேற்கும் வண்ணப் பறவை இனங்கள். உருளைக்கிழங்கு, தேயிலை, கமுகு, வாழைத் தோட்டங்களைக் கண்டு களிக்கலாம்.


* உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், புள்ளிமான்கள் உங்கள் ரயிலைக் குறுக்கிட்டு மகிழ்விக்கலாம்! யானைகள் கூடக் கூட்டமாக வந்து உங்கள் ரயிலை நிறுத்திவிட்டுக் கடந்து போகலாம்! வெண்மேகக் கூட்டங்கள் உங்கள் பெட்டிக்குள் புகுந்து உங்களைக் கடந்து போகலாம்!

* இந்த ரயில் பாதையை அமைப்பதில் உள்ள தொல்லைகளைக் கருத்தில் கொண்டு யாருமே இதன் பணிகளைச் செய்ய முன்வரவில்லை. படகர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் துணிந்து பணிகளை மேற்கொண்டு முடித்துத் தந்தார். தங்கள் நன்றிக் கடனாக இந்த ரயிலை அவர் எங்கு வேண்டுமானாலும் கையைக் காட்டி நிறுத்தி ஏறிக் கொள்ளவும், இறங்கிக் கொள்ளவும் அரசாங்கம் உத்தரவிட்டதாம்!

* சிலிகுரி — டார்ஜிலிங்கில் கூட இப்படிப்பட்ட வண்ண மலைப் பாதை ரயில் தொடர் உள்ளது என்றாலும், இதற்கு உள்ளது போல் பல் சக்கரம் அமைப்பு அதற்கு இல்லை! அதோடு, மலைகளுக்குக் குறுக்கே அழகை அள்ளிக் கொண்டு இது ஓடுவது போல் அது இல்லை! சற்று ஒதுங்கியே ஓடுகிறதாம்!

* தொண்ணூறு வயதான இந்த வண்ண ரயில்பாதை ஸ்விட்சர்லாந்துப் பொறியாளர்களால் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது.

அட்டை வண்ணப்படம்:
வி. முத்துராமன், கோவை.





டெலிபோனிலேயே தேர்வு!

அமெரிக்காவில் உள்ள ஜிட்லான் கல்விச் சாலை புதுமையான தேர்வு முறை ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இதன்படி தேர்வுக்கான வினாக்கள் டெலிபோன் மூலம் அறிவிக்கப்படும். இதற்கான விடைகளை மாணவர்கள் டெலிபோன் மூலம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். இதற்கு 'டெலிகாசி' என்று பெயர்.

இந்தத் தேர்வு முறை,நர்சரி மாணவர்கள் முதல் கல்லூரி மாணவர்கள் வரைக்கும் பொருந்தும். பிறந்தாலும் அமெரிக்காவில் பிறக்க வேண்டும் என நினைக்கத் தோன்றுகிறது அல்லவா....?

— க. கோகுலகிருஷ்ணன், விசலூர்.

உண்மையில் ஜனநாயகவாதி

ஒருவர் காந்தியடிகளைப் பார்த்து, "உண்மையான ஜனநாயகவாதி யார்?" என்று கேட்டார்.

"ஆண்டவன் என்றார் அடிகள்."

"ஆண்டவனா, வேடிக்கையாக இருக்கிறதே!"

"இதில் என்ன வேடிக்கை இருக்கிறது. உன்னையும் என்னையும் போல் எத்தனையோ மக்களைப் படைத்தவன். நன்மை தீமை, பாவம் - புண்ணியம் ஆகியவற்றையும் படைத்தவன். அவரவர்களுக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பொறுப்பை தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை. மக்களிடமே ஒப்படைத்து விட்டான். "ஜனநாயகவாதியாக இல்லாவிட்டால் மக்களிடம் ஒப்படைத்து இருப்பானா?" என்றார் அடிகள்.

— அ. முஸ்தபா, தக்கோலம்.



போலீஸ் பன்றி!

திருட்டு, கொலை, கொள்ளை முதலியவற்றில் துப்புக் கண்டுபிடிப்பதற்காக நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள போலீஸ் படைகளில் துப்பறியும் நாய்கள் இருக்கின்றன. இப்போது பன்றியும் துப்பறியும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றது. மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரில் உள்ள போலீஸ் படையில் துப்பறியும் பன்றி உள்ளது. இந்தத் துப்பறியும் பன்றிக்கும் அப் படையில் உள்ள மற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளம் சலுகைகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன.

— அ. திலகா, திண்டிவனம்.

வானம் இடிந்து விழுகிறதே!

பறவையூர் என்று சிறு கிராமம். அந்தக் கிராமத்துக்கு அருகில் ஒரு அழகான தோட்டம். தோட்டத்தின் நடுவில் அழகான சிறு குளமும் அருகில் ஒரு சிறு ஓடையும் இருந்தன. குளத்தின் ஓரத்தில் பெரிய மரங்கள். அந்த இடம் மிகவும் குளிர்ச்சியாகவும் அழகாகவும் இருந்தது. பலவிதமான பறவைகளும் அங்கே வசித்து வந்தன. அந்த, அழகான குளத்தில் வாத்துக்கள் வசித்தன. அதனால், பறவையூர் ஜனங்கள் அதை வாத்துத் தோட்டம் என்று அழைத்தார்கள். அந்தத் தோட்டத்தில் ஒரு பெரிய வாத்து வாழ்ந்து வந்தது. அது ஒரு நாள் சிறு பலகையை எடுத்து அதில் ''தாய் வாத்துத் தோட்டம்'' என்ற பெயரை எழுதி அந்தத் தோட்டத்தின் வாசலில் வைத்தது.

அந்தப் பெரிய வாத்துக்கு அநேக குஞ்சுகள் இருந்தன. இந்தக் குஞ்சுகள் எப்போதும் குறும்புகள் செய்து பெரிய வாத்தை ஓயாமல் தொந்தரவு செய்து கொண்டேயிருந்தன. அவற்றுள் ஒரு குஞ்சு மற்றெல்லாக் குஞ்சுகளையும் விட அதிகக் குறும்பு செய்தது. ஆகையால், அதைக் குறும்பு வாத்துக்குஞ்சு என்று அழைத்தனர். தாய் வாத்து ஒரு பலகையில் தன்


குழந்தை இலக்கிய முன்னோடிகள்

குழந்தை இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான அமரர் பி. ஆர். ராஜசூடாமணி, குழந்தைகளுக்காகப் பல பாடல்களும் கதைகளும் எழுதிக் குவித்தவர். புகழ் பெற்ற பழம் பாடல்களான 'கொழு கொழு கன்றே...'' ''ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரே பூ பூத்தது'' என்ற விளையாட்டுப் பாடல் போன்றவைகளைச் செம்மைப்படுத்திக் கொடுத்த பெருமை இப்பெரியாரையே சாரும். சென்னை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், அறிவியல் நூல்களையும் எழுதியுள்ளார். சென்னை வானொலி தொடங்கப்பட்ட போது, சிறுவர் நிகழ்ச்சிகளைத் திறம்பட அமைத்த பெருமைக்குரியவர் இப்பெரியாரே. இங்கு வெளியாகும் கதை, சிறு நூலாகச் சென்னைக் கிறித்துவ இலக்கியச் சங்கத்தாரால் 1948 ஆம் ஆண்டு வெளியானது. அனுமதி பெற்று உங்களுக்காக இது வழங்கப்படுகிறது.

—பி.ஆர். ராஜசூடாமணி—

பெயரை எழுதித் தோட்டத்தின் வாசலில் வைத்ததை இக்குறும்பு வாத்துக் குஞ்சு பார்த்துக் கொண்டேயிருந்தது. உடனே தானும் தன் தாயைப் போலவே செய்ய ஆசைப் பட்டது. ஒரு பெரிய பலகையை யெடுத்து அதில் "குறும்பு வாத்துக் குஞ்சு குளம்" என்று எழுதியது. குளத் தங்கரையில் இரண்டு கால்கள் நாட்டி, அந்தப் பலகையை மாட்டி வைத்துவிட்டது. அது மற்ற வாத்துக் குஞ்சுகளைச் சேர்த்துக் கொண்டு அந்தக் குளத்தில் பண்ணின அட்ட காசத்துக்கு அளவே இல்லை.

ஒருநாள் குறும்பு வாத்துக்குஞ்சும் இன்னும் சில வாத்துக் குஞ்சுகளும் வீட்டைவிட்டு நெடுந்தூரம் போயின. அங்கே ஒரு மரத்தடியில் சிறிது நேரம் பூச்சி புழுக்களைப் பொறுக்கித் குஞ்சு அப்பொழுதும் தூங்கிக் கொண்டேயிருந்தது! திடீரென்று மடமடவென்று வானம் இடிஇடித் தது. உடனே அது கண் விழித்து தன் னுடைய தோழர் ஒருவரையுங் காணாமல், தான் மட்டும் தனியாக இருப்பதையறிந்து மிகவும் பயப் பட்டது. மறுபடி இடி இடித்தது. "ஐயோ! வானம் உடைகிறதே! நான் என்ன செய்வேன்? அம்மா சொன்ன படி வானம் உண்மையாகவே உடை கிறதே" என்று நினைத்துத் திகில டைந்து வேகமாக ஓட ஆரம்பித்தது. பலத்த காற்றினால் இலை தூசி துரும் பெல்லாம் ஆகாயத்தில் பறந்தன. இடி இடித்தது. குறும்பு வாத்துக்குஞ்சின் மேல் ஏதோ ஒன்று விழுவது போல் தெரிந்தது. உடனே அது, "ஐயோ உண்மையாகவே வானம் உடைந்து



தின்றபின், படுத்துத் தூங்க ஆரம்பித் தன. திடீரென்று ஒரு பலத்த காற்று அடித்தது. மற்ற குஞ்சுகளெல்லாம் விழித்துக் கொண்டு மிகவும் பயந்து தங்கள் வீடுகளுக்கு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டன. ஆனால்குறும்புவாத்துக்

அதில் ஒரு துண்டு என்மேல் விழுந்து விட்டதே! ஐயோ, வானம் இதோ இடிந்து விழுகிறதே! நான் என்ன செய்வேன்! உயிர்தப்ப ஓடவேண் டுமே, க்வாக், க்வாக்" என்று அலறிக் கொண்டே ஓடிற்று.

அது ஓடும் போது ஒரு வாத்து வந்தது. அதன் பெயர் வீர வாத்து. வீரவாத்து குறும்புவாத்தைப் பார்த்து, ''நீ ஏன் இப்படி ஓடுகிறாய்?'' என்று கேட்டது. அதற்குக் குறும்பு வாத்து, ''ஐயோ நான் என்ன செய்வேன்? வானம் உடைகிறதே! அதில் ஒரு துண்டு என்மேல் விழுந்து விட்டதே. நான் உயிர் தப்ப ஓடிப் போகிறேன். க்வாக், க்வாக்'' என்று சொன்னது.. உடனே வீரவாத்து, ''ஆகா! வானம் இடிந்து விழுந்துவிட்டதா? அப்படி யானால் நானும் உன்னுடன் ஓடி வரு கிறேன்'' என்று சொல்லி, இரண்டும் ஒன்று சேர்ந்து ஓடின.

சிறிது தூரம் சென்றதும் ஒரு கோழி அவ்வழியே வந்தது. அதற்குக் குறுங்கோழி என்று பெயர். ''எங்கே தலைதெறிக்க ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டது கோழி.

''உனக்குச் சமாசாரம் இன்னும் தெரியவில்லையா? வானம் இடிந்து விழுகிறதே! என்மேலும் கூட அது விழுந்திருப்பதைப் பார். நாங்கள்



உயிர் தப்ப ஓடிப் போகிறோம். க்வாக், க்வாக்'' என்று சொன்னது. உடனே குறுங்கோழியும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு ஓடியது!

மூன்றும் ஓடுகையில் மந்தமறி என்னும் ஆட்டுக்குட்டி எதிரே வந்தது. ''நானும் உங்களுடன் வருகிறேன்,'' என்று சொல்லித் தானும் அவைகளுடன் ஓடிற்று.

இவை நான்கும் ஓடும் போது நெடுஞ்செவியன் என்ற ஒரு குழி முயல் அவைகளைப் பார்த்து, ''ஏன் இவ்வாறு தலை தெறிக்க ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டது. பதில் கூறுவதற்குள் அங்கு அதிவேகன் என்ற ஒரு முயலும் வந்தது. அதுவும் அவர்களைப் பார்த்து, ''ஓ நீங்கள் ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டது.


அதற்குக் குறும்பு வாத்து, ''இங்கே, என் முதுகின் மேல் பார்; வானம் உடைந்து அதில் ஒருதுண்டு என் மேல் விழுந்துகிடக்கிறது. நாங்கள் எல்லாரும் எங்கேயாவது போய் உயிர்தப்பிக் கொள்ளலாம் என்று ஓடுகிறோம், க்வாக், க்வாக்'' என்று சொல்லிற்று. அச்சமயம் 'மடமட' வென்று இடி இடிப்பது கேட்டது. அதைக்கேட்ட அதிவேகன், ''ஆம், நீங்கள் சொல்வது சரிதான், எனக்குங்கூட வானம் உடைகிற சத்தம் கேட்கிறது; வாருங்கள், வாருங்கள் எல்லாரும் ஓடிப் போகலாம். அதோ அந்த மலைக்கு ஓடினால்தான் நாம் உயிர்தப்பிப் பிழைக்கலாம்; அங்கே பெரிய கற்களும், பாறைகளும் உண்டு'' என்றது. எல்லாம் அலறிக்கொண்டு ஓடின.

குள்ளநரி ஒன்று அவ்வழியே வந்தது. அந்தச் சமயத்தில் காற்று மிகவும் பலமாக அடித்தது. 'மடமட, 'தடதட'வென்று இடி இடித்தது. வானம் மேகங்களால் இருண்டது. நரி அவைகளிடம் போய், ''எல்லாரும் எங்கே ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டது. குறும்பு வாத்து, ''ஐயோ நரியாரே, வானம் இடிந்து எங்கள் மேல் விழப் போகிறது. உயிர் தப்புவதற்கு நாங்கள் ஓடிப்போகிறோம்'' என்று சொன்னது. அதற்குக் குள்ள நரி ''இதற்காக நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. இந்தப் பெரிய பாறையின் கீழ் என்னுடைய வளை இருக்கிறது. எல்லாரும் ஒருவர்பின் ஒருவராக வந்தீர்களானால் நன்றாக இருக்கும். நான் அங்கே உங்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுவேன். எல்லாரும் மிகவும் பத்திரமாக இருக்கலாம். வானம் வெளியே உடைந்து விழுந்தாலும், வளைக்கு உள்ளே இருக்கும் உங்கள் மேல் விழாது. வாருங்கள், வாருங்கள், எல்லாரும் உள்ளே போகலாம்'' என்றது.

எல்லாம் இணங்கின. குள்ள நரிக்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இன்று நல்ல வேட்டை கிடைத்தது.'' என்று சொல்லித் தானும் உள்ளே சென்றது.

இவற்றையெல்லாம் பக்கத்தில் ஒரு மரத்தின் மேலிருந்த மகாமந்தி யென்னும் குரங்கு பார்த்துக் கொண்டேயிருந்தது. ''ஐயோ பாவம்! குள்ள நரி எல்லாவற்றையும் ஒரு நிமிஷத்தில் கொன்று தின்றுவிடுமே'' என்று பயந்து, விரைவாக நரி வளையண்டை ஓடிவந்தது. நரி வளையின் வாசலில் கல்லையும் மணலையும் வாரி இறைத்தது. தான் வைத்திருந்த ஏக்காளத்தை எடுத்து ஊதினது. இந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் உள்ளே இருந்த பிராணிகள், ''ஐயோ, வானம் இடிந்து விழுகிறது; வானம் இங்கேயும் இடிந்து விழுகிறதே!'' என்று நடுங்கின. திருட்டு நரிக்கும் திகில் ஏற்பட்டது. மற்றப் பிராணிகளை ஒரு பக்கத்தில் தள்ளி விட்டு, தன் வளையின் மற்றொரு வாசல் வழியாக வெளியே ஓட ஆரம்பித்தது. இதையறிந்த மகாமந்தி, ''குள்ளநரியே வெளியே வா'' என்று கூவிற்று, ''அதிவேகன், நெடுஞ்செவியன், மந்தமறி, குறுங்கோழி, வீர வாத்து, குறும்பு வாத்து எல்லாம் வெளியே வாருங்கள்'' என்றது. உடனே எல்லாம் வரிசையாக வெளியே வந்து நின்றன.

நரி, தான் செய்த வஞ்சகத்திற்காக மகாமந்தி தன்னைத் தண்டித்து விடுமென்று பயந்து, தரையில் விழுந்து பணிந்தது.



"மகாமந்தி, ''இந்த முறை உன்னை மன்னிக்கிறேன்; ஓடிப்போ'' என்று சொல்லித் தன் எக்காளத்தை எடுத்து ஊதவே, நரி திரும்பிப் பார்க்காமல் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது.

மகாமந்தி அவை நரி வளைக்குள் புகுந்த காரணத்தைக் கேட்டது. உடனே குறும்பு வாத்து, ''வானம் இடிந்து என்மேல் விழுந்துவிடும் என்று என் தாயார் சொன்னார்கள். அப்படியே வானம் இடிந்து என்மேல் விழுந்து விட்டது. உடனே உயிர்தப்ப ஓடி வந்தேன். இவர்கள் என் பின்னே ஓடிவந்தனர். என் முதுகின் மேல் பாரும்; உடைந்த வானத்துண்டு இருக்கிறது'' என்றது.

மகாமந்தி அதைப்பார்த்து, ''ஆம், ஆம், நீ சொல்வது சரிதான். வானம் இங்கே இருக்கிறது! வாருங்கள்; என் பிரிய நண்பரே, பாருங்கள்'' என்று சொல்லி, குறும்பு வாத்துக்குஞ்சின் மேலிருந்ததை எடுத்து உயர்த்திக் காண்பித்தது. குறும்பு வாத்துக்குஞ்சு அதை நன்றாகப் பார்த்துவிட்டு, ''ஐயோ, இது ஒருசிறு இலையல்லவா'' என்று தன் முட்டாள் தனத்தை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தது. ''இந்தச் சிறு இலைக்குப் பயந்து நரி வலைக்குள் புகுந்தீர்களே!'' என்று சொல்லிச் சிரித்தது மகாமந்தி.

அது ஒரு சிறுகோலை எடுத்து, அந்த இலையை ஒரு கொடிபோல் கட்டித்தன் குட்டிக்குரங்கை அழைத்து, அதனிடம் கொடுத்து, ''குட்டிக் குரங்கே உனக்கு இங்குள்ள எல்லாத் தோட்டங்களும் நன்றாய்த் தெரியுமல்லவா? இவர்களை நீ அழைத்துக் கொண்டு போய் அருகே உள்ள தாய் வாத்துத் தோட்டத்தில் பத்திரமாகச்சேர்'' என்று சொல்லி எக்காளம் ஊதிற்று.

முதலில் குட்டிக்குரங்கு கொடி பிடித்துக் கொண்டு போனது. இரண்டாவதாக குறும்பு வாத்துக்குஞ்சும், மூன்றாவதாக வீர வாத்தும், நான்காவதாக குறுங்கோழியும், ஐந்தாவதாக மந்தமறியும், ஆறாவதாக நெடுஞ்செவியனும், ஏழாவதாக அதிகவேகனும் வரிசையாகச் சென்றன. மகாமந்தி கடைசியில் எக்காளம் ஊதிக்கொண்டே சென்றது.

குறும்பு வாத்துக்குஞ்சு ஆசையுடன் தாயிடம் ஓடிற்று. தாய் வாத்து அதைப் பார்த்ததும் கோபத்தோடு, ''நீ இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்? வாத்துத்தோட்ட முழுவதும் தேடினேனே! வானந்தான் உன்மேல் இடிந்து விழவேண்டும்'' என்றது.

''வானம் என்மேல் விழாது. இலைதான் விழும்'' என்றது குறும்பு வாத்து. எல்லாம் சிரித்தன.



கேளுங்கள் சொல்லப்படும்!

* கு. நவீன், காரைக்கால்.

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராக விரும்புகிறேன். விண்ணப் பப் படிவத்தை அனுப்பித் தரவும்.

கோகுலம் சிறுவர் சங்கம் இப்பொழுது இயங்குவதில்லை தம்பி. பல வேறு காரணங் களால் இது நிறுத்தப்பட்டது. 1989 செப் டம்பர் இதழில் இதைப் பற்றி, தலையங்கத் தில் கூட எழுதப்பட்டுள்ளதே?

* ஜி. ஜெயராமன், விழுப்புரம்.

கோகுலம் மாதம் இருமுறையாகும் நாள் வருமா?

பொறுத்திருங்கள். காலம் வரும் போது நிறைவேறும்.

* குமரேசன், சாத்தூர்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா வின் நாவல் 'பர்மா ரமணி' கோகுலத்தில் தான் தொடராக வந்தது என்கிறேன் நான். 'இல்லை' என்கிறான் என் நண்பன், எது சரி?

உன் நண்பன் விஷயம் தெரிந்தவன். பர்மா ரமணி 'கல்கி'யில்தான் தொடராக வந்தது. அப்பொழுது கோகுலம் பிறக்கவில்லை.

* ப. கண்ணம்மாள், புளியம்பட்டி.

பெரியவர்களுக்காக எழுதிப் புகழ் பெற்ற அமரர் அகிலன், குழந்தைகளுக்காக வும் எழுதியிருக்கிறாராமே? உண் மையா?

அகிலன் மட்டுமா? இன்று பெரியவர் களுக்காக எழுதிப் பெரும் புகழ் படைத் துள்ள எழுத்தாளர்கள் அனைவருமே குழந் தைகளுக்காகவும் எழுதியுள்ளனர். அகிலன் குழந்தைகளுக்காக எழுதிய படைப்புகள் 'கல்கி'யில் தொடராக வெளிவந்துள்ளன. அவை நூலாகி, அரசினர் பரிசும் பெற் றுள்ளன. 'குழந்தை இலக்கிய முன்னோடி' கள் வரிசையில் அகிலனின் படைப்பும் இடம் பெறும். பொறுத்திருங்கள்.

* தமிழ் மணிமாறன், சத்தியவேடு.

பொருளடக்கத்தில் தரப்படும் பக்க எண்கள் சரியாக இல்லையே! என்ன கார ணம்? விளம்புங்கள்!

விளம்பரம் படுத்தும் பாடுதான்! பொறுத் துக் கொள்ளுங்கள்.

* வ. காசிநாதன், தம்மம்பட்டி.

'கோகுலத்'தில் பேனா நண்பர்கள் பக் கத்தைத் தொடங்கலாகாதா?

சிறிது பொறுத்திருங்கள்.

* கு. வரதம்மாள், திருநெல்வேலி.

கவியோகி சுத்தானந்த பாரதியார் குழந் தைகளுக்காக எழுதியிருக்கிறாரா?

எழுதியிருக்கிறார்.

* எம். ராஜாமணி, சிதம்பரம்.

குழந்தைக் கவிஞர் சினிமாவில் பாடல் கள் எழுதியிருக்கிறாரா?

பலர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டும் அவர் எழுத மறுத்து வந்தார். ஆனாலும் நட்புக்காக அவர் எழுத வேண்டிய கட்டா யம் ஏற்பட்டதால், தட்ட முடியாது எழுதி னார்.

வா ராஜா வா, போர்ட்டர் கந்தன் ஆகிய இரு திரைப்படங்களில் அவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவை அவரது கவிதைத் தொகுப்பில் இல்லை.

கேள்வி கேட்போர் தங்கள் முழு முகவரியையும் எழுத வேண்டும்.



திருமணமாம் திருமணம்!

வைவஸ்ராய் இர்வின் பிரபு தம்முடைய உதவியாளரைத் திகைப்போடு நோக்கினார்.

''ஸ்ட்ரபோர்டு இன்னொரு முறை அழைப்பிதழைப் படியுங்களேன்?''

ஸ்ட்ரபோர்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினார்.

'ஜூனகாட் இளவரசரும் இளவரசியும் விடுக்கும் திருமண அழைப்பிதழ். இளவரசது அன்புக்குரிய பட்டத்து வேட்டைநாய் பைரவாவுக்கும் நாய்களின் தலைமைப் பேரழகி பைரவிக்கும் ஜூனாகாட் அரசவை மண்டபத்தில் நடக்கவுள்ள திருமணத்திற்கும், அதற்குப் பிறகு நடைபெறவுள்ள வரவேற்பு விருந்துக்கும் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ முன்னதாகவே வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம். மணமக்களுக்குப் பரிசளிக்க விரும்புவோர் முன்னதாகவே இளவரசரின் உதவியாளரிடம் அனுமதி பெற வேண்டும். முன் அனுமதி பெறாமல் புகைப்படம் எடுக்க யாருக்கும் உரிமை இல்லை. வாழ்த்துத் தந்திகளை ஜூனாகாட் அரண்மனைக்கு அனுப்பலாம்.

படித்துமுடித்தஸ்ட்ரபோர்டுவைஸ்ராயைப் பார்த்தார். இர்வின் பிரபு அழைப்பிதழை வாங்கி முன்னும் பின்னும் பார்த்தார். புதுமையான அந்த அழைப்பிதழ், முழுக்க முழுக்க தந்தத்தால் செய்த விலை மதிப்புமிக்க அட்டையில், பொன் எழுத்துக்களில் அச்சிடப்பட்டு, மருக்கொழுந்துமணம்தடவப்பட்டிருந்தது.

'எவ்வளவு அற்புதமான நறுமணம்!' என்று வியந்து கொண்டார் இந்தியாவின் மாட்சிமிகு வைஸ்ராய். அழைப்பிதழைத் தொட்டதால், அவரது விரல்களெல்லாம் மணத்தன.

'இந்த நறுமணத்தை விரும்பாதவர்கள் யாருமே இருக்க முடியாது' என்று தனது விரல்களையும் முகர்ந்து கொண்டார் உதவியாளர் ஸ்ட்ரபோர்டு.

'வைஸ்ராய் பிரபுவுக்கு வந்துள்ள

ஹரிசிங்

தைப் போலவே இன்னோர் அழைப் பிதழ். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தின் சக்கரவர்த்தி அவர்களுக்கும் வந் துள்ளது' என்று அந்த இன்னோர் அழைப்பிதழை அளித்தார் உதவி யாளர் ஸ்ட்ர்ாபோர்டு.

''என்னுடைய வாழ்நாளில் இப்



படி ஒரு திருமணம் நடப்பதை இது வரை நான் கேள்விப்பட்டது கூட இல்லை! இந்தியா புதுமைகள் நிறைந்த விநோதமான நாடு என்று நண்பர்கள் கூறினார்கள். ஆனால் இந்த மாதிரிக் கோமாளித்தனங்கள் நடப்பதைப்பற்றியாருமேகுறிப்பிட்ட இல்லை.'' என்று கூறிய வைஸ்ராய் இர்வின் பிரபு, மணம் வீசிய விரல்களை மீண்டும் மீண்டும் முகர்ந்து மகிழ்ந்தார்.

''ஜூனாகாட் இளவரசர் நாய்களிடம் தனி அன்புடையவர். அவைகளை நேசிப்பதில் அவருக்கு இணையான இன்னொருவரை இந்த உலகத்தில் காண முடியாது பிரபு.''

தம் உதவியாளரை இர்வின் பிரபு கேள்விக் குறியோடு பார்த்தார்.

''நான் கூறுவது உண்மைதான் பிரபு. அவரிடம் ஒன்றல்ல இரண்டல்ல... எண்ணூறு அருமையான நாய்கள் உள்ளன. உலகத்தின் தலைசிறந்த ஜாதி வகை நாய்கள் எல்லாம் அவரிடம் உள்ளன.''

''உண்மையாகவா?''

''ஆம், பிரபு. ஒவ்வொரு நாய்க்கும் எல்லாவிதமான வசதிகளும் கொண்ட தனித்தனி அறை தந்திருக்கிறார். அந்த அறையில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனித் தொலைபேசி வசதி கூட உண்டு.''

''நம்ப முடியவில்லையே!''

''ஆனால் இவை எல்லாம் உண்மை பிரபு. இந்த நாய்களின் வசதிகளைப் பார்த்துப் பார்த்துச் செய்ய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி





ஞாயிற்றுக் கிழமை வந்தாலே கஷ்டமாக இருக்கு.

பள்ளிக்கூடம் லீவுதானே?

லீவுதான். மறுநாள் திங்கள் கிழமை பள்ளிக்குப் போகணுமே!

— நல்லாலம் காசிதாசன்.

யாக வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். இந்த எண்ணூறு அருமையான நாய்களின் உடல்நலனையும் கண்ணும் கருத்துமாகக் கவனிக்க, லண்டனிலிருந்து வந்த கால்நடை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நாய்களுக்கு என்று தனியாக, முழுக்க முழுக்கப் பளிங்குக் கற்களால் ஆன ஓர் அழகான மருத்துவமனை கூட இருக்கிறது, பிரபு!''

''கொடுத்து வைத்த நாய்கள் தான்!'' — இர்வின் பிரபு சிரித்தார்.

''எல்லாவற்றையும் விட அதிசயம் என்ன தெரியுமா பிரபு? இந்த எண்ணூறு நாய்களின் பெயரையும் இளவரசர் நினைவில் வைத்துக் கொண்டு அழைப்பார். இந்த நாய்களில் ஏதாவது ஒன்று இறந்து விட்டால், முழு அரசாங்க மரியாதைகளுடன் நல்லடக்கம் நடைபெறும். ஒரு வாரம் வரை அரசு துக்கம் கொண்டாடும்.''

''ஆமாம் ஸ்ட்ராபோர்டு, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று பெருவியப்போடு கேட்டார் இர்வின் பிரபு.

''இந்தியாவில் சிங்கங்கள் வாழும் புகழ்பெற்ற கிர்நார் காடுகள் ஜூனாகாட் இளவரசரின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிதான். சிங்கங்களைப் பார்ப்பதற்காக நான் என் குடும்பத்தோடு போனேன் இளவரசரின் விருந்தினராகத் தங்கினேன். அப்பொழுதுதான் இதையெல்லாம் நேரில் கண்டேன்'' என்று கூறிய உதவியாளர், ''பிரபு, அழைப்பிதழ்களை நேரில் எடுத்து வந்துள்ள இளவரசரின் உதவியாளர் உங்கள் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்'' என்றார்.

வைஸ்ராய் இர்வின் பிரபுவின் முகம் இறுகிக் கடுமையானது

''இந்திய மன்னர்களின் ஆட்சிப் பொறுப்பை நாம் எடுத்துக் கொண்டுவிட்டோம். அதனால் அவர்கள் எந்தவிதமான பிரச்னைகளும் இல்லாது, நாம் வழங்கும் ஏராளமான உதவித் தொகையை வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் ஊதாரித்தனமாகச் செலவு செய்து பொழுதைப் போக்குகிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனமான திருமணத்தில் நான் கலந்து கொண்டால், இலண்டனில் என்னை எள்ளி நகைப்பார்கள். நான் போகப் போவதில்லை. வந்துள்ள தூதருக்கு இதைத் தெரிவித்து விடுங்கள்.''

''அப்படியானால், ஒரு வாழ்த்துச் செய்தியையாவது அனுப்பி வைக்கலாமா, பிரபு?''

''அதற்குக் கூட இந்தத் திருமண நிகழ்ச்சி அருகதை அற்றது.'' என்று பதிலளித்த வைஸ்ராய் ''ஸ்ட்ராபோர்ட், இந்தப் பைத்தியக்காரத் திருமணத்திற்கு நீங்கள் உட்பட நமது அலுவலகத்தில் இருந்து யாரும் கண்டிப்பாகப் போகக் கூடாது. இது என் உத்தரவு. இதை நமது பணியாளர்களுக்கும் தெரிவித்து விடுங்கள்'' என்றார் உறுதியாக.

''பிரபு, மன்னரவர்களுக்கு வந்துள்ள அழைப்பிதழை என்ன செய்வது?'' என்று பணிவாகக் கேட்டார் ஸ்ட்ராபோர்டு.

''லண்டனுக்கு அனுப்பி வையுங்கள். எனக்கு வந்துள்ள இந்த அழைப்பிதழை ஒரு பேழையில் வைத்து, ஒரு சிறு விளக்கக் குறிப்பும் எழுதி, பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி விடுங்கள்.'' என்று எழுந்து சென்றார் இர்வின் பிரபு.

சிப்பை ஒளித்து வைத்தால் திருமணமா நின்றுவிடும்? வைஸ்ராய் இர்வின் பிரபு கலந்து கொள்ள மறுத்தால் என்ன? பைரவாவுக்கும், பைரவிக்கும் நிச்சயித்த திருமணம் தடபுடலாக நடந்தது. பக்கத்து சமஸ்தான மன்னர்களும், சிறப்பு விருந்தினர்களும் குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாகவே தலைநகருக்கு வந்து திரண்டனர். அவர்களைக் கவனிக்க மன்னர் தனியாக ஒரு வரவேற்புப் பிரிவு அலுவலகத்தையே அமைத்திருந்தார். அவர்களைக் கவனித்து உபசரிக்க ஆடம்பரமான அரண்மனைகள் ஒதுக்கப்பட்டன. அவர்களது தேவைகளைக் கவனித்துக் கொள்ளத் தனி பணியாட்கள் அமர்த்தப்பட்டனர். விருந்து, கேளிக்கைகள், கலை நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முந்திய நாளே மணமகன் பைரவா பக்கத்து ஊருக்கு அனுப்பப்பட்டது. விலை மதிப்பில்லா ஃபாரின் ஷாம்பு போட்டு அதைக் குளிப்பாட்டினார்கள். தங்க இழைகளால் பூவேலை செய்யப்பட்டு, வைரக் கற்களும், முத்து, பவளங்கள் பதிக்கப்பட்ட வெல்வெட் அங்கி அதற்கு அணிவிக்கப்பட்டது. மிடுக்கான சீருடை அணிந்த நூற்றுக்கணக்கான வேலைக்காரர்கள் பைரவாவை அழைத்துக் கொண்டு ரயிலில் வந்து இறங்கினர்.

ரயிலும் ரயில் நிலையமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. வாணவெடிகள் வெடிக்க, பாண்டு இசை முழங்க, மன்னரும் சிறப்பு விருந்தினர்களும் வரவேற்க, பைரவா ரயிலை விட்டுக் கீழே இறங்கியது. விலை மிக்க அழகான இரத்தினக் கம்பள விரிப்பில் நடந்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்தது பைரவா. பட்டத்து யானைகள் முழு அலங்காரத்தோடு நின்றன! இருநூற்றைம்பது நாய்கள், வெண்பட்டும், வைர மாலையும், சுட்டியும், ஜிமிக்கியும் அணிந்து பைரவாவை வரவேற்றன! பீரங்கிகள் முழங்கின. அணிவகுப்பு மரியாதையை ஏற்று, பாண்டு வாத்தியம் இசைக்க பைரவா பெருமிதத்துடன் நடந்தது.

நாய்களின் தலைமைப் பேரழகியான மணமகள் பைரவி மணமகன் பைரவாவுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவளில்லை என்பதைக் காட்டிக் கொண்டிருந்தாள். அதை, விலைமிக்க பாரீஸ் நறுமண ஷாம்புவில் குளிப்பாட்டி, அகில் புகையூட்டி உலர வைத்து, பாரீஸ் 'சென்ட்' போட்டு வாரினார்கள். தங்க இழைகளால் கண்களைக் கவரும் வண்ணம் பூவேலை செய்த அழகான மேலங்கியை முதுகில் அணிவித்தார்கள். கழுத்தில் வைரப் பதக்கம், நெற்றியில் வைரச்சுட்டி, காதுகளில் தொங்கட்டான்கள், கால்களில் 'கிணுகிணுக்'க்கும் வெள்ளிச் சலங்கை அணிவிக்கப்பட்டது. தங்கத்தாலும், வெள்ளியாலும், முத்து பவளங்களாலும் அலங்கரிக்கப்பட்ட தங்கப்பல்லக்கை எடுத்து வந்தார்கள். பைரவி அதில் ஏறி நன்கு அமர்ந்து கொண்டது.

வெண்பனிச் சீருடை அணிந்த பணியாட்கள் 'டோலி' பாடிக் கொண்டு பல்லக்கைத் தூக்கினார்கள். உருவிப் பிடித்த வாட்களோடு மெய்க்காப்பாளர்கள் மிடுக்கு நடை



● சாதாரணமாக ஆடுகள் நடப்பதை, ஓடுவதைப் பார்த்திருக்கிறோம்! ஆனால்... மரமேறும் ஆடுகள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 'மொராக்கோ'வில் உள்ள ஆடுகள் மரமேறுவதில் தேர்ந்தவையாம்! அதுமட்டுமல்ல, இவை குரங்குகள் போல ஒரு மரத்தினின்று மற்றொரு மரத்திற்குத் தாவும் குணாதிசயம் கொண்டவை. இந்த ஆடுகள் இம்மரத்தின் இலைகளை விரும்பி உண்ணுமாம்! வியப்புத் தரும் 'மொராக்கோ' ஆடுகள்!

— மொரப்பூர் அ. நவ்சாத்.

போட, பல்லக்குப் புறப்பட்டது. வண்டி வண்டியாக மலர் தூவினார்கள். இசைவாணர்கள் பாட, நடனப் பெண்கள் ஆடியபடி கோலாட்டம் போட்டு வர, மணமகள் பைரவியின் தந்தப் பல்லக்கு அரச மண்டபத்திற்கு வந்து இறங்கியது.

இளவரசர் தமது அரச இருக்கையில் இருந்து அமர்ந்தபடி மணவிழாவைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார்.

மணமக்களின் கால் நகங்களுக்குத் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிக் கவசம் அணிவிக்கப்பட்டது. வைரம் இழைத்த பொன்னாலான கிரீடங்கள் மணமக்களுக்கு அணிவிக்கப்பட்டு, ஊஞ்சலில் வைத்து ஆட்டப்பட்டு, மணமேடைக்கு அழைத்து வரப்பட்டனர். திருமணம் குறிப்பிட்ட நேரத்தில் இனிது நடைபெற்றது. தங்க ஆசனத்தில் மணமக்கள் அமர்ந்தனர்.

அரசவைக் கவிஞர்கள், மணமக்களைக் கவிதைகளால் வாழ்த்தி மகிழ்ந்து பரிசு பெற்றனர். பிறகு, அனுமதி பெற்றிருந்த 'சிற்றரசர்களும், சிறப்பு விருந்தினர்களும் மணமக்களுக்குப் பரிசளித்தனர். எழுபத்திரண்டு வகை இனிப்புகளோடு விருந்து பரிமாறப்பட்டது.

இதில் குறிப்பிடத்தக்கது என்ன தெரியுமா? மணிக்கணக்காக நடைபெற்ற இந்த விழா நிகழ்ச்சிகளின் பொழுது மணமகளோ, மணமகனோ ஒரு முறைகூட 'வள்'ளென்று குரைக்காததுதான்!

பொன்மொழிகள் இங்கே சொன்னவர்கள் எங்கே?–போட்டி

செய்தித்தாள்களைப் படிக்கும் போதும், அறிஞர்களின் பேச்சைக் கேட்கும் போதும் சில பழமொழிகள், பொன்மொழிகளைத் திரும்பத் திரும்பக் கேட்கிறோம். இப்படி நமக்கு நன்கு பழக்கமான சில பழமொழிகள், பொன் மொழிகள், பாடல் வரிகள் கீழே தரப்பட்டுள்ளன. இவை யாரால் கூறப்பட்டவை என்பதை, எண்களை எழுதிப் பெயரை மட்டும் குறிப்பிடுங்கள். கூப்பன் அவசியம் வர வேண்டும். பரிசு கண்டிப்பாக உண்டு.

1. உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்கள்
2. தனிமரம் தோப்பாகாது
3. நல்ல புத்தகம்; நல்ல நண்பன்
4. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்
5. தட்டுங்கள் திறக்கப்படும்
6. கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்
7. சாதி இரண்டொழிய வேறில்லை
8. ஒன்றே குலம்; ஒருவனே தேவன்
9. எழுமின்! விழிமின்!
10. இன்குலாப் ஜிந்தாபாத்!
11. ஜெய்ஹிந்த்!
13. செய்; அல்லது செத்து மடி
13. யாதும் ஊரே; யாவரும் கேளிர்!
14. வாய்மையே வெல்லும்
15. நம்பிக்கை உண்டெனில் வெற்றி உண்டு!
16. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்
17. தமிழுக்கு அமுதென்று பேர்
18. பொய்மை இகழ்!
19. தங்கத்தைவிட உயர்ந்தது உண்மையே!
20. நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!

சொன்னவர்கள் எங்கே?
போட்டி

பெயர்:. . . . .

முகவரி:. . . . .

. . . .

. . . .

. . . .

பின்கோடு: . . . .

முடிவு தேதி 16.4.91



நீயே போதும்!

ரங்கனுக்கு அவனது வகுப்பு ஆசிரியர் ஓய்வு பெற்றுச் செல்வது வருத்தமாகத்தான் இருந்தது. வரப் போகும் புதிய ஆசிரியர் எப்படி இருப்பாரோ? ரொம்பக் கண்டிப்பானவரோ, அடி உதை குட்டுதல், கிள்ளுதல் என்று மாணவர்களைத் தண்டிப்பதிலேயே சந்தோஷம் அடைபவரோ, அல்லது அன்பால் மாணவர்களைக் கவரக் கூடியவரோ என்று சிந்திக்கத் தொடங்கினான் ரங்கன். இரண்டு நாட்கள் கழித்து வரப் போவதாகச் சொல்லப்பட்ட ஆசிரியர் அன்றே வந்து விட்டார்; பாடம் நடத்தவும் தொடங்கி விட்டார்.

"உங்களைப் பற்றி, உங்கள் குடும்பத்தைப் பற்றி, உங்கள் ஊரைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதை ஒவ்வொருவராகச் சொல்ல ஆரம்பித்தால் ஒரு வாரம் கூட ஆகலாம். எனவே 'என் கிராமம், என் குடும்பம்' என்ற தலைப்பில் சுருக்கமாக நான்கைந்து பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதுங்கள். அதைப் படிக்கும் போது உங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் ஊர், குடும்பம் பற்றியும் நன்கு தெரிந்து கொள்வேன்" என்று வந்ததுமே ஒரு கட்டுரை எழுதச் சொல்லி விட்டார் புது ஆசிரியர்.

மாணவர்களுக்கு ரொம்ப குஷி. தெரியாத கேள்வியைக் கேட்டுப் பதில் தெரியாமல் விழிப்பதை விட, தெரிந்த விஷயத்தைப் பற்றி எழுதத் தானே சொல்கிறார்? தாராளமாக எழுதிப் பிய்த்து உதறி விடலாம் என்று கட்டுரையை எழுதத் தொடங்கினர். இந்த விஷயத்தில் ஒருவரைப் பார்த்து மற்றவர் காப்பியடிக்க வேண்டிய அவசியமும் இல்லை. காப்பியடித்தாலும் பளிச்சென்று தெரிந்து விடும் அபாயமும் உண்டு.

அந்த ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள். அந்த சுற்று வட்டாரத்தில், பத்துப் பன்னிரண்டு குக் கிராமங்களில் தொடக்கப் பள்ளிக்கூடம் கிடையாது. எனவே, அந்த வகுப்பில் பல ஊர்ச் சிறுவர்கள் நிறைந்திருந்தனர். பொருளாதார நிலையிலும் பலதரப்பட்டவர்கள் அந்த மாணவர்கள். மிராசுதாரின் பிள்ளைகளும் உண்டு. அன்றாடங்காய்ச்சிகளான கூலிக்காரர்களின் பிள்ளைகளும் உண்டு.

தி. நரசிம்மன்




"எங்க விட்டு நாய் கத்தவே கத்தாது."

"ஏன்?"

"அதுதான் கல்கத்தா நாயாச்சே!"

— ஆர். மூர்த்தி.




"பையனை ஏன் மண்ணெண்ணெய் ஊற்றிக் குளிக்க வைக்கிறீங்க?"

"அவன் மிகவும் 'துருதுரு'வென்று இருக்கான்!"

— ஏ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.

"உங்க அப்பா பெரிய டாக்டரா இருக்கலாம். அதுக்காக நீ ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சுவரி...ன்னு சொல்றதெல்லாம் நல்லா இல்லே!"

— சீர்காழி. வி. ரேவதி.



இறைவனின் முன்பு அனைவரும் சமம் என்பது போல், கல்வியின் முன், பள்ளியிலும் அனைவரும் சமம் என்ற உணர்வு மகிழ்வைத் தந்தது. பள்ளியில் மட்டும்தான். மிராசுதார் பையனும், கூலிக்காரன் பையனும் அருகருகே அமர்ந்து பேசிப் பழக முடியும். அந்தஸ்தையும் வசதியையும் காட்ட வழியின்றி சீருடை அந்த சமரச உணர்வை ஊட்டியது.

குறிப்பிட்ட நேரம் முடிந்ததும் எழுதப்பட்ட கட்டுரை நோட்டுக்களை வகுப்பு மாணவர் தலைவன் ஆசிரியரிடம் ஒப்படைத்தான். ஆசிரியர் அப்போதே ஒவ்வொரு நோட்டாக எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டார்.

முதல் நோட்டே ரங்கனின் நோட்டாக அமைந்து விட்டது. "எனது கிராமம் சிறிய கிராமம். பள்ளிக்கூடமோ, மருத்துவமனையோ, அஞ்சலகமோ, ரயில் நிலையமோ, பஸ் போக்குவரத்தோ கிடையாது. குடி தண்ணீர் வசதி கூட இல்லாத கிராமம். மின்சாரமும் கிடையாது. ரோடு வசதி இல்லை. வானம் பார்த்த பூமி என்பதால், புன்செய் பயிர்கள் தான் விளையும். எனக்குத் தாய் இல்லை. தந்தை மட்டும்தான். அவரும் கூடப் படிக்காதவர்தான்" என்று உள்ள நிலையை மறைக்காமல் எழுதியிருந்தான்.

ஆசிரியர் நகரத்தில் படித்து வளர்ந்து பணியின் காரணமாக கிராமத்துக்கு வந்தவர். ரங்கனின் கட்டுரையைப் பார்த்து அதிர்ந்து போய் விட்டார். இந்தியா சுதந்திரம் அடைந்து நாற்பது வருடங்களுக்கு மேலாகியும் கிராமங்களில் இன்னும் படிப்பறிவில்லாத ஜனங்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை நிலை அவரைக் கலங்க வைத்தது.

ரங்கனை அழைத்தார்.

"ரங்கா, உண்மையை மறைக்காது நீ எழுதியது குறித்து சந்தோஷப்படுகிறேன். உன் தந்தைக்குக் கல்வி அறிவில்லையென்று நீயே சொல்லிக் கொண்டு சும்மா இருந்தால் எப்படி? அவருக்குக் கல்வியறிவு ஊட்ட என் போன்ற ஆசிரியர்கள்தான் வர வேண்டும் என்பது இல்லை. அவரை



எழுதப் படிக்க வைக்க உனக்குள்ள கல்வியறிவே போதுமானது. அவருக்கு ஓய்ந்த நேரத்தில் நீயே எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாமே? படிப்பு என்றால், நிறையப் படித்து பட்டம் பதவி பெறுவது மட்டும்தான் படிப்பு என்றில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும். மற்றவர்களுக்குக் கடிதம் எழுத, தனக்கு வந்த கடிதத்தைப் படிக்க, கையெழுத்துப் போட வேண்டிய நேரங்களில் ரேகை பதிக்காமல் கையெழுத்துப் போட, செய்தித்தாள்களைப் படிக்கத் தெரிந்திருந்தாலே போதுமே" என்று ஆசிரியர் அறிவுரை சொன்ன போது ரங்கன் மகிழ்ந்து போனான். தனக்கு இவ்வளவு நாட்களாக ஏன் இந்த எண்ணம் தோன்றவில்லை என்று வருத்தப்பட்டான்.

அன்றே தன் தந்தைக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது என்று முடிவு செய்து கொண்டான் ரங்கன். அதை அவரிடமும் சொன்னான்.

"நன்றாயிருக்கிறதே கதை! இனிமேல் நான் படித்து வேலைக்கா போகப் போகிறேன்? எழுதப் படிக்கத் தெரியா விட்டால் என்ன? அனுபவ அறிவு இருக்கிறதே. அது போதும். இந்த வயதில் படிக்க ஆரம்பித்தால் ஊர்தான் என்னைப் பற்றி என்ன நினைக்கும்?" என்று மறுத்தார்.

"அப்பா, உங்களுக்கு அனுபவ அறிவு இருக்கிறது என்பது உண்மைதான். அதோடு கூட எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் இன்னும் நல்லது தானே? ஊரைப் பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள். படிக்காவிட்டால் கைநாட்டு என்று கேலி பேசும். படித்து விட்டாலோ, அவனை மட்டந்தட்ட நினைத்து 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான். எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்'. 'மெத்தப் படித்தவன் சுத்த முட்டாள்'. 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது' என்று பழமொழியெல்லாம் பேசி வேண்டுமென்றே அவர்களைத் தாழ்த்தி, தாங்கள் படிக்காததை நியாயப்படுத்திக் கொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வார்கள். அதனால் ஊர் என்ன நினைக்கும் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் உங்களுடைய நன்மைக்காக எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளுங்கள் அப்பா" என்று ஒருவழியாகச் சமாதானப் படுத்தி அவனுடைய சிலேட்டிலேயே ஆனா, ஆவன்னா எழுதக் கற்றுக் கொடுத்தான். தான் படிக்கவில்லையே என்ற ஏக்கம் மனதுக்குள் இருந்ததால் அவர் வெகு விரைவில் முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு பாடப் புத்தகங்களை எழுத்துக் கூட்டிப் படிக்குமளவுக்கு முன்னேறி விட்டார்! அடுத்த சில மாதங்களில் கையெழுத்துப் போட மட்டுமல்ல, கடிதம் எழுதக்கூடிய அளவுக்கு எழுதவும் கற்று விட்டார்!

இந்த விஷயம் ஊருக்குத் தெரியாது. ஒரு நாள் அடுத்த வீட்டுக்காரர் தனக்கு வந்த கடிதத்தைப் படிக்கத் தெரியாமல், தபால்காரரையே படித்துக் காட்டச் சொல்லிக் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"இன்னிக்கு கடிதங்கள் ஏராளமா இருக்கு. எல்லாத்தையும் நேரத்தோட பட்டுவாடா பண்ணியாகணும்.

எனக்கு நேரமில்லே'' என்று அவர் கைவிரித்து விட்டுப் போய் விட்டார்.

''கடிதத்தை இங்கே கொடுங்க. நான் படித்துச் சொல்கிறேன்'' என்று ரங்கனின் தந்தை கடிதத்தைக் கேட்க, அவர் கொடுக்க மறுத்தார்.

''இவரு பெரிசா படிச்சுக் கிழிச் சாரு. நீயும் என்னை மாதிரித் தற்குறி தானே...? என்று கேலி பேசினார்.

''கடிதத்தைக் கொடுங்கள். படித்துக் காட்டுகிறேனா இல்லையா என்று பார்த்து விட்டு அப்புறம் பேசுங்கள்'' என்று கடிதத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார் ரங்கனின் தந்தை.

ரங்கனின் தந்தை படிக்கப் படிக்க அவர்களுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். காண்பது கனவா, நிஜமா என்று உடம்பைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்கள்.

"நேற்று வரை படிக்கத் தெரியாத நீ இன்னிக்குக் கடிதத்தை மடமடன்னு தட்டுத் தடங்கலில்லாம படிக்கிறியே?'' காளிதாசர் நாக்கில் காளி யாத்தா எழுத்தாணியால எழுதின மாதிரி உன் நாக்கிலயும் எழுதிட்டாளா?" என்று வியந்து மாய்ந்து போனார்கள்.

''காளி வந்து நாக்கிலே எழுதலே. என் பையன் ரங்கன்தான் சிலேட்டில எழுதிக் கத்துக் கொடுத்தான். ஆறு மாசத்துக்கு மேலாச்சு. இப்ப நான் பேப்பர் கூடப் படிக்கிறேன்.''

''அவனுக்கு எப்படி இந்த யோசனை வந்திச்சாம்...?''

''அவனுக்கா அந்த யோசனை வரலை. அவங்க வாத்தியார்தான் அவனுக்கு இந்த யோசனையைச் சொன்னாராம்...'' என்று விளக்கினார் ரங்கனின் தந்தை.

ரங்கனை எங்களுக்கும் எழுதப் படிக்க கத்துக் கொடுக்கச் சொல்லுங்களேன்...''

''ரங்கன் மாட்டேன்னு சொல்ல மாட்டான். ஆனா, உங்க வீட்டிலேயும் பள்ளிக்குப் போய்ப் படிக்கிற பசங்க இருக்காங்களே. அவங்களையே கத்துக் கொடுக்கச் சொன்னா போதுமே? உங்களுக்கும் சௌகரியமா இருக்கும். அதை ஏன் யோசிக்க மாட்டேங்கிறீங்க...''

''அதுவும் நல்ல யோசனைதான். அப்ப வந்திருக்கிற புது வாத்தியார் பசங்களுக்கு மட்டும் வாத்தியாரில்ல. ஊருக்கே வாத்தியார்னு சொல்லுங்க...''

''மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் விவரங்களைச் சேகரிக்க வந்த போது அந்தக் கிராமத்தில் படிக்கத் தெரியாதவர்கள் ஒருவர் கூட இல்லை என்பதை அறிந்த போது திகைத்துப் போயினர்!

ஆண்டுக்கு 13 மாதங்கள்


* ஓர் ஆண்டிற்கு 12 மாதங்கள் என்பது உலக நியதி. இது அனைவருக்கும் தெரியும். ஆனால் எத்தியோப்பியாவில் மட்டும் இது கிடையாது. ஓர் ஆண்டுக்கு 13 மாதங்கள். 30 நாட்கள் கொண்ட 12 மாதங்களும், 5 நாட்கள் கொண்ட 13வது மாதமும் வழக்கத்தில் உள்ளன. லீப் வருடத்தில் அந்த 13வது மாதத்திற்கு 6 நாட்கள்.

— ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

"கைகள் தொங்கட்டும்"

* அலெக்சாந்தர் தான் இறந்த பின்னர் தன் உடலைத் தூக்கிச் செல்கையில் தன் கைகள் இரண்டையும் தொங்குமாறு செய்த பிறகே தூக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த உலகத்திற்கு வரும் போது எதுவும் கொண்டு வரவில்லை இந்த உலகை விட்டுப் போகும் போதும் எதையும் கொண்டு போக வில்லை என்பதை உலகம் அறியவே இந்த ஏற்பாடு என்று விளக்கினாராம்.


— ஏ. ஜலீல் சாகுல் ஹமீது, சென்னை.






சீர்காழி வி.ரேவதி

சிரிப்...



சங்கமங்கலம் - பாலகிருஷ்ணன்ஜி





தக்கோலம் அ. முஸ்தபா

வீட்டின் சொந்தக்காரர்!



ஓர் ஊரில் கோபால் என்பவன் இருந்தான். அவன் யாருடைய வம்புக்கும் போக மாட்டான். சிறந்த அறிவாளி.

அவன் ஒரு மாடி வீட்டின் குடியிருந்தான். மாடி வீட்டின் கீழ்ப்புறத்தில் அவனும், மேல்புறத்தில் ரமேஷ் என்பவனும் குடியிருந்தனர்.

ரமேஷுக்கு, கோபாலைப் பார்த்தாலே பிடிக்காது.

ஒருநாள், ரமேஷின் மனைவி, மாடியில் உரலில் மாவு இடித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சத்தம் கீழ் வீட்டிலிருந்த கோபாலுக்குப் பெருத்த தொந்திரவாக இருந்தது. அதோடு கோபாலுக்கு அன்று உடம்பு வேறு சரியில்லை. எனவே, அவன் மாடி வீட்டிற்குச் சென்று ரமேஷிடம், அவன் மனைவியை மெதுவாக மாவு இடிக்குமாறு கேட்டுக் கொள்ளச் சொன்னான்.

உடனே ரமேஷ், "இந்த மாடி எங்களுடையது. இங்கே நாங்கள் எப்படி வேண்டுமானாலும் மாவு இடிப்போம்" என்று அகங்காரமாகச் சொன்னான்.

கோபாலும் மௌனமாகக் கீழே வந்து விட்டான்.

மறுநாள், கோபால் கீழே தன்னுடைய வீட்டைக் கடப்பாரையால் இடித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ட ரமேஷ் அதிர்ந்தான்.

"கோபால் என்ன வேலை செய்கிறாய்...?" என்று பதற்றத்துடன் கேட்டான்.

உடனே கோபால் அமைதியாக, "இது என்னுடைய வீடு. என்னுடைய வீட்டை முற்றிலும் இடித்து விட்டுப் புதியதாகக் கட்டப் போகிறேன்" என்றான்.

"என்ன கோபால் உளர்றே! நீ கீழ் வீட்டை இடிச்சா மேல் வீடும் கீழே விழுந்து விடுமே...?" — ரமேஷ் எரிச்சலுடன் கேட்டான்.

"அதைப் பற்றி எனக்குக் கவலை கிடையாது. கீழ் வீடு என்னுடையது. அதை நான் இடிப்பேன். என்ன வேண்டுமோ செய்வேன். அதில் தலையிட உனக்கு உரிமை கிடையாது.." என்றான் கோபால்.

உடனே அதிர்ச்சியடைந்த ரமேஷ், கோபாலிடம் மன்னிப்புக் கேட்டான்.

"கோபால் என்னை மன்னித்து விடு. நாமிருவரும் சமாதானமாகப் போகலாம். இனி நாம் நண்பர்கள்" என்றான்.

"நான் என்றைக்கும் உன் நண்பன்தான்" என்று கோபாலும் மகிழ்ச்சியுடன் கூறினான்.

— எஸ். குருமூர்த்தி,
காட்டாங்குளத்தூர்

கழுதையும் புகையிலையும்!



அக்பரின் அவையில் இருந்த பீர்பல் சிறந்த அறிவாளி. பீர்பலிடம் புகையிலை போடும் வழக்கம் உண்டு. அக்பர், ஒரு கழுதையை, புகையிலைச் செடியின் அருகே நிறுத்தும்படி பணியாளிடம் கட்டளை இட்டார். பின்னர் உலாவுவதற்காகப் பீர்பலைக் கூட்டி வந்து கழுதையைக் காட்டி, "பார்த்தீரா! கழுதை கூடப் புகையிலையை விரும்பவில்லை!" என்று அவருக்கு மறைமுகமாக அறிவுரை கூறினார். உடனே பீர்பல், "கழுதைகள் தாம் புகையிலையை விரும்பாது" என்று பதிலடி கொடுத்தார். அக்பர் இவர் கூற்றைக் கேட்டு மகிழ்ந்தார்

— எம். ஆனந்தன், வந்தவாசி.



அன்பின் பங்கு

“ஸ்வீட்டி’’ என்ன செய்தாலும் அழகாகாயிருக்கும். படுத்திருக்கும் பொழுதும் சரி, எழுந்து நின்று முன்னும் பின்னும் ஆடி, சோம்பல் முறிக்கும் பொழுதும் சரி, நடை போடும் போதும் சரி, ஓடும் பொழுதும் சரி, அருகில் வந்து வாலை ஆட்டி, உச்சி முகந்து கொஞ்சும் பொழுதும் சரி, பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.

மிஸ்டர் வில்சன் அலுவலகத்திற்குப் புறப்படு முன்னர், ஒரு பத்து நிமிடமாவது அதனுடன் கொஞ்சாமல் இருக்க மாட்டார்.

அது போலவே, வீடு திரும்பியதும் அவரை முதலில் வரவேற்பதும் ஸ்வீட்டியாகத்தான் இருக்கும். அவருடன் கொஞ்சி ஓடியாடி விளையாடு

எஸ். அருண்

வதும் அதுதான். அந்தப் பதினைந்து நிமிடங்களில் அவர் தனக்கு ஐம்பத்திரண்டு வயது என்பதையே மறந்து சிறு குழந்தை போல் அத்துடன் ஓடியாடிக் களிப்பார்.

வில்சனுக்குக் குடும்பம் எதுவும் கிடையாது. வீட்டில் அவரைத் தவிர ஸ்வீட்டி, வேலையாள் முனுசாமி மட்டுமே. காலையிலும், மாலையிலும் ஸ்வீட்டிக்கு வில்சனே உணவு தருவார். மற்ற வேளைகளில் அந்த நாய்க் குட்டியைக் கவனிக்கும் பொறுப்பு முனுசாமிக்கு.

காலையில் ஸ்வீட்டி கார் வரை சென்று எஜமானனை வழி அனுப்பி வைக்கும். மாலையானதும் போர்டிகோவின் மேல் ஏறிக் கொண்டு ஆவலாக வில்சனின் வருகைக்காகக் காத்திருக்கும். அவரது கார் வரும் சத்தம் தூரத்தில் கேட்கும் போதே அது அடையாளம் கண்டு குரைக்கத் தொடங்கி விடும். கார் போர்டிக்கோவுக்குள் வந்தவுடன் ஸ்வீட்டி அப்படியே கார் முன் லாவகமாகத் தாவி, அவர் காரிலிருந்து இறங்க இறங்க, அவர் மீது தாவித் தாவி அவரை உச்சிமுகந்து பார்க்கும்.

அதைக் கைகளால் தழுவிப் பிடித்துத் தட்டித் தடவிக் கொண்டே வரவேற்பு அறைக்குள் நுழையும். அவர் தனது கோட்டைக் கழற்றி மாட்டும் வரை கூட அது பொறுமையாக இருக்காது! வில்சனைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து கொஞ்சும்! அதனை அப்படியே அணைத்து, மயிர் கோதி, உச்சி முகர்ந்து, முத்தமிட்டு, நான்கு பிஸ்கட்டுகள் அதற்குத் தந்து அவரும் அதனுடன் குழையக் குழைய விளையாடிய பிறகுதான் அது அவரை விடும். பின்னர் அதை முனுசாமியிடம் கொடுத்து விட்டு, உடை மாற்றிக் கொண்டு மற்ற வேலைகளைக் கவனிக்கச் செல்வார்.

ஒரு நாள் வில்சன் வீடு திரும்பும் பொழுது அருமையான ஒரு பூனைக் குட்டியுடன் வந்தார். பொன் நிறமும், வெண்மையும் பரவி நின்ற அந்தப் பூனைக் குட்டிக்கு அடர்த்தியான வால். வாலே பார்க்க நேர்த்தியாக இருந்தது. அதன் நிறமும் பட்டுப் போன்ற அடர்த்தியான உரோமம் நிறைந்த உடலும் கண்டவரைத் தொட்டுத் தடவிக் கொடுக்கச் சொல்லும்!

அந்தப் பூனையின் பெயர் மில்கி. அதைக் கட்டி அணைத்தவாறே காரை விட்டு இறங்கிய வில்சனைக் கண்டதும், ஸ்வீட்டிக்கு்கசீரென்றிருந்தது!

இருந்தாலும் ஒரு கணத்தில் அது சமாளித்துக் கொண்டு வாலை ஆட்டி ஆட்டி அவர் மீது தாவிக் குதித்தது. ஆனால், மில்கி பயந்து நடுங்கி, அவருடனேயே ஒட்டிக் கொண்டது. ஸ்வீட்டி அவரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் வரை, அவரிடமிருந்து இறங்க மறுத்து விட்டது மில்கி! நாள் ஆக ஆக ஸ்வீட்டி நெருங்கி வந்து பழகினாலும், மில்கி பயந்து கொண்டு, எங்காவது தாவி, ஏதாவது அலமாரி அல்லது பீரோவின் மேல் போய் உட்கார்ந்து கொள்ளும். வில்சன் படிக்கும்பொழுதோ, எழுதிக் கொண்டிருக்கும்பொழுதோ, அவர் மடி மேல் போய்ப் படுத்துக் கொள்ளும்.

வில்சன் வீட்டிலிருக்கும் நேரம் முழுவதிலும், அவருடனேயே மில்கி இருந்து வந்தபொழுதிலும், காலையிலும், மாலையிலும் பத்து நிமிடங்களாவது அவர் ஸ்வீட்டியுடன் கொஞ்சுவது மில்கிக்குப் பிடிக்கவில்லை. தான் மிகவும் அழகு என்ற கர்வம் ஏற்கெனவே அதற்குண்டு. அதோடு வீட்டுக்கு வருகின்றவர்கள் வேறு அதனைத் தடவித் தந்து கொஞ்சுவதும், பாராட்டுவதும் மில்கியின் கர்வத்தை அதிகரித்து விட்டது.

வில்சனின் அன்பு முழுவதும் தனக்கே சொந்தமானது என்றும், அதில் பங்கு கொள்ள ஸ்வீட்டிக்கு உரிமை இல்லை என்றும் கூட மில்கி நினைக்கத் தொடங்கியது!

பாவம் பூனைக் குட்டி! அதற்கு நினைக்கத்தான் தெரிந்ததேயொழிய நினைத்ததை செயல்படுத்த வழி தெரியவில்லை. சோபாவின் மேல் வாலைச் சுருட்டிக் கொண்டு, ஸ்வீட்டியும், எஜமானனும் விளையாடுவதை வேடிக்கைப் பார்க்கத் தான் முடிந்தது. ஸ்வீட்டி அருகில்

செல்லவே மில்கி பயப்பட்டது! இருந்தாலும் ஏதாவது செய்து ஸ்வீட்டியைச் சீண்ட வேண்டும் என்று யோசித்துக் கொண்டே இருந்தது.

முனுசாமிதான் நாய்க்கும் பூனைக்கும் உணவு கொண்டு வைத்து விட்டுச் செல்வான். ஸ்வீட்டிக்கு இறைச்சித் துண்டுகள், ரொட்டி, பால் வைப்பான். மில்கிக்குப் பால் மாத்திரம். ஆனால், பாலின் அளவு வயிறு புடைக்கக் குடிக்கும் அளவுக்கு இருக்கும்.

ஒரு நாள் தனக்கு வைத்திருந்த பால் முழுவதையும் குடித்து விட்டு, ஸ்வீட்டிக்கு வைத்திருந்த பால் பாத்திரத்தை எதேச்சையாகத் தட்டிக் கவிழ்த்து விட்டு ஓடி விட்டது மில்கி! எலும்புத் துண்டுகளைச் சுவைத்துச் சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்த ஸ்வீட்டி, பால் வழிந்து ஓடுவதைக் கண்டு திகைத்தது!

தரையில் கொட்டி ஓடும் பாலைக் குடிப்பதை வில்சன் கண்டால் கோபித்துக் கொள்வார். அசுத்தம் என்பதே அவருக்குப் பிடிக்காது. அதனால், செய்வதறியாமல் எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு தோட்டத்துக்கு ஓடி விட்டது ஸ்வீட்டி!

முதலில் எதேச்சையாகச் செய்த பால் கொட்டலை மில்கி வேண்டுமென்றே தினமும் செய்யத் தொடங்கியது! தினமும் பால் கொட்டிக் கவிழ்க்கப்படுவதைக் கண்ட முனுசாமி உண்மையை உணராது ஸ்வீட்டிக்குப் பால் வைப்பதையே நிறுத்தி விட்டான். எஜமானிடமும் சொல்லி வைத்தான். பால் கிடைக்கவில்லையே என்று ஸ்வீட்டி வருத்தப்பட்டாலும், அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. மில்கி வேண்டுமென்றே செய்யும் குறும்பு என்பதும் அதற்குத் தெரியும்!

சில நாட்களில் எஜமானே தன் கையால் உணவு அளிக்கும் பொழுது மில்கி எதுவுமே செய்யாது! அதே போல் இரண்டும் உணவருந்தும் பொழுது, முனுசாமி பார்த்துக் கொண்டே நின்றிருந்தாலும் மில்கி எதுவும் செய்யாது. கருமமே கண்ணாகி, தனக்கு வைத்திருந்த பாலை அருந்திச் சென்று விடும். மில்கி!

முனுசாமியின் தலை மறைந்ததும், பாலைத் தட்டிக் கவிழ்த்து விட்டு ஓடி விடும்!

ஸ்வீட்டி வேறு வழி கண்டுபிடித்



தது. அதன்படி, முதலில் பாலை அருந்தி விட்டுப் பின்னர் எலும்பைச் சுவைக்க சென்றது! ஆனால், அது அவ்வாறு நினைத்த நாளிலிருந்து, ஸ்வீட்டிக்குப் பால் வைத்து வீணாக்குவதில்லை என்று முனுசாமி முடிவு செய்து விட்டான். நினைத்ததை செயல்படுத்த முடியவில்லையே என்று ஸ்வீட்டி வருந்திற்று. இருந்தாலும் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை ஸ்வீட்டி.

ஸ்வீட்டியை விட முனுசாமிக்கு அதிக வருத்தம். அநியாயமாக அதற்குத் தர வேண்டிய பாலை மறுத்து வருகிறோமே என்று அவன் சங்கடப்பட்டான். நாலைந்து நாட்களுக்குப் பின்னர் மீண்டும் முனுசாமி ஸ்வீட்டிக்குப் பால் வைத்தான். ஆசையுடன் பால் வைத்த முனுசாமி, வேறு வேலையாக அந்தப் பக்கம் நகர்ந்ததுதான் தாமதம், மில்கி பால் பாத்திரத்தைத் தட்டிக் கவிழ்த்து விட்டுத் தனக்கு வைத்திருந்த பாலைச் சாப்பிடுவதில் மும்முரமாக ஈடுபட்டது!

ஸ்வீட்டிக்கு ஆத்திரமாக வந்தது. சுவைத்துக் கொண்டிருந்த எலும்புத் துண்டைப் போட்டு விட்டு, மில்கியின் பாலையே அதுவும் குடிக்கப் புகுந்தது. அதனால், மில்கி பயந்து கொண்டு வீட்டுக்கு வெளியே ஓடியது. நாயும் அதனைத் துரத்திச் சென்றது. தன்னைக் கடிக்க ஸ்வீட்டி வருவதாக மில்கி பயந்து கொண்டு தலைதெறிக்க ஓடியது. ஓடிய வேகத்தில் தோட்டத்திலிருந்த கிணற்றுக்குள் மில்கி விழுந்து விட்டது! கிணற்றில் விழுந்த மில்கியின் அலறலைக் கேட்டு ஸ்வீட்டி துடியாகத் துடித்தது. கிணற்றைச் சுற்றி வந்து கூக்குரலிட்டுக் குரைத்தது ஸ்வீட்டி!

ஸ்வீட்டி குரைப்பது கேட்டு ஓடி வந்தான் முனுசாமி. முதலில் அவனுக்கு எதுவுமே புரியவில்லை. "மியாவ் மியாவ்" அலறல் கேட்கின்றது. ஆனால், எங்கிருந்து வருகின்றது என்பது தெரியவில்லை. ஸ்வீட்டியும் விக்கி விக்கிக் குரைத்துக் கொண்டிருந்தது. குரைத்துக் கொண்டிருந்த ஸ்வீட்டி, திடீரென்று கிணற்றுக்குள் குதித்தவுடன்தான் முனுசாமி கிணற்றை எட்டிப் பார்த்தான்.


தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த பூனைக் குட்டியை வாயில் கவ்வி, கரையிலிருந்த கிணற்றுச் சுவரின் சுற்றுப் பிடியை எட்டிப் பிடிக்க ஸ்வீட்டி முயன்று கொண்டிருந்தது! முனுசாமி ஓடோடிப் போய், நீளமான கயிறு ஒன்றையும், பெரிய கூடை ஒன்றும் கொண்டு வந்தான். கயிற்றில் கூடையைக் கட்டி கிணற்றுக்குள் இறக்கினான். கிணற்றுச் சுவற்றின் பிடி கிடைக்காமல் தடுமாறிக் கொண்டிருந்த ஸ்வீட்டி, வாயில் கவ்விக் கொண்டிருந்த மில்கியுடன் கூடைக்குள் ஏறிக் கொண்டது.

முனுசாமி கூடையை மேலே இழுத்தான். கூடை மேலே வந்தது. தண்ணீரில் நனைந்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த மில்கியை ஸ்வீட்டி நக்கி, நக்கிக் குளிர் போக்கியது! ஸ்வீட்டியின் பெருந்தன்மைக்கு முன்னால் மில்கியின் சுயநலம் போன இடம் தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் ஸ்வீட்டியின் அன்பைப் பெற்றுக் கொள்வதிலேயே மில்கி குறியாக இருக்கிறது!

"அந்தப் படத்துல குரங்கு பிய்த்து உதறியிருக்காமே...?"

"அது கையில பூமாலையைக் கொடுத்தால் வேறு என்ன செய்யும், சொல்லு?"


— சீர்காழி. வி. ரேவதி.



"இந்தப் புதுச் சட்டை பொங்கலுக்கு எடுத்ததா?"

"இல்லை! எனக்கு எடுத்தது!"

— எம். ஆனந்தன், வந்தவாசி.



முட்டாள் ராஜா



பிருந்தாவனக் கதையரங்கம்

சிவபுரியை ஆண்ட சிவசேனன் சரியான முட்டாள் ராஜா. அவருக்கு எவ்விதமான அறிவும் கிடையாது. அர்த்தமில்லாமல் அடிக்கடி பல வேலைகளைச் செய்வார். அர்த்தமில்லாமல் பேசுவார். இதனால் மக்கள் அவரை ''முட்டாள் ராஜா'' என்று அழைத்தனர்.

ஒரு நாள் அரசவையில் அனைவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு பெண் அழுது கொண்டே, ''அரசே! நேற்று என் கணவர், குப்புசாமி என்பவரின் வீட்டில் திருடச் சென்றார். அவர் சுவரை உடைக்கும் போது, சுவர் இடிந்து விழுந்து இறந்து விட்டார். ஈரச் சுவர் வைத்து என் புருஷன் சாகக் காரணமாயிருந்த குப்புசாமிக்குத் தக்க தண்டனை தரவேண்டும்என்று கேட்டாள்.

இதைக் கேட்ட ராஜா, ''யாரங்கே? போய் குப்புசாமியை அழைத்து வா என்று உத்தரவிட்டார்.

குப்புசாமி வந்தவுடன் ராஜா அவரைப் பார்த்து, ''நேற்று உன் வீட்டில் சுவர் இடிந்து ஒருவர் இறந்தாரா?'' என்று கேட்க

குப்புசாமி ஆமாம் என்று தலையாட்டியவுடன்,

''அப்படியானால் உனக்கு மரண தண்டனை அளிக்கிறேன்'' என்று கூறியவுடன்,

குப்புசாமி, ''அரசே, சுவர் இடிந்தது உண்மைதான். ஆனால் ஈரச்சுவர் கட்டியது நான் அல்ல. என் கொத்தனார். நீங்கள் அவருக்குத்தான் தண்டனைத் தர வேண்டும்.

இதைக் கேட்ட ராஜா, ''உண்மைதான், அழைத்து வா கொத்தனாரை'' என்று ஆணையிட்டார்.

கொத்தனார் தனக்கு தண்டனை எனத் தெரிந்தவுடன், ''ராஜா, ஈரச் சுவரை கட்டியது நான்தான். ஆனால் பானை பெரியதாக இருந்ததால் அதிகமாகத் தண்ணீர் கலக்கி விட்டேன். எனவே நீங்கள் பானை செய்தவனைத்தான் தண்டிக்க வேண்டும்.''

இதைக் கேட்ட ராஜா, நீ சொல்வது சரியே. பானை செய்தவனை அழைத்து வா,'' என மறுபடியும் ஆணையிட்டார்.

பானை செய்யும் தொழிலாளி, விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன், ''அரசே! நான் பானை செய்யும் போது என் எதிர் வீட்டில் ஒரு புலவர் அழகான தமிழ்ப் பாடல்களை பாடிக் கொண்டிருந்தார். அந்த இசையைக் கேட்டு மயங்கி, பானையைப் பெரியதாகச் செய்து விட்டேன். நீங்கள் அப்புலவரைத்தான் தண்டிக்க வேண்டும் என்றான்.

புலவரும் அவைக்கு அழைத்து வரப்பட்டார். அவையில் நடந்த விஷயம் அனைத்தும் கேள்விப்பட்ட புலவர், ''அரசே! நான்தான் குற்றவாளி. என்னையே தூக்கிலிடுங்கள்'' என்றார்.

அரசருக்கு ஆச்சரியம். அவர் புலவரை நோக்கி, ''புலவரே, அனைவரும் தண்டனையைப் பெறத் தயங்கும் போது நீங்கள் மட்டும், தயார் என்று கூறுகிறீர்களே'' என்றார்.

புத்திசாலியான அந்த புலவர், ''அரசே, நான் சாகக் காரணம் என்னவென்றால், இன்றைக்கு யார், தூக்கில் தொங்குகிறார்களோ, அவர்கள் அடுத்த ஜென்மத்தில் இதே நாட்டிற்கு அரசராக மாறுவர். எனவே நான் தயார் என்றேன்'' என பொய்யாகக் கூறியதும்,

இதைக் கேட்ட முட்டாள் ராஜா, ''என்ன, நான் இருக்கும்போது வேறொரு அரசரா?'' என்னையே தூக்கில் போடுங்கள் என்று கூற,

''எப்படா இவர் போவார், எனக் காத்திருந்த அமைச்சர்கள் ராஜாவைத் தூக்கில் போட்டு விட்டு, வேறொரு புத்திசாலியான அரசரை தேர்ந்தெடுத்தார்கள்.

— காவேரிப்பட்டணம் சோம. சேகர்.



கைகூப்பி வணங்கிடுவோம்

புதுவை மண்ணில் கவிதைக் கடலாய்
புரட்சிக் கவிஞர் பிறந்தாரே!
எதிலும் அழகின் சிரிப்பைக் கண்டு
ஏற்றம் பெற்றுச் சிறந்தாரே!

சுப்பு ரத்தினம் சுந்தரக் கவிதை
சுயமாய் எழுதுவான் என்று ஒருமுறை
செப்பிய பாரதி, உத்தர விட்டதும்
செய்தார் ரத்தினம் ஒரு கவிதை!

'எங்கெங்கு காணினும் சக்தி யடா!
ஏழுகடல் அவள் வண்ண மடா!
பொங்கிய கவிதை எங்கும் பரவப்
புகழ்மலைச் சிகரம் அவர் அடைந்தார்!


இரையினைத் தேடிப் புறப்படும் சிங்கமாய்
இருவழி ஒளிரும் நம் கவிஞர்
நரைமுடிக் காரரை இளம்புலி யாக்கிடும்
எரிமலைக் கவிதை பல ஈந்தார்.

பாரதி தாசன் பாடல்கள் பாடப்
பயந்து மறைந்தது மூடத்தனம்!
பாரதி தாசன் பாடல்கள் பாடப்
பலம் பெற்று எழுந்தது தமிழரினம்!

பாலர்கள் பயன்படப் பாடல்கள் தந்தார்
பாரதி தாசன்! பாவேந்தர்!
காலத்தை வெல்லும் கவிதைகள் போற்றிக்
கைகளைக் கூப்பி வணங்கிடுவோம்!

— டாக்டர் பூவண்ணன்.








விசித்திரப்பட்டணத்தில் மூன்று நண்பர்கள்...
ஏய் துஷ்ட புத்தி! ஏன் கோயில் சிலையை உடைக்கிறாய்?
மந்த புத்தி! துஷ்ட புத்தி! தர்ம புத்தி!
சும்மா கிடடா, மந்த புத்தி! படுத்துத் தூங்கத்தானே கோயிலுக்கு வந்தாய்...!
கதை: ஆனந்தி படம்: வினு
தர்மபுத்தி பிரார்த்தனையை முடித்துக் கொண்டான்...
பிள்ளையாரப்பா! என்றும் தர்மம் தவறாமல் நான் நடந்து கொள்ள வேண்டும். எங்கள் நட்பு எப்போதும் நீடிக்க வேண்டும்...
ஆனால் நட்புக்கு அடிக்கடி சோதனைகள் நேர்ந்தன...
நண்பனே! துஷ்டபுத்தி! கோயில் சிலையை உடைக்காதே! எந்த தர்மவான் கட்டிய கோயிலோ?
இத்தனை அழகான சிலையை நம்மால் உருவாக்க முடியுமா? அழிக்காமலாவது இருப்போமே...
அப்படித்தான் உடைப்பேன்! நீயார் கேட்க...?


ஒரு கதை சொல்லட்டுமா?
என்னால் கதை கேட்கக் கூட எழுந்து வர முடியாது; வேணுமானால் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து சொல்லு!
பொல்லாதவர் பற்றிய கதைன்னா தான் எனக்குப் பிடிக்கும்!
தர்மபுத்தி சொன்ன கதை...
இரு தூக்கணாங் குருவிகள் அழகாகக் கூடு கட்டின...
நீ முட்டைகளைப் பார்த்துக் கொள்; நான் இரை தேடி வருகிறேன்.
பெண் குருவி கவலையோடு...
மழை வரும் போலிருக்கே...
கவலைப் படாதே, நம் கூடு புயலைக் கூடத் தாங்கும்!
ஆண்குருவி சென்ற பின் மழை வந்துவிட்டது. ஒரு குரங்கு மழையில் நனைவதைத் தாய்க் குருவி பார்த்தது...
குரங்கே ஏன் மழையில் நனைகிறாய்...?
அப்படித்தான் நனைவேன், உனக்கென்ன...?
கைகள் இல்லாத நாங்கள் கூட வீடு கட்டிக் கொள்கிறோம். .. உனக்குக் கைகளிருந்தும் வீடு கட்டி வசிக்கத் தெரியவில்லையே; பாவம்...
துஷ்டக் குரங்குக்குக் கோபம் வந்தது...
எனக்கு வீடு கட்டத் தெரியாது; ஆனால் வீட்டை அழிக்கத் தெரியும்...



ஆண்குருவி திரும்பி வந்து ஆறுதல் கூறியது...
கவலைப் படாதே, வேறு வீடு கட்டிக் கொள்வோம். ..துஷ்டர்களைக் கண்டால் தூர விலகுவோம்...
கதை கேட்ட துஷ்டபுத்தி வருத்தத்துடன்....
அப்போ, நீயும் எங்களை விட்டு விலகிப் போயிடுவியா?
அதானே கேட்கிறேன்..
மாட்டேன்... உங்கள் அறிவையும் ஆற்றலையும் நல்ல காரியங்களுக்குப் பயன் படுத்தலாமே என்றுதான் சொல்கிறேன். குருவிக்கு இருக்கும் புத்தி நமக்கு வேண்டாமா? குரங்குபோல் நடந்து கொள்வதா?
ஆனாலும் நண்பர்கள் இருவருக்கும் நற்புத்தி வரவில்லை. நாளடைவில்...
கண்டபடி செலவு செய்து என் செல்வமெல்லாம் இழந்தேன்...
நானும் பலரிடம் ஏமாந்து ஏழையானேன்...
துஷ்டபுத்தியும் மந்தபுத்தியும் யோசனை கேட்க, தர்மபுத்தியிடம் சென்றனர்...
போனது போகட்டும்; வருந்தாதீர்கள். நாம் வெளி நாடுகளில் வியாபாரம் செய்து சம்பாதிப்போம்...



தன் பருத்தி வியாபாரத்தில் நண்பர்கள் இருவரையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டான் தர்ம புத்தி...
உங்கள் சார்பில் நானே நாறு, நூறு பொன் முதலீடு செய்கிறேன். கிடைக்கிற லாபத்தில் கழித்துக்கொள்வேன்.
நண்பர்கள் சந்தோஷமாகக் கப்பலேறினார்கள்...
அயல் நாட்டுத் துறைமுகப் பட்டினம் ஒன்றில்...
ஆகா! என்ன செல்வச் செழிப்பு! கொள்ளை - யடிக்கலாம் போலிருக்கு...
சத்திரம் ஏதாவது இருக்கா பாரு... சாப்பிட்டுத் தூங்கணும்!
தோழர்களே!... முதலில் வந்த காரியத்தைக் கவனிப்போம். அயல் நாட்டுக்கு வந்த இடத்தில் வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள்...


ஒரு சத்திரத்தில்...
நீங்கள் இருவரும் சற்று இளைப்பாறுங்கள்; கப்பலிலிருந்து பருத்தியை இறக்கி வியாபாரம் செய்து வருகிறேன்...
துஷ்டபுத்தியும் மந்தபுத்தியும் சம்மதித்தனர்...
நிறைய விலை சொல்லு!
கிடைத்த விலை போதும்; தள்ளி விட்டு வா, பசிக்கிறது!
பருத்திப் பொதிகளை வியாபாரியிடம் தர்ம புத்தி காட்ட...
நல்ல பஞ்சாக இருக்கிறது. விலையும் நியாயமாகச் சொல்கிறாய். எல்லாவற்றையும் நானே வாங்கிக் கொள்கிறேன்...
பலதேசங்களுக்குச் சென்று பல நகரங்களைப் பார்த்தனர்...
போகுமிடமெல்லாம் வியாபாரத்தையும் தொடர்ந்து, தர்மபுத்தி நிறைய சம்பாதித்தான்...
பாக்தாதிலிருந்து பேரீச்சம் பழம் கொண்டு வந்திருக்கேன், வேணுமா?
என்ன விலை?




மூவாயிரம் பொன் சேர்ந்ததும்... தர்மபுத்தி...
தலைக்கு ஆயிரம் பொன் எடுத்துக் கொள்ளலாம்...
சரி...
மந்தபுத்திக்கு ஊர் நினைவு வந்துவிட்டது...
சம்பாதித்தது போதும், ஊர் திரும்பலாம்...
தர்மபுத்தி எச்சரித்தான்...
ஊர் போய்ச் சேரும் வரை தினமும் ஒருவர் இரவில் கண்விழித்துக் காவல் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் சம்பாதித்ததெல்லாம் திருட்டுப் போய் விடும்.
ஓர் இரவு. அன்று மந்தபுத்தி காவல் இருக்க வேண்டிய முறை...
ஜாக்கிரதை! சத்திரத்தில் ஆள் நடமாட்டம் அதிகமாயிருக்கிறது!
நான் தூங்கவே மாட்டேன்!
ஆனால் மந்தபுத்திக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது...
தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தால் -தான் எல்லோருக்கும் என்னிடம் நிறையப் பணம் இருப்பதாக சந்தேகம் வரும். அடித்துப் பிடுங்கிக் கொள்வார்கள்.


மந்த புத்தி தூங்கிப் போனான்... ஒரு திருடன்...
மடையன்! நன்றாய்த் தூங்குகிறான். பண மூட்டையை உருவிக் கொள்கிறேன்...
காலையில் பணப்பையைக் காணாமல் புதறினான் மந்த புத்தி... துஷ்டபுத்திக்கு மகா கோபம்...
எங்கள் பங்கையும் சேர்த்துத் தொலைச்சிட்டியே! உன்னைக் கொன்றால் தான் என்ன!
துஷ்டபுத்தி, மந்தபுத்தி மீது பாய்ந்து, அடித்து நொறுக்கினான்...
ஐயோ! ஐயோ! அடிக்காதே!
தர்மபுத்தி சமாதானம் செய்தான்...
அமைதியாய் இருங்கள்... பணம் போனால் மறுபடி சம்பாதித்துக் கொள்ளலாம்; நட்பு அதைவிட முக்கியமானது.
துஷ்டபுத்திக்கு ஆறுதல் ஏற்படவில்லை...
ஐயோ! மூவாயிரம் பொன்னைப் பறி கொடுத்த பிறகு இப்படி பேசுகிறாயே! உனக்கு எப்படிதான் மனம் வருகிறதோ!


அப்போது தர்ம புத்தி...
கவலைப்படாதே! பணம் என்னிடம் பத்திரமாயிருக்கிறது. மந்த புத்தியை நம்பி பணப் பையைக் கொடுப்பேனா? அதில் இருந்தவை வெறும் பித்தளைக் காசுகள்!
மேலும் பல சாகசங்களைச் செய்து தர்ம புத்தி நண்பர்களைப் பத்திரமாக...
அதோ விசித்திரப் பட்டினம்! உங்களை ஒரு வழியாகக் கொண்டு வந்து சேர்த்து விட்டேன்!
ஊர் எல்லையில் ஒரு தோப்பு... தர்மபுத்தி...
நாம் இங்கேயே பங்கு பிரித்துக் கொள்ளலாம். நாளை கோயிலில் அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன்...
அப்போது துஷ்ட புத்தி...
இதோ பார்! நீ கோயில், தர்மம் என்று எல்லாப் பணத்தையும் செலவிட்டு விடுவாய். ஆளுக்கு நூறு பொன் மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியைப் பானையில் வைத்து இந்தத் தோப்பில் புதைத்து விடுவோம்!
மந்த புத்தியும் ஒத்துப் பாடினான்...
ஆமாம், பணம் இருப்பது தெரிந்தால் கடன் கேட்பார்கள், திருட்டுப் போனாலும் போய்விடும். நீ இந்த மரத்தடியில் குழி தோண்டு! நீ பானை வாங்கி வா!



பானையும் மண்வெட்டியும் வாங்கி வந்தான் தர்மபுத்தி...
உம்... நல்லா தோண்டுங்க...
ஆளுக்கு நூறு பொன் எடுத்துக் கொண்டு...
பாக்கிப் பொற்காசுகள் பானையில் இருக்கு... புதைச்சுடு...
இந்தா மூடி!
துஷ்ட புத்தி நோட்டம் விட்டான்...
ம்... இந்த மரத்தில் பெரிய பொந்து இருக்கு. அதுதான் அடையாளம். மறக்கக்கூடாது.
புதைத்த இடத்தில் புல் தூவினான் தர்மபுத்தி...
புல் வேர்விட்டு வளர்ந்துவிடும். யாருக்கும் தெரியாது.
மூவரும் கிளம்பி நடந்தார்கள்...
எங்கே புதைத்தோம் என்று மறந்துவிடுமே?
சீ! சும்மா இரு! நமக்கு மறந்தாலும் தர்மபுத்திக்கு மறக்காது.


ஊர்சேர்ந்ததும், மூவரும் பிரிந்து அவரவர் வீடு சென்றனர்...
போய் வரேன்!
நண்பர்களே! பணம் நம்மை ஆளவிடக்கூடாது; பணத்தை நாம் ஆளவேண்டும்... புரிகிறதா?
துஷ்டபுத்தி ஐந்தே நாட்களில் எல்லாப் பணத்தையும் செலவழித்து விட்டான்...
ஆகா, பணம் இருந்தா எவ்வளவு வசதி! குடைபிடிக்க ஆள்; வெற்றிலைப் பெட்டி தூக்க ஆள்; பட்டுப் பீதாம்பரங்கள்.
சீக்கிரமே நாலுபொன்னும் செலவழிந்து விட...
மந்தபுத்திக்குப் பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றே தெரியாது... தர்மபுத்தியோ எல்லாத்தையும் அன்னதானம் செய்தே கரைத்து விடுவான்...
...துஷ்டபுத்தி யாருமறியாமல் சென்று பானையைப் புதைத்த இடத்தை அடைந்து...
...நானே எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டு விடுகிறேன்... இதோ மரப்பொந்து அடையாளம்!
...குழிதோண்டி, பணமுடிப்பை எடுத்துக் கொண்டான்.
காலிப்பானையை மீண்டும் புதைத்து வைத்து விடுகிறேன்!


துஷ்டபுத்தியின் ஆடம்பர வாழ்க்கை தொடர, தர்ம புத்திக்குச் சந்தேகம்...
இப்படி டாம்பீகமாக வாழ்கிறானே..?
பெரிய ஜமீன்தார்னு நினைப்பு!
இப்படி ஆடம்பரமாக வாழ நாலுபொன் போதாதே! நாம் போய் மரத்தடியில் தோண்டிப் பார்க்கலாம்!
துஷ்ட புத்தியையும் அழைத்தனர்...
நான் ஏன் வரணும்?
மூவரும் சேர்ந்து புதைத்தோம். அதனால் மூவரும் சேர்ந்து தான் எடுக்கணும். எங்களுக்குக் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கு.
மரத்தடியில் தோண்டிய போது...
ஐயோ! பானை காலியா இருக்கே!
பொற்காசுகள் தானாக மறைந்துவிடாது... எடுத்தது யார்?
தர்ம புத்தி மீது பழி சுமத்தினான் துஷ்ட புத்தி...
எல்லாப் பொன்னையும் இவன்தான் எடுத்திருக்கிறான்! ஏண்டா, நம்பிக்கை துரோகம் பண்ணிட்டியே!


என் பங்கைக் கொடுத்துவிடு!
நான் இங்கே வரவே இல்லை!
பஞ்சாயத்தில் முறையிடலாம்!
மறுநாள் ஊர் பஞ்சாயத்து கூடி...
சாட்சிகள் உண்டா?
எனக்குத் தெய்வம்தான் சாட்சி!
எனக்கும் தான்!
நல்ல வேடிக்கை! தெய்வமே வந்து சாட்சி சொல்லுமா? சம்பவத்தை நேரில் பார்த்தவர் உண்டா? சொல்லுங்கள்!
நல்ல வேடிக்கை! ஏனய்யா, திருடன் சாட்சி வைத்துக் கொண்டா திருடுவான்...? எனக்கே தெரியற இந்த விஷயம் உமக்குத் தெரியலையே!
அப்போது துஷ்டபுத்தி...
எனக்குத் தெய்வம் சாட்சி சொல்லும்! நீங்களே வந்து மரத்தின் தேவதையைக் கேளுங்கள்!
ஆச்சரியமாயிருக்கே!


எல்லோரும் கிளம்பி, தோப்புக்குப் போனார்கள்... துஷ்டபுத்தி...
முதலில் மரத்துக்குப் பூஜை போடலாம்...
பூஜை முடிந்ததும் துஷ்டபுத்தி...
காய்க்குப் புளிப்பும் பழத்துக்கு இனிப்பும் தருகிற மாமர தேவதையே! பானையிலிருந்த பொருளை எடுத்தது யார்?
மரம் பதில் கூற, அனைவரும் ஆச்சரியத்தில் பிரமித்தனர்...
பொருளை எடுத்தவன் தர்மபுத்தியே!
ஆ!
துஷ்டபுத்தி...
என்ன பிரமித்துப் போய் விட்டீர்கள்! தர்மபுத்தியைப் பிடித்துக் கட்டுங்கள்! சிறையில் தள்ளுங்கள்!
தர்மபுத்தி பஞ்சாயத்து நீதிபதிகளை வணங்கி...
நான் எடுக்கவில்லை என்பது எனக்குத் தெரியும்...
தெய்வமே சொல்லிவிட்டதே, நீதான் குற்றவாளி என்று!



ஐயா, ஒருமுறை மரத்தை வலம் வர எனக்கு அனுமதி கொடுங்கள்!
சரி, தேவதையிடம் மன்னிப்பு வேண்டு!
சாமி பிராணித் தட்டைக் கையில் எடுத்துக்கொண்டான் தர்மபுத்தி... மரத்தின் பின்புறம் வந்தபோது...
ஆ! பெரிய பொந்து! இதில் தான் ஏதோ சூது!
தர்மபுத்தி, தணலை நன்றாக ஊதி, காய்ந்த சருகுகளை அள்ளிப் போட்டான்... நெருப்புடன் ஏராளப் புகை எழ...
புகையை அடிமரப் பொந்துக்குள் செலுத்து -கிறேன்...
துஷ்டபுத்தி, தர்மபுத்தியைத் தொடர்ந்து வர...
மரத்தின் தேவதையே! நான் பானைப் பொன்னை எடுத்தேனா, சொல்லு!
என்னடா நாடகம் ஆடுகிறாய்? சாமி, சும்மா சும்மா பேசுமா?
அப்போது பொந்திலிருந்து இருமல் சத்தம் கேட்க... பஞ்சாயத்துத் தலைவரும் வர...
சாமி பேசுதோ இல்லையோ, நிச்சயம் இருமுது!
லொக்! லொக்!
ஆச்சரியமா இருக்கே!


மரத்திலுள்ளிருந்து குரல்...
லொக்...லொக்... ஐயோ! லொக் லொக்...
அட, சாமி ஐயோன்னு அலறுதே!
பொந்துக்குள்ளிருந்து வெளிப்பட்டான் ஒருவன்...
கண்ணு எரியுது; மூச்சு அடைக்குது... புகையைத் தாங்க முடியலை...
நீதிபதிகள் அவனைப் பிடித்து...
யாருடா நீ? ஏன் இங்கே ஒளிந்தாய்?
ஒளிந்திருந்த ஆள், உண்மையை ஒப்புக் கொண்டான். துஷ்ட -புத்தியைச் சுட்டிக் காட்டி
இதோ, இவருதாங்க என்னை இங்கே ஒளிஞ்சிருந்து அப்படிப் பேசச் சொன்னாரு... முழுசா ஒரு பொற்காசு கொடுத்தாரு! தப்பானா மன்னிச்சுடுங்க!
நீதிபதி அப்போதே தீர்ப்பு வழங்கினார்...
துஷ்டபுத்திதான் எடுத்த பணத்தை அப்படியே தர்மபுத்தியிடம் தந்து விடவேண்டும். நம்மிடம் மன்னிப்புக் கோரிவிட்டு, ஒரு வருஷம் தலயாத்திரை போகவேண்டும்...


சொந்த ஊரிலிருந்து ஓராண்டுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட துஷ்ட புத்தி, தல யாத்திரை சென்றான்...
ஆண்டவனே! என்னை மன்னித்து விடு. நல்ல வனாக வாழ எனக்கு மன உறுதியைக் கொடு!
ஓராண்டுக்குப் பிறகு விசித்திரப் பட்டினத்துக்குத் திரும்பி வந்தான் துஷ்ட புத்தி...
தர்மபுத்தி என்னைத் தெரிகிறதா!
அடடே! வா வா!
தர்மபுத்தி, துஷ்ட புத்தியை உபசரித்தான்... அப்போது மந்த புத்தியும் வர...
நான் திருந்தி விட்டேன்...
தர்மபுத்தி தைரியம் சொன்னான்...
நண்பர்களே, உங்கள் பங்கு பொற்காசுகள் என்னிடம் பத்திரமாக இருக்கின்றன. நாம் மறுபடியும் சேர்ந்து உழைத்து, செல்வத்தை மேலும் பெருக்குவோம்!
மந்த புத்தி...
நானும் தூக்கத்தை விட்டு விட்டு உங்களுடன் சேர்ந்து உழைக்கப் போகிறேன்!
(முற்றும்)

மந்திரச் சங்கு



ஒரிசா கடற்கரை ஓரத்தில் ஒரு கிராமம். அங்கே மாது என்று ஓர் ஏழை இருந்தான். சூதுவாது அறியாதவன். உலகியல் அறியாதவன். எல்லோரையும் எளிதில் நம்பி விடுவான். ஆகவே, அவனை அசடு என்றும், ஏமாளி என்றும் ஊரார் அழைத்தனர்.

'மாது குணத்திலே தங்கக்கம்பி. ஆனால், அறிவிலே அரைகுறை,' என்று மக்கள் நினைத்தனர். ஆகவே, அவனுக்கு வேலையே கிடைக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக அவனுடைய மனைவி புத்திசாலியாக அமைந்தாள். அவள்தான் சிறுசிறு வேலைகளைச் செய்து, பணம் சம்பாதித்துக் குடும்பத்தைக் கவனித்தாள்.

ஒரு முறை மாதுவின் மனைவிக்கு நோய் கண்டது. அவள் படுத்த படுக்கை ஆனாள். அவளைக் கவனிப்பதும், மருந்து வாங்குவதும், குணப்படுத்துவதும் தன் கடமை என்று மாது உணர்ந்தான். அதற்குப் பணம் வேண்டுமே? அவன் கையில் ஒரு காசு கூட இருக்கவில்லை. எனவே, மாது வேலை தேடிப் போனான்.

''நீ ஓர் அசடு. உனக்கு யார் வேலை கொடுப்பார்கள்? போ, போ!'' என்று சொல்லி எல்லோரும் மாதுவை அலட்சியப்படுத்தினர். ஒருவரும் உதவி செய்யவில்லை.

அப்போது கடற்கரை மாளிகையில் அந்த நாட்டு அரசன் முகாமிட்டிருந்தான். அரசனைக் கண்டு காணிக்கைசெலுத்தவும்,தங்கள் குறைகளை முறையிடவும் மக்கள் கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தனர். மாதுவும் அவர்களுடன் போனான்.

தன்னுடைய முறை வந்த போது, மாது அரசனிடம் சென்று வணங்கினான். ''அரசே! நான் ஏழை. என் மனைவி நோயால் வருந்துகிறாள். அவளைக் குணப்படுத்த என்னிடம் காசு எதுவும் இல்லை. நீங்கள்தான் எனக்கு வேலை தந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்,'' என்று வேண்டினான்.

அந்த அரசன் பேராசை பிடித்தவன்; கொடுங்கோலன். அவனுக்கு மக்களிடமிருந்து நிறைய வரி வசூலிக்க மட்டும்தான் தெரியுமே தவிர, கொஞ்சமாவது அவர்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று எண்ணாதவன். ஆகவே,

மூலம்: ஒரிசா மாநிலப் பழங்கதைகள்
தமிழில்: வாமனன்

அவன் மாதுவை ஏளனமாகப் பார்த்தான். அதற்குள் சபையோர், "அரசே! இவன் ஓர் அசடு. ஏதேதோ உளறுகிறான்,' என்று சொல்லி, மாதுவைச் சபையிலிருந்து வெளியேற்றினர்.


அண்டை அயலாரும் உதவி செய்யவில்லை. அரசனும் உதவி செய்ய்வில்லை. மாது என்ன செய்வான்? மனம் உடைந்து போனான். "இவ்வளவு நாளும் அருமை மனைவி என்னைக் காப்பாற்றினாள். ஆனால், அவள் நோயால் கஷ்டப் படும்போது கூட என்னால் அவளைக் காப்பாற்ற முடியவில்லையே? ஒரு வேளை அவள் நோயால் இறந்து விடுவாளோ?" என்று எண்ணி மாது பயந்தான்.

வெறுங்கையோடு வீட்டுக்குச் சென்று, தன் கண் முன்னாலேயே மனைவி இறந்து போவதை அவன் பார்க்க விரும்பவில்லை. "மனைவி இறந்த பிறகு, நான் மட்டும் ஏன் தனியாக உயிர் வாழ வேண்டும்?" என்று அவன் நினைத்தான். கால்கள் அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றன. அங்கே மணலில் உட்கார்ந்து கொண்டு மாது மனம் விட்டு அழுதான்.

மாதுவின் அழுகை கடல் தேவதையின் காதுகளில் விழுந்தது. அவள் மாதுவின் மீது இரக்கம் கொண்டாள்.

அழுது கொண்டிருந்த மாது மெதுவாகத் தன் விழிகளைத் திறந்தான். தன் எதிரே நீல நிறத்தில் ஓர் அழகிய தேவதை நிற்பதைக் கண்டான். முத்துக்களும், பவழங்களும் பதித்த அணிகலன்கள் பளிச்சிடத் தேவதை வண்ண ஒளிப்பிழம்பாகக் காட்சி அளித்தாள்.

"கவலைப்படாதே மாது. கடலின் ஆழத்தில் என்னிடம் ஏராளமான செல்வங்கள் இருக்கின்றன. நீ நல்லவன். ஆகவே, உனக்கு உதவி செய்ய விரும்புகிறேன். இதோ, இந்தச் சங்கைப் பரிசாக வைத்துக் கொள். உனக்கு என்ன தேவையோ, இதனிடம் கேள். விரும்பியதை எல்லாம் இந்தச் சங்கு அளிக்கும்," என்று அந்தத் தேவதை சொன்னாள்.





"அரிசிக் கடைப் பையனை அடிச்சா எப்புடி அழுவான்?"
"'நொய், நொய்'னு!"

— ஏ. ஹரிகிருஷ்ணன், மேலப்பாளையம்.

மாது அந்த அழகிய சங்கைப் பெற்றுக் கொண்டான். நன்றியுடன் தேவதைக்குத் தலை வணங்கினான்.

வீட்டை அடைந்ததுமே, சங்கின் மாய சக்தியைச் சோதித்தான். "சங்கே! எனக்கு ஆயிரம் தங்கக் காசுகளைக் கொடு!" என்று கேட்டான்.

'கலகல'வென்ற சப்தத்தோடு ஆயிரம் தங்கக் காசுகள் தரையில் கொட்டிக் குவிந்தன. மாது சிறந்த மருத்துவர்களை வரவழைத்தான். தன் மனைவியைக் கவனிக்கச் செய்தான். அவளைக் குணப்படுத்தினான்.

மாதுவும் மனைவியும் சங்கின் உதவியால் செல்வந்தர் ஆயினர்.

தன்னை 'அசடு,' 'அரைகுறை' என்று கேலி செய்த ஊர் மக்களை அவன் வெறுக்கவில்லை. அன்போடும், இரக்கத்தோடும் நடந்து கொண்டான். ஏழை எளிய மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காகப் பணத்தை வாரி வழங்கினான். மாதுவிடம் உதவி கேட்டு வந்த யாருமே வெறுங்கையுடன் திரும்பவில்லை.

மாதுவின் புகழ் நாடு முழுவதும் பரவியது. அரசனின் காதுகளுக்கும் எட்டியது. "மாது திடீரென எப்படிப் பணக்காரன் ஆனான்," என்பதை அறிந்து வரத் தன் ஒற்றர் தலைவனை அனுப்பினான்.

ஒற்றர் தலைவன் மாதுவைச் சந்தித்து நயமாகப் பேசினான். வெகுளியான மாது, தேவதை தனக்கு ஓர் அபூர்வச் சங்கைக் கொடுத்ததையும், அதன் மூலம் செல்வம் சேர்ந்ததையும் விவரமாகச் சொன்னான். மாது அறியாமல் அவனிடமிருந்து அந்த மாயச் சங்கை ஒற்றர் தலைவன் திருடிச் சுயநலமே உருவான அரசனிடம் சேர்ப்பித்தான்.

சங்கைக்காணாமல்மாது வேதனையில் மூழ்கினான். அவனிடமிருந்த செல்வம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போயிற்று. அவனை நாடி வரும் நலிந்தவர்களுக்கு வழக்கம் போல் தன்னால் உதவி செய்ய முடியவில்லையே என்று மாது வருந்தினான்.


தனக்குச் சங்கைக் கொடுத்த தேவதையை எண்ணினான். கடற்கரைக்கு வந்து மனமுருகிப் பிரார்த்தனை செய்தான்.

அந்த நீலவண்ணக் கடல் தேவதை மீண்டும் மாதுவின் முன்பு தோன்றினாள். "மாது! தைரியமாக இரு. கவலைப்படாதே. இப்போது உனக்கு ஒரு பெரிய சங்கைத் தருகிறேன். இது ஒரு வாரம் பொறுத்துத் தன் சக்தியைக் காட்டும். ஆனால், ஒரு நிபந்தனை. இதை நீயே வைத்துக்கொள்ளக் கூடாது; இந்த நாட்டு அரசனுக்குப் பரிசாகக் கொடுத்துவிட வேண்டும். உன்னுடைய பழைய சின்னச் சங்கு அரசனிடம் இருக்கிறது. பதிலுக்கு அதைக் கேட்டு வாங்கிக் கொள். உன் பழைய சங்கு கிடைத்ததும், உடனே நீ இந்த நாட்டை விட்டுக் கிளம்பிவிட வேண்டும். நீயும் உன் மனைவியும், இந்த நாட்டு எல்லையைத் தாண்டி, அதற்கு அப்பால் போய்விட வேண்டும். வாழ்த்துக்கள்!" என்று தேவதை ஒரு பெரிய சங்கைக் கொடுத்துவிட்டு மறைந்தாள்.

மாதுவுக்கு எப்போதுமே சுயநலம் கிடையாது. மேலும், அவனுக்குத் தெய்வ பக்தி அதிகம். ஆகவே, கடல் தேவதை சொன்ன மாதிரியே அந்தப் பெரிய சங்கை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குப் போனான்.

அரசனுக்குக் காணிக்கையாக அதை அளித்தான்.

அரசன் சந்தோஷமாக மாது விரும்பியபடியே பழைய சங்கை அவனுக்குத் திருப்பிக் கொடுத்தான். மாது அரண்மனையிலிருந்து வேக





மாகப் புறப்பட்டான்.

ஒரு வாரம் ஓடியது. புதிய சங்கை எடுத்துக் கொண்டு பேராசைக்கார, கொடுமைக்கார அரசன் தன்னந் தனியாகப் பொக்கிஷ சாலைக்குப் போனான். அதை ஒரு மேடையில் வைத்தான். "ஓ, சங்கே! எனக்கு வெள்ளியைக் கொடு! தங்கத்தைக் கொடு!" விலை உயர்ந்த நவரத்தினங் களைக் கொடு!" என்று வேண்டி னான்.

வலுவான இரண்டு கைகள் திடீ ரெனச் சங்கிலிருந்து தோன்றின! அவை அரசனை அடிஅடியென்று அடித்து நொறுக்கின! அரசன் அதிர்ந்து, செய்வதறியாது, செயலி ழந்து கீழே விழுந்தான்.

"பேராசை பிடித்த அரசனே! ஏற் கெனவே உன் பொக்கிஷ சாலையில் ஏராளமாகச் செல்வம் குவிந்திருக் கிறது. இருந்தும் ஒரு சிறு துரும்பைக் கூட நீ மற்றவர்களுக்குத் தருவ தில்லை. அப்பாவி மாதுவின் சங்கை யும் அபகரித்துக் கொண்டாய். இனி யாவது மனம் திருந்து. இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தி அடை. பேராசைப்பட்டு அதிகமாகக் கேட்டால், அதிகமான உதைதான் விழும்! ஜாக்கிரதை!" என்று அந்தச் சங்கிலிருந்து வந்த ஓர் அசரீரி அரசனை எச்சரித்தது.

அடி வாங்கிய பிறகும், அரசனுக்கு அறிவு வரவில்லை. கோபம்தான் பொங்கிக் கொண்டு வந்தது. மாது வைக் கைது செய்து வருமாறு தன் வீரர்களை அனுப்பினான்.

மாதுவும், மனைவியும் அதற்குள் கொடுங்கோல் அரசனின் நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். வீரர் கள் ஏமாற்றமடைந்து திரும்பினர்.

அடுத்த நாட்டுக்குச் சென்று தங்கிய மாதுவும், அவன் மனைவி யும் கடல்தேவதையின் வரப்பிரசாத மான சங்க நிதியிலிருந்து கிடைத்த செல்வங்களைத் தாங்களும் அனுப வித்தனர். மற்றவர்களுக்கும் வாரி வழங்கி எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்குமாறு செய்தனர்.



ஏன்? ஏன்? ஏன்?

'இரத்தத்தை உறைய வைக்கும் திகில் நாவல்', 'மயிர்க்கூச்சலெடுக்கும் பயங்கரமான படம்' என்றலெல்லாம் விளம்பரங்கள் வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதெல்லாம் விளம்பரத்திற்காக மட்டும் தானா? உண்மையாக இப்படி நடக்கக் கூடியதுதானா?

இதெல்லாம்நடக்கக்கூடியதுதான். தெரு முனையில் ஒரு பைத்தியக்காரன் இருக்கிறான். அவன் நம்மைத் தாக்குவான். நாம் பதிலுக்குத் தாக்கி விட்டுத் தப்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு நாம் போனால், உண்மையாகவே பைத்தியம் தாக்கும் போது நமக்கு அதிர்ச்சி ஏற்படாது. ஆனால், எதிர்பாராதவிதமாக இப்படித் தாக்கப்படும்போது நமக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்படுகிறது. பலவீனமான மனது உள்ளவர்களை இது அதிகம் பாதிக்கிறது. அந்த மாதிரியான நேரங்களில், பயத்தால் முகம் வெளுக்கும். நாக்கு பேச முடியாமல் போகும். உடம்பு சிலிர்த்து மயிர்க் கால்கள் குத்திட்டு நிற்கும்.

சாதாரணமாகசாய்ந்து,உடலோடு படிந்து கிடக்கும் மயிர்க்கால்கள் இப்படிக் குத்திட்டு நிற்க என்ன காரணம்? பீதியும், பய உணர்ச்சியும் மூளையைப் பாதிக்கிறது. 'பயத்தால் அவன் விறைத்துப் போனான்' என்கிறோமே, அந்த நிலைக்கு நமது உடம்பு வந்து விடுகிறது! இதே நிலை, அளவுக்கு மீறிய குளிரால் நாம் தாக்கப்படும் போதும் ஏற்படுகிறது.

ஒவ்வொரு முடிக்கும் ஒரு மயிர்க்கால் உண்டு. இது கூட்டில் பதினெட்டில் ஒரு பாதியளவுக்கு தோலுக்குக் கீழே சதைக்குள் புதைந்திருக்கும். குளிராலோ பயத்தாலோ உடல் விறைக்கும்போது, நமது சதைகளின் மேல் பரப்பில் ஏற்படும் இறுக்கத்தால் இவை புடைத்து சிறு சிறு வேர்க் குருவைப் போல் மாறும். அப்பொழுது இவற்றில் உள்ள உரோமமும் நிமிர்ந்து நிற்கிறது. பயம் அல்லது குளிர் உணர்வு குறைந்து நாம் சாதாரண நிலைக்கு வரும் போது இந்த வேர்க்குருவும் மாறி விடுகிறது.

ஜோநம்பி

தாலாட்டு







மழைக்காலத்தில் இரவெல்லாம்
மண்ணின் மைந்தர் இசைகேட்கும்;
தளை தட் டாத கவிதைபோல்
தவளைகள் பாடும் ஒலிகேட்கும்.

சீராய்த் தானம் தப்பாமல்
சேர்ந்திசை பாடி மகிழ்வூட்டும்;
ஆராரோ தான் தினம்பாடும்;
அம்மா போலத் தாலாட்டும்!

பாட்டைக் கேட்க இடம்தேடிப்
பாம்புகள் வந்து பசியாறும்;
நோட்டம் பார்க்க வழிசொன்ன,
'தவளையும் வாயால் கெடும்' என்பார்!

ஆயினும் எத்தனை அற்புதமாய்
அழகிய இன்னிசைச் சொற்பதமாய்
வாயினால் தவளைகள் பாடுதம்மா!
வாழ்த்துரை செய்யவே கூடுதம்மா!

கத்திக் கத்திச் சங்கீதக்
களைதான் சேர்க்கும்! சுதிசேர்க்கும்!
தத்தித் தத்திப் பாய்ந்தோடும்;
தவளைகள் பாடும் தாலாட்டு!

— நெல்லை ஆ. கணபதி, சென்னை—15

வாழலாம்



மிருக இனத்தின் அரசனாம்
மிகுந்த வலிமை கொண்டதாம்
உருவில் அழகு கம்பீரம்
உடைய அதுவே சிங்கமாம்.

சிங்க மதனைக் கூண்டிலே
சிறைப்பி டித்தே வைக்கிறான்
அங்கம் நிமிர்ந்த மனிதனும்
ஆற றிவுடை ஆற்றலால்.


சின்னஞ் சிறிய கொசுவிற்குத்
திகைத்துப் பயந்த மனிதனும்
சன்ன மான வலைக்குள்ளே
தானும் ஒளிந்து கொள்கிறான்.

சிங்க மதனை வென்றவன்
சிறிய கொசுவுக் கஞ்சுதல்
இங்கு நீயும் ஏனென
என்றும் ஆய்ந்து பார்த்தாயா?

ஒற்றைச் சிங்கம் ஆதலால்
உறுதி கொண்டு அடக்கினான்.
மற்றும் கொசுக்கள் கூட்டமாய்
வருவ தாலே அஞ்சினான்.

இணைந்த ஒன்றாய்க் கூட்டமாய்,
எல்லோ ரும்நாம் சேர்ந்திடின்
அனைவ ருந்தான் வலிமையாய்
அகிலம் வியக்க வாழலாம்.

— கொ. மா. கோதண்டம்,
இராஜபாளையம்.





இறந்தும் இருப்பவர்

''தம்பி... உன் பெயர் என்ன..?'' என்று கேட்டார் கல்லூரி முதல்வர்.

''விளாடிமீர் இலிச் உலியனாவ்'' என்றான் அந்த மாணவன்.

''உனக்கு எந்த ஊர் தம்பி...?''

''சிம்பிர்க்ஸ் ஐயா...''

''சரி... நீ எங்கு படித்தாய்? பள்ளி இறுதித் தேர்வில் எத்தனை மதிப் பெண்கள் பெற்றுள்ளாய்...?''

''சிம்பிர்க்ஸில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஐயா... இறுதித் தேர்வில் நான்தான் ஐயா தலைசிறந்த மாணவன். தங்கப் பதக்கம் கூடப் பெற்றுள்ளேன்...'' என்றான் விளாடிமீர் உற்சாகத்துடன்.

''அப்படியா? சரி... உன் தந்தை யார்? உன் குடும்பத்தினர் பற்றிக் கூறேன்...''

''தந்தை இல்லியா உலியனாவ்; தாயார் மேரியா அலெக்ஸாந்ரோவ்னா... நாங்கள் மொத்தம் ஆறு குழந்தைகள்... மூன்று ஆண்; மூன்று பெண். நான் இரண்டாவது மகன் ஐயா...'' என்றான் விளாடிமீர்.

''ஒரு அண்ணன் என்கிறாயே... அவன் பெயர் என்ன...?'' என்றார் முதல்வர்.

''விளாடிமீர் சற்றுத் தயங்கினான். பிறகு, ''அண்ணன் பெயர்... ம்.. அலெக்ஸாந்தர் ஐயா...'' என்றான்.

உடனே முதல்வர் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அண்ணன் பெயரைச் சொல்ல ஏனப்பா உன்னிடம் இத்தனை தயக்கம்...? நீ குறிப்பிடுவது எந்த அலெக்சாந்தரை...?'' என்று கேட்டார்.

விளாடிமீரிடம் உடனே பதில் இல்லை. ''அது வந்து... வந்து...'' என்று மென்று விழுங்கினான். அவனுடைய தயக்கம் முதல்வர் மனத்தில் ஏதோ சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இருந்தாலும் உண்மையை உறுதி செய்து கொள்ள விரும்பினார்.

''தம்பி... நீ எந்த அலெக்சாந்தருடைய தம்பி...? நமது ஐார் மன்னர் மேன்மைதங்கிய மூன்றாம் அலெக்சாந்தரைக் கொலை செய்ய முயன்ற ஐந்து பேரில் ஒருவனாக நின்று, தூக்கு மேடையில் தொங்கி இறந்தானே அந்த அலெக்சாந்தரின் தம்பியா நீ...?'' என வினவினார்.

விளாடிமீர் வாய் திறந்து பதிலளிக்கவில்லை. ஆனால், அவன் தலை மட்டும் 'ஆமாம்...' என்பது போல் ஆடியது.

உடனே, ''நல்ல வேளை அப்பா...! உண்மை தெரிய வந்ததே... உன் அண்ணன் பெரும் புரட்சிக்காரன் ஆயிற்றே... நீயும் அப்படித்தான் இருப்பாய்... எனவே..'' என்ற முதல்வரை இடைமறித்த விளாடிமீர், ''ஐயா... என் அண்ணனின் செய்கையில் எனக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. நான் அப்படியெல்லாம் இருக்க மாட்டேன். தயவு செய்து எனக்கு உங்கள் கல்லூரியில் ஒரு இடம் தாருங்கள் ஐயா...'' என்று கெஞ்சினான்.

ஆனால் முதல்வர் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ''உன்னை இக் கல்லூரியில் சேர்த்துக் கொண்டால், இந்த காஜான் சர்வகலா சாலைக்கே கெட்ட பெயர் வந்து விடும். அத்துடன் எங்களுக்கும் ஆபத்து வரும்.. நீ

ஜானகிமணாளன்



போகலாம்...'' எனக் கூறி விட்டார்.

வெளியில் வந்த விளாடிமீருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. மிகுந்த வேதனைக்குள்ளானான். கடைசியில் அவனுக்கு ஒரே ஒரு வழி தான் புலப்பட்டது.

நேராகத் தான் படித்த 'சிம்பிர்ஸ்க்' பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியரிடம் போனான். அவர் பெயர் பியாடோர் கெரென்ஸ்கி. அவரிடம் நடந்த அனைத்தையும் சொன்னான். ''நீங்கள்தான் ஐயா, என்னை எப்படியாவது அக் கல்லூரியில் சேர்த்து விட வேண்டும்...'' என்று கேட்டுக் கொண்டான்.

பியாடோர் மிகவும் நல்லவர். விளாடிமீரிடம் மிகவும் அன்பு கொண்டவர். அவனது தந்தைக்கு நண்பர். தந்தையற்ற விளாடிமீரால் தான் அக் குடும்பம் முன்னுக்கு வர வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர். அவனுடைய குடும்பத்தின் 'கார்டியன்' என்று கூட அவரைக் கூறலாம்.

அவர் நேராகச் சென்று கல்லூரி முதல்வரைச் சந்தித்தார். அவர் மனத்தில் இருந்த அச்சத்தைப் போக்க முயன்றார். ''விளாடிமீர் மிக நல்ல பையன். பள்ளியிலும் சரி வெளியிலும் சரி.. அனைவரிடமும் நன்கு பழகுவான். ஆசிரியர்களிடம் மிகுந்த அன்பும் பணிவும் மிக்கவன். அவர்களின் மனம் கோணும்விதத்தில் ஒரு தடவை கூட அவன் தவறு செய்தவன் அல்ல...'' என்று இன்னும் பலவாறு எடுத்துக் கூறி, விளாடிமீருக்கு அக் கல்லூரியில் ஒரு இடம் வாங்கிக் கொடுத்து விட்டார்.

கல்லூரியில் சேர்ந்த விளாடிமீர் மிகுந்த கவனத்துடன் தன் படிப்பைத் தொடர்ந்தான். எனினும் ருஷ்ய நாட்டின் அரசியல் சூழ்நிலை அவனைத் தொடர்ந்து படிக்க விடவில்லை. ஜார் மன்னரின் அடக்குமுறை ஆட்சி நடந்து வந்த நேரம் அது. குறிப்பாகக் கல்வி நிலையங்களில் ஆசிரியர்களோ அல்லது மாணவர்களோ தப்பித் தவறிக் கூட முற்போக்குக் கருத்துக்களை வெளியிட்டு விட முடியாது. உடனே தண்டனைதான். வேலை போய் விடும். மாணவர்கள் என்றால் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினார்கள். அனேகக் கல்வி நிலையங்களில் மாணவர் கிளர்ச்சி துவங்கி நாடு முழுவதும் பரவியது. அது விளாடிமீர் கல்வி கற்று வந்த காஜான் பல்கலைக் கழகத்தையும் விட்டு வைக்கவில்லை. பெரும் கிளர்ச்சி தோன்றியது. விளாடிமீருக்கு மன்னரைக் கொலை செய்வதில் உடன்பாடு இல்லையே தவிர, மன்னரின் எதேச்சாதிகார அடக்குமுறை ஆட்சியின் மீது வெறுப்பு உண்டு. எனவே, அவனும் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து, உற்சாகத்துடன் கிளர்ச்சியில் ஈடுபட்டான். கல்லூரி முதல்வர் எது நடக்கும் என்று எதிர்பார்த்தாரோ அது நடந்து விட்டது. அன்று இரவே சுமார் நாற்பது மாணவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டனர். அவர்களில் விளாடிமீரும் ஒருவன்.

சிறைக்கு அழைத்துச் செல்லப் படும்போது, விளாடிமீர் போலீசாருக்குத் தொல்லைகள் பல தந்தான். அவற்றை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு போலீஸ்காரர், ''தம்பி! வீணாக ஏன் இப்படியெல்லாம் தொந்திரவு கொடுக்கிறாய்? நீ மோதுவது எதனுடன் என்பது உனக்குப் புரியவில்லை. ஒரு பெரும் சுவரை நீ இடிக்கப் பார்க்


கிறாயே...?'' என்றார்.

அதற்கு விளாடிமீர் என்ன சொன்னான் தெரியுமா? ''சுவரா அது? எந்த நிலையிலும் சிதையக் கூடிய மாதிரி சிதிலமடைந்து கிடக்கும் மண் மறைப்பு ஒரு தள்ளுத் தள்ளினால் போதுமே! தலைகுப்புற விழுந்து விடுமே...!'' என்றான் அவன் அலட்சியமாக.

இப்படி விளாடிமீர் கூறிய போது, அவனுக்குப் பதினேழு வயது. அந்தச் சிறு வயதிலேயே விளாடிமீரின் மனத்தில் ஜார் மன்னரின் ஆட்சியைப் பற்றி அவ்வளவு வெறுப்பு இருந்தது.

அந்த நிகழ்ச்சியுடன் விளாடிமீரின் பல்கலைக் கழக வாழ்வு முற்றுப் பெற்று விட்டது. அவன் அந்த 'காஜான்' மாநிலத்திலேயே போக்கு வரத்து வசதியற்ற ஒரு சிற்றூரில் தங்க அனுமதிக்கப்பட்டான். போலீஸ் எப்போதும் அவனைக் கண்காணித்துக் கொண்டே இருந்தது. அவன் தன் படிப்பைத் தொடர விரும்பி விண்ணப்பித்தான். அது மறுக்கப் பட்டது. வெளிநாடு செல்ல அனுமதி கேட்டான். கிடைக்கவில்லை. கடைசியில் காஜான் நகரில் குடும்பத்துடன் வசிக்க அனுமதிக்கப்பட்டான். அங்கு புரட்சி மனம் கொண்ட இளைஞர்கள் பலர் தனித்தனிக் குழுக்களாக இயங்கி வந்தனர். விளாடிமீர் இரகசியமாக அவர்களுடன் பழகி, அவர்களை ஒன்றுபடுத்த முயன்றான். நாளடைவில் அரசாங்க ஒற்றர்கள்





''இவர் இரத்தம் மட்டும் இனிப்பா இருக்கே! ஏன்?''

''இவருக்குத்தான் சர்க்கரை வியாதி ஆச்சே?''

— த. சரவணன், மதுக்கூர்.

வரை செய்தி எட்டியது. ஒரு நாள் அவர்கள் திடீரென்று வந்து பலரைக் கைது செய்தனர். அன்று விளாடிமீர் ஊரில் இல்லை. ஸமாரா என்ற ஊர் சென்றிருந்தான். அங்கும் போலீஸ் கண்காணித்தது. அங்கு இருந்தவாறு பல்வேறு புரட்சிக் கட்டுரைகளை எழுதினான். அந்த ஊர் வாழ்க்கை, அவனை வருங்காலத் தலைவனாக உருவாக்கிக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல.

கல்லூரிக் கதவுகள் விளாடிமீருக்கு முற்றிலுமாக அடைக்கப்பட்டு விட்டன. எனினும், சட்ட புத்தகங்களை வாங்கிப் படித்து, வெளி மாணவனாக இருந்தே அனுமதி பெற்றுச் சட்டப் பரீட்சை எழுதி வக்கில் ஆனான். பெயருக்குத்தான் வக்கீல் தொழிலே தவிர, விளாடிமீரின் கவனம் முழுதும் புரட்சியில்தான். 'பீட்ரோகிராட்' நகரில் தங்கி, அங்கிருந்த தொழிலாளருடன் தொடர்பு கொண்டான். அவனுடைய செல்வாக்கு ஓங்கியது. வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வந்தான். அங்கெல்லாம் அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பினான். நாடு திரும்பிய அவனைக் கைது செய்த அரசு, பதினான்கு மாதம் சிறையில் அடைத்தது. பிறகு விசாரித்து, சைபீரியாவுக்கு அனுப்பியது. அது ஒரு கடுங்குளிர்ப் பிரதேசம். அங்கு மூன்று ஆண்டுகள் தனிமை வாசம். பின்னர் மீண்டும் பீட்ரோ கிராட் வந்தான். நகரில் வசிக்கத் தடை உத்தரவு போடப் பட்டது. அருகில் ஒரு சிறு கிராமம். அங்கு ஐந்து மாத காலம் வாழ்ந்தான்.

தொழிலாளர் நலனைப் பேண வேண்டும் என்றால், அதற்கென ஒரு பத்திரிகை அவசியம் என்பதை விளாடிமீர் உணர்ந்தான்.

கடைசியில், 1900 ஆம் வருடம் டிசம்பர் மாதம் விளாடிமீரின் இலட்சியப் பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்தது. அதன் பெயர் 'இஸ்க்ரா.' 'தீப் பொறி' என்று பொருள். அதில் விளாடிமீர் பல புரட்சிக் கருத்துக்களைக் கட்டுரையாக வெளியிட்டு, ருஷ்ய நாட்டுக்கு அனுப்பி, அங்கு மன்னருக்கு எதிரான புரட்சிக் கருத்துக்களை விதைத்தான். எந்தப் பெயரில் தெரியுமா? விளாடிமீர் என்ற தனது சொந்தப் பெயரில் அல்ல... சொந்தப் பெயரில் இருந்தால் ருஷ்ய அரசாங்கம் அவரை அடையாளம் கண்டுபிடித்து விடுமே! எனவே ஒரு புனைபெயரைச் சூட்டிக் கொண்டான்.

அப்பெயர்தான் 'லெனின்' என்பது. நாளடைவில் விளாடிமீர் என்ற சொந்தப் பெயர் மறைந்து, 'லெனின்' என்ற புனைப்பெயரே சொந்தப் பெயராக நிலைத்து விட்டது.

லெனின் பிறந்தது 1870 ஏப்ரல் 22 ஆம் நாள். ருஷ்ய ஜார் மன்னரின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக 1917 ஆம் ஆண்டு மாபெரும் 'ருஷ்யப் புரட்சியை' நடத்தி, மன்னரை வீழ்த்தி, அந் நாட்டில் பாட்டாளி மக்களின் கம்யூனிச ஆட்சி ஏற்படக் காரணமாக இருந்தார் லெனின்.

1924ல் லெனின் இறந்த பிறகு, அவருடைய பூதவுடலை ஒரு கண்ணாடிப்பெட்டியில்ரசாயனதிரவத்திற்குள் பத்திரப்படுத்தி வைத்து மரியாதை செலுத்தி வருகிறார்கள் மக்கள். மக்களை எழுச்சி கொள்ளவைக்கும் மந்திரப் பெயராக லெனின் பெயர் உள்ளது.



இசையைக் கேட்குமா பாம்பு?

நாகம்மா உடலை உந்தி உந்தித் தள்ளிப் பார்த்தது. ஊஹூம்! சட்டை பிடிவாதமாகக் கழுத்துக்கும் கீழே நகர மறுத்தது. உடலை நெளித்துப் பார்த்து, சட்டை உடம்பிலிருந்து விலகி விட்டதை உணர முடிந்ததே தவிர, உடம்பிலிருந்து உரித்துக் கழற்றிப் போட முடியவில்லை! அரைகுறையாக முகத்தில் உரிந்திருந்த பகுதி வேறு பார்வையை மறைத்தது. வெளியே போனால் சொரசொரப்பான அடி மரத்திலோ, பாறையிலோ, உராய்த்து எளிதில் உரித்துக் கொண்டு விடலாம். அப்படித்தானே போன முறை கூட பதினைந்து மாதங்களுக்கு முன்பு வேப்ப மரத்தின் சொரசொரப்பான அடி மரப்பட்டையில் தேய்த்து எளிதில் சட்டையை உரித்துக் கொண்டது.

ஜமீன்தாரின் ஆட்கள் இன்னமும் மண்ணை வெட்டிக் கொண்டிருந்தனர். மிகப் பெரிய கற்பாறைக்கு அடியில் வளைகட்டி வாழ்ந்தாலும், நாகம்மாவால் அந்த அதிர்வைத் தாங்க முடியவில்லை.

நாகம்மா யாரென்பதை உங்களுக்குக் கூறவில்லையே! அது ஓர் அழகான பெண் கோதுமை நாகப் பாம்பு. சட்டை என்று சொன்னது எல்லாமே அதன் பாம்புச் சட்டையைப் பற்றித்தான்!

நாகம்மா மெதுவாக வெளியே வந்து நகர்ந்தது. மண்ணை வெட்டிக் கொண்டிருந்த ஆட்கள் அது போவதைக் கவனிக்கவில்லை. ஆனால், பாறையோரமாகக் குவிந்திருந்த காய்ந்த சருகுகள், அது நெளிந்து விரைந்த போது ஓசை உண்டாக்கிக் காட்டிக் கொடுத்து விட்டது.

"முனியா! கோதுமை நாகம்பா!" என்று பரபரத்தான் மண் வெட்டிக் கொண்டிருந்த பணியாளர்களில் முண்டாசு கட்டிக்கொண்டிருந்தவன். வலது கையில் வெள்ளித் தாயத்தைக் கட்டியிருந்த மற்றொருவன் கடப்பாரையை வீசினான். நாகம்மாவின் நடு உடலிலும் கண்ணிலும் சரியான அடி! அது துடிதுடித்து ஆத்திரத்துடன் படமெடுத்துச் சீறியது. இப்பொழுது முண்டாசுக்காரன் தனது கடப்பாரையை ஓங்கினான்.

நாகம்மா புத்திசாலி மின்னல் வேகத்தில் பின்வாங்கிச் சருகுக் குவியலில் மறைந்து தப்பி ஓடி, பழைய பாறை இடுக்கில் புகுந்து உயிர் தப்பிக் கொண்டது.

நாகம்மா அடிபட்டுக் காயமடைந்த போதும், ஆத்திரமடைந்து படமெடுத்துச் சீறிய போதும், அதன் சுரப்பிகளில் இருந்து வெளிப்பட்ட மெல்லிய வாடை அந்த இடத்தில் நிறைந்தது.. வேப்ப மரத்தடி வளை, அரச மரத்தடி வளைகளில் குடியிருந்த மற்ற கோதுமை நாகங்கள், இந்த வாடையால் ஈர்க்கப்பட்டுப் பரபரப்படைந்தன. நாகம்மாவுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் அவை படமெடுத்துச் சீறி வந்தன!

'அண்ணே, நான் சொன்னது சரியாப் போச்சு. அடிபட்ட பாம்புக்காக

ரேவதி

வஞ்சம் தீர்த்துக்க எல்லாப் பாம்பு களும் ஒன்று சேர்ந்து வருகின்றன. இனி இங்கே இருந்தால் உயிர் தப்ப முடியாது. ஓடுங்க!' என்று கண்மண் தெரியாமல் ஓடினான் முண்டாசு. தாயத்தும் பின் தொடர்ந்தான்.

பாறை இடுக்கில் உள்ள தனது வளையில் அடிபட்ட நாகம்மா துவண்டு கிடந்தது. கடப்பாரை அடி விழுந்த இடத்தில் வலி தாங்க முடிய வில்லை. அடிபட்ட கண்ணில் வலி யான வலி! முழுக்க உரியாது ஒட்டிக் கிடந்த சட்டை பார்வையை மறைத்த எரிச்சல், எல்லாமாகச் சேர்ந்து அதை அமைதி இழக்க வைத்தன.

நாகம்மாவை நலம் விசாரிக்க வந்த நண்பர்கள், அதன் இயலாமை நிலையை நன்கு உணர்ந்து கொண் டன. ஒரு மூலையில் நாகம்மா இட்டிருந்த எட்டு முட்டைகள் அவற் றின் கவனத்தைக் கவர்ந்தன.

''முட்டையிட்டதுமே நான் வந்து பார்த்தேன். அப்போ ரொம்பச் சின் னதாய் இருந்தன. இப்போ நல்லாப் பெரிசாயிடுச்சு. இன்னிக்கோ நாளைக்கோ குட்டிகள் வெளிவந் திடும்'' என்று வேப்பமரத்தடிப் பாம்பு, அரச மரத்தடிப் பாம்பிடம் கிசுகிசுத்தது.


நாகம்மாவுக்கு ஆறுதல் கூறும் கார ணத்தை வைத்துக் கொண்டு எல்லாப் பாம்புகளும் அங்கேயே தங்கின. நாகம்மாவால் அவைகளை ஒன்றும் செய்ய முடியவில்லை. முட் டைகளை உடைத்துக் கொண்டு பாம்புக் குட்டிகள் வெளிவந்தன. அதற்காகவே காத்திருந்த மற்ற பாம் புகள், குட்டிகளை உடனுக்குடன் விழுங்கித் தீர்த்தன!

''இன்னும் இரண்டு மாதம் வரை எனக்கு உணவே வேண்டாம்'' என் றது அரச மரத்தடி.

''எனக்கும்தான்'' என்று சிரித்தது வேப்ப மரத்தடி.

அடுத்த நாள் காலை முண்டாசுக் காரனும், தாயத்துக்காரனும் ஒரு பாம் பாட்டியோடு வந்து சேர்ந்தார்கள்.

''இந்தப் பாறைக்கு அடியில் இருக்



கும் வளைக்குள்தான் எல்லாப் பாம்புகளும் போச்சு'' என்றான் முண்டாசு.

''தரையைக் குச்சியால் பலமாகத் தட்டித் தட்டி மகுடி வாசித்தான் பாம்பாட்டி. ஒவ்வொரு முறையும் அவன் மண் தரையைத் தட்டிய போதும் தரை அதிர்ந்தது. நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. தரையைத் தட்டுவதும், மகுடி வாசிப்பதும் விடாமல், மிக மிக வேகமாக நடைபெற்றது.

தரை அதிர்வைத் தாங்க முடியாது பாம்புகள் சீறிக் கொண்டு வெளியே வந்தன! படமெடுத்துச் சீறின! காத்திருந்த பாம்பாட்டி குச்சியை ஆட்டி, ஆட்டி, அப்படியே தரையோடு தரையாக்கி, தாடையின் கீழாக அமுக்கிப் பிடித்துப் பாம்புகளை ஒவ்வொன்றாக எடுத்தான்! ஆறு பாம்புகளையும் கூடைக்குள் போட்டு மூடினான். நாகம்மா மட்டும் வெளியே வரும் நிலையில் இல்லை. அதனால் அது தப்பித்துக் கொண்டது.

வீட்டுக்குக் கொண்டு சென்றதும் பாம்பாட்டி ஒவ்வொரு பாம்பாக வெளியே எடுத்து நச்சுப் பற்களைப் பிடுங்கினான். முரட்டுத்தனமாகப் பிடுங்கியதால் புண் ஆறாமல், அதுவே காரணமாகி இரண்டு பாம்புகள் உயிரை விட்டன. மீதிப் பாம்புகளை அவன் பழக்கினான்.

பாம்பாட்டி மூடியைத் தட்டிக் கொண்டே, கூடையைத் திறப்பான். இயற்கையாகவே சுறுசுறுப்புக்குப் பேர் போன நாகப்பாம்புகள், தட்டல் காரணமாகப் பரபரப்படைந்து, முன்னெச்சரிக்கையாகவே படமெடுத்தபடி சீறிக் கொண்டு, தலை தூக்கும்; சீறும்; பிளந்த நாக்கை நீட்டி





"அவரை ஏன் எல்லாரும் அடிக்கிறாங்க?"

"மேடையில பேசும் போது 'லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்'னு சொல்றதுக்குப் பதிலா 'கேடீஸ் அண்ட் ஜென்டில்மென்' அப்படின்னு சொல்லிட்டாரு."

— பி. கார்த்திகேயன், மொரப்பூர்.

நீட்டி அச்சுறுத்தும். பாம்பாட்டியின் மகுடி அசையும் கோணத்திற்கு ஏற்றபடி, படமெடுத்த தலையை வெட்டி வெட்டி அசைந்தாடும். அதை அயர விடாது பாம்பாட்டி தரையில் தட்டிக் கொண்டேயிருப்பான். மகுடியை வாயிலிருந்து எடுத்ததும் சீறும் பாம்பு தரையைக் கொத்தும்.

"ஆகா! மகுடி இசைக்கு என்னமாய் ஆடுகிறது! மகுடி வாசிப்பை நிறுத்தியதும் கோபித்துத் தரையைக் கொத்துகிறதே!" என்று வியக்கும் மக்கள் காசை அள்ளிப் போடுவார்கள்.

ஒரு முறை பாம்பாட்டி வேடிக்கை காட்டி முடித்ததும் பார்த்தாலே பெரும்பணக்காரராகத் தோன்றிய ஒரு பெரியவர் வந்தார்.

"எனக்கு நாகரத்தினம் கிடைக்குமா?"

பாம்பாட்டி எதுவும் புரியாமல் விழித்தான்.

"என்னப்பா பாம்பாட்டியான உனக்கு நாகரத்தினத்தைப் பற்றித் தெரியலையே! கடித்து விஷத்தை வெளியேற்றாமல் கட்டுப்பாடாக வளரும் வயதான நாகப்பாம்பின் தலையில் தானாகவே உண்டாகுமாம்! பாம்புகூட அதைக் கக்கி வைத்துவிட்டு அதன் ஒளியில் இரை தேடித் தின்றுவிட்டு மறுபடி விழுங்கித் தலையில் எடுத்து வைத்துக் கொள்ளுமாமே? அந்த ஒளிவீசும் நாகரத்தினக் கல்லைத்தான் நான் கேட்கிறேன். அதை வைத்திருந்தால் செல்வம் பெருகுமாமே...? அதிர்ஷ்டம் பொங்குமாமே? அந்த நாகரத்தினக் கல் உன்னிடம் இருக்கா? எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தர்றேன்!"

"நாகரத்தினமா இல்லீங்க. ஆனால், எங்க தாத்தாவுக்குத் தாத்தா காலத்திலேயிருந்து ஒரு கிழப் பாம்பு எங்க வீட்டிலே இருக்குதுங்க. அது இரை தேடவே போகாதுங்க. தாங்களே முட்டையை உடைச்சு வைத்தால், வந்து குடிச்சிட்டுப் போகும். மறுபடி முடங்கிக்கும். அதன் தலையில் நாகரத்தினம் இருக்குன்னு எங்கப்பா சொல்லுவார்" — பெரியவரை ஏமாற்றப் பாம்பாட்டி கதை விட்டான்.

பெரியவர் பரபரப்படைந்தார்.

"அதேதாம்பா. அதை ஏன் வைச்சிருக்கே? நாகரத்தினத்தை எடுத்துக்க வேண்டியதுதானே?"

"நாமா அதை எடுத்துக்கிட்டா பயனில்லையாம். அது இறந்த பிறகுதான் அதை எடுத்துக்கலாமாம். அப்பத்தான் அதுக்கு நல்ல ஒளி வருமாம்."

"அந்தப் பாம்பையே எனக்குக் கொடுத்துடேன். நீ கேட்கிற பணம் தர்றேன். அது இறந்ததும் நானே அந்த இரத்தினத்தை எடுத்துக்கறேன்!" — பெரியவர் அடக்க முடியாத ஆவலுடன் கேட்டார்.

பிகு செய்து கொண்ட பாம்பாட்டி, தான் வைத்திருந்த ஒரு கிழட்டு நாகப்பாம்மைக் கூடையோடு பெரியவர் தலையில் கட்டி, பெரிய தொகையை வாங்கிக் கொண்டான்.

"பாம்பைப் பட்டினிப் போட்டுக் கொல்லக் கூடாது. அப்படி ஏதாவது செய்தால் இரத்தினம் கரிக்கட்டையாகிவிடும். அது இயற்கையாச் சாகும் வரை பொறுமையா இருக்கணும்" என்று புத்திசாலித்தனமான ஓர் எச்சரிக்கையோடு பாம்பைக் கொடுத்தான் பாம்பாட்டி. அவனுக்கு

அசைக்க முடியாத நம்பிக்கை. அந்தக் கிழப் பாம்பு கண்டிப்பாக இன்னும் ஐந்து ஆண்டுகள் உயிர் வாழும். அதற்குள் கிழவர் போய் விடுவார் என்று!

ஒருமுறை கோவில் திருவிழாவில் பாம்பாட்டி வித்தை காட்டினான். நான்கு பாம்புகளையும் ஒரே நேரத்தில் படமெடுத்து நிற்க வைத்து, மகுடி வாசித்து அசையும் தனது மகுடிக்கு ஏற்றபடி பாம்புகளை ஆட வைத்துக் காட்டினான். நல்ல கூட்டம். காசு வாங்கும் ஜோரில் அவன் சிறிது அசந்த நேரம் பார்த்து ஒரு பாம்பு நழுவி விரைந்தது. நடைபாதையில் இருந்த மழைப் பள்ளத்தில் மறைந்து தப்பித்துக் கொண்டது! கூட்டம் பீதி யடைந்து சிதறியது. மற்ற பாம்புக ளைத் திரட்டிக் கூடையில் அடைக்கவே பாம்பாட்டி படாதபாடு பட்டான்.

தப்பி ஓடிய பாம்பு, மின்னல் வேகத்தில் பள்ளத்தில் ஓடி மறைந் தது. அந்தப் பள்ளம் எதிர்ப் பக்கத் தில் நடைபாதையை ஒட்டியிருந்த காம்ப வுண்டுச் சுவர் அருகே முடிந்தது. அங்கே ஒரு ஜோசியக்காரர் கடை பரப்பியிருந்தார். ஜாதகக் குறிப்புக் கட்டுகளுடன், சிலேட்டு, பலப்பம், பஞ்சாங்கக் கட்டு இவற்றோடு அவர் ஒரு அழகான படத்தையும் வைத்தி ருந்தார். பசு மாட்டின் மடியிலிருந்து நல்ல பாம்பு ஒன்று பால் குடிப்பது போன்ற படம் அது. அதற்குச் சந்த னம், குங்குமம் இட்டு மாலை போட்டு வைத்திருந்தார் ஜோசியர்.

அந்தப் படத்திற்கு மேல் பாம்பு தலையைத் தூக்கிப் படமெடுத்துச் சீறியது. எல்லோரும் அரண்டு ஓடி னர். பாம்பு மாட்டியிருந்த படத்தைப் பார்த்தது.

''பால் எனக்குக் கண்டிப்பான உணவே அல்ல. அதோடு இந்த மாதிரி பசுவின் மடியிலிருந்து நாங்கள் பால் குடித்தால், எங்கள் கூர்மையான பல் பட்டுப் பசு இறக்க வேண்டியது தான்!' என்று கோபமாகக் கூறிப் படத்தைக் கொத்தி, ஓடி மறைந்தது.

பாம்பு படத்திற்கு மேல் படமெடுத் தாடிய செய்தி ஊரெங்கும் பரவியது. அவ்வளவுதான்! அடுத்த நாளே நடைபாதையில் படம் மாட்டப்பட் டிருந்த இடத்தில் ஒரு சின்னக் கோயில் உருவானது! ஜோசிய ருக்கு அடித்தது யோகம்! ஒரே தேர்த். திருவிழாக் கூட்டம்தான் போங்கள்!

அறிவியல் உண்மைகள் :

* பாம்புகள் மனிதர்களைப் பழிவாங்கும் என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை. அந்த அளவுக்கு எண்ணுமள வுக்கு அவைகளுக்கு அறிவு வளர்ச்சி இல்லை.

* பாம்புகள் ஆத்திரமடைந்து சீறும் போதும், உணர்ச்சி வசப்படும்போதும் அவற்றின் சுரப்பிகளில் இருந்து மெல் லிய வாடை வீசும். அது மற்ற பாம்பு களைக் கவர்ந்து இழுக்கக் கூடியவை.

* பாம்பு சட்டையை உரிப்பது ஓர் இயற்கை நிகழ்ச்சி. அந்த மாதிரி நேரங் களில் அது அமைதி குன்றிச் சோர் வுடன் இருக்கும்.

* ஏமாந்தால் பாம்புகளைப் பாம்புகளே இரையாக்கிக் கொன்வது சர்வ சாதார ணம்.

* பாம்புகள் இடும் முட்டைகள் வளரும்.

* மாதக் கணக்கில் கூடப் பாம்புகள் உணவின்றி உயிர் வாழும்.

* கடித்து நஞ்சு கக்காத பாம்புகளின் தலையில் நஞ்சு இறுகி, நாகரத்தினமாகி விடும் என்பதற்கு அறிவியல் பூர்வமாக ஆதாரம் இல்லை. இரை பிடிக்கும் போது பாம்பு விஷத்தைச் செலுத்தி. இரையைச் சாக வைத்த பிறகே விழுங் கும். அதனால், நஞ்சு கக்காத பாம்பு என்பது இருக்கவே முடியாது.

* பாம்புக்குப் புறச்செவியோ, செவித் துளையோ கிடையாது. உட்செவி மட் டுமே உண்டு. இதைக் கொண்டு அத னால் எதையும் கேட்க முடியாது. தரை வழி காற்று வழி அதிர்வுகளையே அதனால் உணர முடியும். மகுடிக்கு ஏற்பப் பாம்புப் படமெடுத்தாடுவதற் குக் காரணம், பாம்பாட்டி அடிக்கடி தரையில் தட்டும் அதிர்வும், மகுடியின் அசைவுமே.

கிழவரும் தங்கக் கூஜாவும்



ஓர் ஊரில் ஒரு வயதான கிழவர் இருந்தார். அவர் பெயர் மாதவன். அவர் மிகவும் ஏழை. அவருக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. அவருக்கு வீட்டின் பின்புறம் ஒரு சிறிய இடம் இருந்தது. அவர் அதில் ஒரு மாங்கன்றை நடுவதற்காக குழி தோண்டினார். அதில் அவருக்கு ஒரு கூஜா கிடைத்தது. அதை என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தார். அவருக்குப் பணம் தேவைப்பட்டது. அதனால் அவர் ஊரில் உள்ள கோபால செட்டியாரிடம் விற்றார். அந்தச் செட்டியார் கூஜாவைப் பார்த்ததும் தங்கத்தால் ஆனது என்று அறிந்து கொண்டார். அதனால் அந்த ஏழைக் கிழவரை ஏமாற்றும் எண்ணத்துடன் விலை குறைத்துக் கூறி சிறிய தொகையைக் கொடுத்தார். அந்தக் கிழவர் சென்றதும் அந்தக் கூஜாவை திறந்து பார்த்தார். அதில் நிறைய தங்கக் காசுகள் இருந்தன. உடனே அந்தப் பேராசை பிடித்த கோபால செட்டியார் அதிலிருந்த தங்கக் காசுகளை எடுத்து விட்டு கூஜாவை வீட்டிற்குள் மறைத்து வைத்தார். மறுநாள் அதைத் திரும்பத் திறந்து பார்த்தார். திரும்ப தங்கக் காசுகள் நிரம்பியிருந்தன. இப்படியே சில நாட்கள் சென்றபின் அந்தக் கோபால செட்டியாருக்கு உடல்நிலை குன்றியது. அவரை எந்த வைத்தியமுறையாலும் குணப்படுத்த முடியவில்லை. அன்று இரவு உறங்கும் பொழுது அவர் கனவில் ஒரு தேவதை தோன்றி அந்தக் கிழவனிடம் வாங்கிய கூஜாவை அவனிடமே திருப்பிக் கொடுத்து விடு என்று கூறி மறைந்தது.

மறுநாள் அந்தக் கிழவரிடம் சென்று நடந்தவற்றைக் கூறி கூஜாவை கொடுத்தார். உடனே அந்தக் கிழவர் கூறினார், நான் மிகவும் வயதானவன், எனக்கு இது தேவையில்லை, எனவே நீ அதில் வரும் பொற்காசுகளை கொண்டு ஏழை, எளியவர்களுக்கு உதவி செய் என்று கூறினார். அவர் கூறியபடியே ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்தான். அவருக்கு உடல்நிலையும் தேறியது. அவர் நல்லவராக மாறி எல்லோருக்கும் உதவினார்.

— சி. அரவிந்தன், கும்பகோணம்.

ஹேப்பி பர்த்டே தெரியுமா?

* "ஹேப்பி பர்த்டே டூ யூ" என்ற வாக்கியத்தைப் பாடாத பிறந்த நாள் விழா உண்டா? இதை எழுதியவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அமெரிக்க நாட்டைச் சேர்ந்த "பெட்டிமறில் ரைட்" (Petty Maril Right) என்ற சகோதரிகள் 1893 ஆம் ஆண்டில் எழுதினார்கள்.

— ஆறு. அண்ணாதுரை, மகாதானபுரம்.


தேனீக்கள்

ஆழி



சின்னஞ்சிறு தேனீயினால் ஓரிடத்திலும் நிற்காமல், தொடர்ச்சியாக 11 கி.மீ. தூரம் பறக்க முடியும்! அது பறக்கும்போது, ஒரு நிமிடத்திற்கு 26,400 தடவைகள் தன் இறக்கைகளை அடித்துக்கொள்ளுகிறது!

தேனீக்கள், பூக்களை நோக்கிப் பறக்கும்போது ஒரே நேர்க்கோட்டில் பறக்கின்றன. ஒரே நேர்க்கோட்டில் செல்லும் சூரியனின் கதிர்களை உணரக்கூடிய சக்தி தேனீக்களுக்கு உண்டு. இதைக் கண்டு பிடித்துச் சொன்னவர் 'கார்ல்வான் ஃபிரிஸ்ச்' என்ற விஞ்ஞானி.





தேனீக்கள் மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் பறக்கின்றன. இதே வேகத்தில் அது பறந்தால் 25 நாட்களில் உலகத்தையே ஒரு சுற்று சுற்றிவிடும்!



ஒரு ராணித் தேனீ தினமும் சராசரியாக 2500 முட்டைகள் இடக்கூடியது! இது, ஒரு கோழி தினமும் 50 முட்டைகள் இடுவதற்குச் சமம்!



தேனீக்கள் எந்தநேரத்திலும் தூங்குவதே யில்லை! இரவானாலும் சரி; பகலானாலும் சரி!


தன் கொடுக்கினால் கொட்டிய தேனீ கொடுக்கை இழந்து விடும். அதனால் அந்தத் தேனீ விரைவில் இறந்துவிடும்!




தேனீக்களின் ஆயுட்காலம் சுமார் 2 மாதங்கள்.

ராணித் தேனீயின் ஆயுட் காலம் 3 ஆண்டுகள்!





தேனடைகள்
கட்டப்
பயன்படும்
மெழுகு
தேனீக்களின்
உடலிலேயே
சுரக்கிறது!




ஒரு தேனீ
1கிலோ எடையுள்ள
தேனைச் சேகரிக்க
வேண்டுமானால்
அது 50 லட்சம்
பூக்களில் அமர
வேண்டும்!
இதற்காக 1½ லட்சம்
தடவைகள்
அது பறந்து
போக வேண்டும்!

நாக்கினாலும்,
உணர்கொம்பினாலும்,
கால்களாலும் கூட
தேனீயினால்
ருசி பார்க்க முடியும்!



தேனீயின் கண்கள்
மிகவும் விசித்திரமானவை.
புதிதாக மலர்ந்த
மலர்களை மட்டுமே
அதன் கண்கள்
பார்க்கின்றன.
வாடிய மலர்களை
அல்லது
மலராத மொட்டுக்களை
அதனால்
பார்க்க முடியாது!



ஒரு தேனீ,
பகல் முழுவதும்
வெளியில் பறந்து
சென்றுவிட்டுத்
தன்னுடைய
கூட்டிற்குத்
திரும்பும் போது
அதனிடம் சுமார்
40 மி.கிராம்
தேன் இருக்கும்.
இது, தேனீயின்
எடையில் பாதி!



தேனீக்கு மிக நுண்ணிய
5000 மூக்குத் துளைகள்
இருக்கின்றன. 750 மீட்டர்
தூரத்திற்கு அப்பால் உள்ள
ஒரு பூவின் மணத்தைக்
கூட அதனால் நுகர
முடியும்!

ஒரு தடவை, தேனீக்கள்
போதிய அளவு இல்லாததால்
மகரந்த சேர்க்கை குறைந்து,
அதனால் பழ உற்பத்தியும்
குறைந்து விட்டது என்று
ஜப்பான், தேனீக்களை
லண்டனிலிருந்து
வரவழைத்துத் தன் நாட்டில்
பறக்க விட்டது! அதன் பிறகு,
ஜப்பானில் பழ உற்பத்தி
அமோகமாக இருந்தது!









தேன் தித்திக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்! ஆனால், மலேசி:பாவில் கிடைக்கும் தேன் கசக்கும்! அங்கே அதிகம் வளரும் ரப்பர் மரங்களின் பூக்கள் கசப்பானவை. அதனால் அந்தப் பூக்களிலிருந்து கிடைக்கும் தேனும் கசக்கும்!



தேன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குக் கெட்டுப் போகாமல் இருக்கும்! எகிப்தில், பிரமிடுகளைத் தோண்டிய போது, ஒரு தேன் ஜாடி கண்டெடுக்கப்பட்டது. அது 3,300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆனாலும் அது இன்னும் நல்ல நிலையில் இருக்கிறது!



தேனீ விஷத்தைக் கொண்டு, சரும வியாதிகள், கீல்வாத ஜீரம், நரம்பு அழற்சி முதலிய வியாதிகளைக் குணப்படுத்துகிறார்கள். தேனீ விஷத்தில், மாக்னீஷியம் :பாஸ்பேட், கந்தகம் ஆகியவை இருக்கின்றன!




தேன் மிக விரைவில் ஜீரணமாகி, அதன் சத்துப் பொருள்கள் இரத்தத்துடன் கலக்கின்றன. 1 கிலோ தேன், 65 கோழி முட்டைகளுக்குச் சமம்; 10 லிட்டர் பாலுக்குச் சமம்; 8 கிலோ பிளம் பழத்திற்குச் சமம்; 10 கிலோ பச்சைப் பட்டாணிக்குச் சமம்; 20 கிலோ காரட்டுக்குச் சமம்!

புயல் வருவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய சக்தி தேனீக்களுக்கு உண்டு. புயல் வரப் போவதை அறிந்து கொண்டு, தேனீக்கள் கூட்டுக்குத் திரும்பி வந்து விடுகின்றன!







தேனீக்களுக்கு வியாதி வந்தால் மருந்து கொடுத்து குணப்படுத்திவிட முடியும் என்று சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தேன் கூட்டில் தேனீக்கு ஏதாவது வியாதி ஏற்பட்டால், அது தானாகவே வேறு இடத்திற்குச் சென்று இறந்து விடும்! அப்படிப் போகாவிட்டால், மற்ற தேனீக்கள் அதை உடனடியாகக் கொன்று அப்புறப் படுத்திவிடும்!



கரடியண்ணன் கலியாணம்

காட்டிலே கரடியண்ணன் கலியாணமாம்!
நாட்டியங்கள் பாட்டோடு பலவுமுண்டாம்!
கூட்டோடு வந்தாலும் சாப்பாடுண்டாம்!
வாட்டமின்றிக் கூட்டமாக வந்துசேருவீர்!

முத்தைநிகர் முல்லைமலர் சோலைக்குள்ளே
வித்தைகளைக் கிளிக்கூட்டம்
காட்டப்போகுதாம்!
கத்துகின்ற கழுதைக்குரல் பக்கமேளமாம்!
ஒத்துஊத நரியண்ணன் சரிஎன்றதாம்!

ஆட்டமாடக் குரங்குகளை
அழைத்தபோதிலே
நாட்டமுடன் வந்தமயில் நாணிக்
கொண்டதாம்!
பாட்டுப்பாட கோட்டானும் வந்துசேரவே
கூட்டோடு வந்தகுயில் கோணிக்
கொண்டதாம்!

வானமுட்ட தோரணங்கள் வானரங்கட்ட
யானைமாமா தலைமையிலே
ஊர்கோலமாம்!
பானைநிறை சோறுகளைப் பதம்பார்க்கவே
பூனைமாமா குடும்பத்தோடு
வந்துவிட்டாராம்!

சிங்கதாத்தா சங்கீதமும் பாடப்போகிறார்!
ஒங்கிவளர் ஒட்டகங்கள் நாட்டிய
முண்டாம்!
தங்கப் புள்ளி மான்களுமே தாளம்
போடுமாம்!
செங்கரும்பால் யானைக்கூட்டம் சிலம்ப
மாடுமாம்!


தேங்காய்பழம் கொண்டுவந்து குரங்குக்
கூட்டமே
பாங்காய்பெரு மலைகள்போலக் குவிக்க
லானதே!
வேங்கைமாமா விதவிதமாய் விருந்து
போடுறார்!
தாங்களுமே தயவுசெய்து வந்துசேருவீர்!

— மீ. ப. நாராயணன்.
மதுரை — 1.



எங்க வீட்டுக்கு வராதே!

ராஜ்கமல்



எழுத்தாளர் 'எளியவன்' தன் மகள் சுபாவை ஏறிட்டு நோக்கினார்.

''இன்னிக்குத்தானேப்பா உங்க சிறுகதை, எட்டு பதினைந்துக்கு ரேடியோவிலே ஒலிபரப்பாகுது..? நீங்க பாட்டுக்கு எழுதிக்கிட்டிருக்கீங்க. நம்ம வீட்டு ரேடியோவும் ரிப்பேர். வேறே வாங்கவும் பணமில்லேங்கறீங்க. நீங்க மட்டும் உங்க நண்பர்கள் யார் வீட்டிலேயாவது போய் உங்க கதையைக் கேட்டுக்கிடுவீங்க.. நானும் தம்பியும் எங்கே போய்க் கேட்பதுப்பா?'' என்று கேட்டாள் சுபா.

''எதிர் வீட்டு லீலா உன் சிநேகிதிதானேம்மா? அங்கே போய்க் கேட்கலாமே?''

''லீலா கிட்டே பள்ளிக் கூடத்திலேயே எங்கப்பா கதையைக் கேட்க நானும் என் தம்பியும் உன் வீட்டுக்கு வரட்டுமான்னு கேட்டேன். அவள் என்ன சொன்னா தெரியுமா? ''அதெல்லாம் முடியாது.. எங்க வீட்டுக்கெல்லாம் ரேடியோ கேட்க வரக்கூடாதுன்னு 'வெடுக்' குன்னு சொல்லிட்டாப்பா. என் கூடப் படிக்கறாளே சுமதி.... அதான் என்ஜினீயர் மகள்... நம்ம வீட்டுக்கு எத்தனையோ தடவை அழைச்சிட்டு வந்திருக்கேனே, அவளிடம் கேட்டேன். தாராளமா உன் தம்பியையும் அழைச்சிக்கிட்டு வான்னு அவள் உடனே சொன்னாள்.''

''நல்ல பொண்ணு,'' என்று குறுக்கிட்டார் சுபாவின் அப்பா.

'உங்க அப்பா அம்மா கோவிச்சுக்குவாங்களோ என்னமோ'ன்னேன் நான். 'இதுக்கெல்லாம் கோவிச்சுக்கமாட்டாங்க...லீலா தன் வீட்டுக்கு உன்னை வரக் கூடாதுன்னு சொன்னதை நான் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். எதிர் வீட்ல தானே இருக்கா.. இப்படிச் சொல்லிட்டாளேன்னு எனக்கு ரொம்ப வருத்தம். நீ அவள் வீட்டுக்கெல்லாம் போக வேண்டாம். எங்க வீட்டுக்கு வந்துடு..'ன்னு சொல்லிட்டா. தங்க மனசு அவளுக்கு!'' என்றாள் சுபா.

சுமதியின் வீடு அடுத்த தெருவில் தான் இருந்தது. எட்டு மணி ஆனதும் தன் தம்பி சுந்தருடன் புறப்பட்டுவிட்டாள் சுபா.

தெருவில் இறங்கிச் சிறிது தூரம் தான் நடந்திருப்பார்கள். ''சுபா!...'' என்று பின்னால் ஓடி வந்தாள் லீலா. எங்க வீட்டில் சாயங்காலத்தில்

இருந்து கரெண்ட் கட்டு. இருட்டுல தான் உட்கார்ந்திருக்கோம். உங்கப்பா எழுதிய கதையைக் கேட்கணும் சுபா.. எங்கே போய் நீ ரேடியோ கேட்கப் போறே? நானும் வர்றேன்..." என்றாள் அவள்.

''நம்ம கிளாஸ் சுமதி வீட்டுக்குத் தான்... வாயேன் போகலாம்..'' என்றழைத்தாள் சுபா.



சற்றுத்தயங்கியலீலா ''சுமதியோட சண்டை போட்டிருக்கேன். அவள் எங்கிட்ட பேசமாட்டா. இப்போ உன்னோட வந்தால் அவள் என்ன சொல்வாளோ?'' என்றாள்.

''ஒன்னுமே சொல்ல மாட்டா. சுமதியோட நல்ல குணங்களை நீ இன்னும் தெரிஞ்சிக்கலையே!''

''எனக்குத் தயக்கமா இருக்கு சுபா.''

''ஏன் இப்படித் தயங்கறே? சுமதி எவ்வளவு நல்லவள் தெரியுமா?''


''சுமதி நல்லவள்தான். அன்னிக்கு லஞ்ச் முடிஞ்சி கையைக் கழுவ குழாயடிக்குப் போனேன். அப்போ சுமதி கைகழுவிட்டு குழாயை மூடினா. மூடி லூசா இருந்தது. அதனால தண்ணீர் பீய்ச்சி அடிச்சு என் பாவாடை பாதி நனைஞ்சு போச்சு. எனக்குக் கோபமான கோபம் வந்தது. திட்டிட்டேன். 'மன்னிச்சுக்க லீலா... நான் வேணும்னு செய்யல. மூடி இறுக்கமா இல்லே.நான் என்னபண்ணுவேன்? என்னை மன்னிச்சுடு'ன்னு பல முறை கேட்டுண்டா என்றாள் லீலா. ஆனால் நான் விடலை, நல்லா திட்டினேன்.''

''சுமதி இதையெல்லாம்பாராட்டக் கூடியவள் இல்லை. நீ தைரியமா வரலாம். அதனால, அப்படி அவள் உன்னை ஏதும் சொன்னா, நாம மூணு பேருமே அவள் வீட்ல ரேடியோ கேட்காம திரும்பிடுவோம். சரி தானே?'' என்று தைரியம் கூறினாள்.

ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் ஓடோடி வந்த சுமதி ''வாங்க வாங்க... வா லீலா.சரியான நேரத்துக்கு வந்துட்டீங்க. உள்ளே வாங்க...'' என்று இனிமையாகக் கூறி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். வசதியாக உட்கார வைத்து ரேடியோவைப் போட்டாள்.

பிஸ்கட், முறுக்கு, குளிர் பானம் வந்தது.

வாசிக்கப் பட்ட சிறுகதையைக்



குழந்தைகள் மிகவும் ஆர்வத்துடன் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். பதினைந்து நிமிடங்களில் கதை முடிந்தது.

சோபாவின் பின்னாலிருந்து மிக அடக்கமான கரவொலி கேட்டுக் குழந்தைகள் திரும்பிப் பார்த்தனர். புன்னகை தவழ சுமதியின் பெற்றோர் நின்றிருந்தனர்.

''கதை சூப்பர்! உங்கப்பா கிட்டே எங்க பாராட்டைச் சொல்லும்மா என்றார் சுமதியின் அப்பா.

சுபாவும் லீலாவும் விடை பெற்ற போது வாசல் வரை வந்து வழியனுப்பினாள் சுமதி.

''என்னை மன்னிச்சுக்கோ சுமதி. அன்னிக்கு சண்டை போட்டுத் திட்டினதுக்காகரொம்பவெட்கப்படறேன். சுபா வந்து கேட்டப்போ எங்க வீட்டுக்கு வரக்கூடாதுன்னு சொல்லிட்டேன். ஆனா, எங்க வீட்டில் கரெண்ட் கட். அதனால தயங்கிக் கிட்டே சுபா கிட்டே கேட்டேன். அவள், உன் வீட்டுக்குக் கூப்பிட்ட போது, நீ, பழைய சண்டையை மறக்காம திட்டுவியோன்னு பயந்தேன். சுபா கிட்டே நான் அதைக் கூறிய போது 'நீ என்னோட வா லீலா. அப்படி சுமதி உன்னை ஏதேனும் சொன்னால், கதை கேட்காமலேயே திரும்பிடுவோம்'ன்னா... உங்க ரெண்டு பேரின் அன்பையும் பெருந்தன்மையையும் பார்க்கும் போது, நான் நடந்துக்கிட்டதை நினைச்சு வெட்கப்படறேன். நீங்க ரெண்டு பேருமே என்னே மன்னிச்சுடுங்க'' என்று கண்கள் பனிக்கக் கூறினாள் லீலா....

சுபாவும் லீலாவும் அவளை அன்புடன் தழுவிப் பின் விடை பெற்றுச் சென்றனர்.

சதுரங்கத்தில் உலக சாதனை

செஸ் என்ற சதுரங்க ஆட்டம் இந்தியாவில்தான் முதன் முதலில் ஆடப்பட்டது. மெசபடோமியாவில் இந்த ஆட்டம் கி. மு. 400 ஆம் ஆண்டில் மிகவும் பிரபலமாக இருந்தது என்பதை வரலாறு மெய்ப்பிக்கிறது. வடக்கு ஈராக் பகுதியில், 1938 ஆம் ஆண்டில் செஸ் ஆட்டக் காய்களைப் போன்ற உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெர்சியாவிலிருந்து செஸ் ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது.

உலகப் பெரும் புள்ளிகளில் பலர் செஸ் பிரியர்களாக இருந்து அதற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் செஸ் ஆட்டத்தைப் பிரபலப்படுத்திய பெருமைக்குரியவர் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் பெஞ்சமின் பிராங்கிளின். முகமத் கோரியை எதிர்த்துப் போரிட்ட ராஜா ஜெயசிம்மன், மாவீரன் நெப்போலியன், வால்டேர், பிரடிரிக் தி கிரேட் போன்ற வரலாற்று நாயகர்கள் செஸ் பிரியர்களே!

சதுரங்கம் இன்று உலகெங்கிலும் 121 நாடுகளில் ஆடப்படும் விளையாட்டாகியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை செஸ் விளையாட்டிற்குத் தமிழகம் திறமை மிக்க ஆட்டக்காரர்கள் பலரைத் தந்துள்ளது. முதல் இன்டர் நேஷனல் மாஸ்டர் என்ற பட்டத்தைத் தமிழகத்திற்கு வாங்கித் தந்தவர் மானுவேல் ஏரன். இந்தியாவில் உள்ள 13 இண்டர்நேஷனல் மாஸ்டர்களில் ஆறு பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்!

இந்த இளம் வயதில் 2610 புள்ளிகள் பெற்று (இப்பொழுது இன்னும் இது கூடியுள்ளது!) உலக செஸ் கலைஞர்களின் முதல் வரிசையிலேயே இடம்பெற்று விட்டவர் ஆனந்த்!


இண்டர் நேஷனல் செஸ் மாஸ்டரும் உலக சேம்பியனுமான காரி காஸபரோவும், அனடோலி கார்பரேவும் உலக விருதுக்காக ஆடிய துடிப்பான ஆட்டத்தை உலகெங்கும் பல கோடி விசிறிகள் பார்த்துத் தம்மையே மறந்தனர்! பார்க்கும் வாய்ப்பு இல்லாத பல இலட்சம் பேர் பத்திரிகைகளில் படித்துப் பரவசமாயினர். லையான்சில் (LYONS) நடைபெற்ற இந்தப் போட்டியைப் பார்த்தவர்களுக்கே அதன் 'த்ரில்' புரியும்! அப்பா! வெற்றி தோல்வியை யாருமே கணிக்க முடியாத துடிப்பான ஆட்டம். கடைசியில் முன்னாள் உலக சேம்பியன் காரி காஸபரோவே அனடோலி கார்பரோவை வென்று உலக சாதனை நிகழ்த்தினார்!

உலக சேம்பியனான காஸ்பரோ பல சாதனைகளைப் படைத்தவர். இவர் பெற்ற பரிசுத் தொகைகள், இரு வைரங்கள் பதித்த ஐந்து கிலோ தங்கம் ஆகியவற்றின் மதிப்பு மிலியன் டாலருக்கு மேல் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

உலக சேம்பியனான காஸபரோ

வின் வாழ்க்கையில் சில ஆண்டு களுக்கு முன் ஒரு திடீர் திருப்பம் ஏற் பட்டது. அரசியல் சடுபாட்டால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டது. சொந்த ஊர் பாகுவில் இருந்து கிளர்ச்சி காரணமாகக் குடும்பத்துடன் இவர் மாஸ்கோவுக்குக் குடியேறி விட்டார்!

இன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆனந்தின் புகழ் உலகம் முழுவதும் பரவியுள்ளது. இவரது இலட்சியம் இதுதான் என்று உறுதி செய்யப்பட்டு



* நீர்வ் – ஆனந்த் – விறுவிறுப்பான ஆட்டம்!

ஆறு வயதிலேயே இவரை இத் துறைக்குக் கொண்டு வந்தார் இவரது அன்னை திருமதி சுசீலா. செஸ் ஆட்டத்தின் அரிச்சுவடியை ஆனந் திற்குக் கற்றுக் கொடுத்தவரும் இவரேதான். இவரது இன்றைய வெற்றிக்குக் காரணம் கடுமையான முறையான வளர்ப்பும், அன்னையின் திட்டமிட்ட பயிற்சியும்தான். ஆனந் தின் வளர்ச்சியைப் பார்த்தாலே அது புரியும். முதலில் தேசிய சப் ஜூனியர் சேம்பியன் பதவி, ஜூனியர் சேம்பி யன் பதவி, 'ஏ' பிரிவு சேம்பியன் பதவி, உலக ஜூனியர் சாம்பியன் பதவி என்று வரிசையாக அடுத்தடுத்த பதவிகளில் புகழேணியில் ஏறி வந்த வர் ஆனந்த். இதை ஒட்டியே விருது கள்! அர்ஜுனா விருது! கிராண்ட் மாஸ்டர் விருது! பத்மஸ்ரீ விருது! விருதுகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது.

சமீப ஆண்டுகளில் செஸ் விளை யாட்டில் உலகெங்கிலும் ஒரு புதிய உற்சாகம் தோன்றியுள்ளது. புதிய புதிய முறைகள் விளையாட்டை ஒட்டித்தோன்றியுள்ளன. ஏராளமான செஸ் நூல்கள் வெளிவந்துள்ளன. கம்ப்யூட்டரும் தலையை நுழைத்து இதை மன ஓட்ட இயந்திர விளையாட் டாக (**Mental — Manual game**) மாற்றி வருகின்றது. எவ்வளவு கம்ப்யூட்டர் கள் இருந்தால்தான் என்ன? உலக சேம்பியனாவதற்கு மனித அறிவு

இன்டு மணி

தானே தேவைப்படுகிறது? இதை ஆனந்தே நிரூபித்துள்ளாரே!

டிரிடண்ட் ஓட்டலில் ஆனந்துக்கும் ரஷ்ய சேம்பியன் அலெக்சி திரீவுக்கும் நடைபெற்ற போட்டியை பட்டர்ஃபிளை நிறுவனம் முன்னின்று நடத்தியது.

சொல்லப் போனால் திரீவ் ரஷ்யாவில் அப்படியொன்றும் பிரபலமான புள்ளியல்ல. இருந்தாலும் இவரிடம் செஸ் தொடர்பான பல வியக்கத் தக்க புள்ளி விவரங்கள் உள்ளன. சோவியத் பள்ளியில் கற்றுணர்ந்த விளையாட்டுத் தந்திரங்கள், செஸ் குறித்த சில நுணுக்கமான தகவல்கள் போன்றவற்றைக் கற்று, அவற்றைத் தமது திறமையால் இவர் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார். ஆனந்தின் திறமைமிக்க ஆட்டங்களைப் பற்றியும் இவர் ஆய்வு செய்திருக்கிறார்! ஆனந்திடம் வெற்றி வாய்ப்பை இழந்த பல பிரபலங்களை நேரில் கண்டு, விவாதித்துப் பல கண்டுபிடிப்புகளைத் தமக்காக இவர் செய்து கொண்டுள்ளார்! கம்ப்யூட்டர்களின் உதவியால் செஸ் ஆட்டத்தின் பல மடக்கு நுணுக்கங்களை இவர் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்!

இவை அத்தனையையும் பயன்படுத்தி திரீவ் ஆனந்த்துடன் ஆடியுள்ளார். இருந்தும் கம்ப்யூட்டரே தோற்கும் அளவுக்கு அதி விரைவாகச் செயல்படும் ஆனந்தின் திறமைக்கு முன்னால் எதுவும் எடுபடவில்லை என்பது உலக செஸ் திறனாய்வாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது! திரீவ்வை வென்று ஆனந்த் ஒரு பெரும் சாதனையைத் தோற்றுவித்துள்ளார். இது இந்தியாவுக்கே பெருமையளிப்பதாகும். இனி ஆனந்த் உலக சேம்பியன் போட்டிக்குத் தயாராகலாம்! இந்த அளவுக்கு ஆனந்த்தை உயர்த்தியுள்ள பெருமைக்கு பெற்றோர்களான விசுவநாத்தும் சுசீலாவுமே காரணமாவார்கள்.

ஸ்போர்ட்ஸ் — 2

இளம் குருத்துகளின் கிரிக்கெட் வெற்றிகள்!

கிரிக்கெட் எவ்வளவு பிரபலமாகிவிட்ட விளையாட்டு என்பதற்கு ஓர் உதாரணம். 1948 ஆம் ஆண்டு உலகப் புகழ்பெற்ற ஆட்டக்காரர் டெனிஸ் கிராம்டனைப் பிரிட்டிஷ் மகாராணியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். அதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் டெனிஸ் கிராம்டனுக்கு லிண்ட்வாலின் பயங்கரப் பந்துவீச்சு காரணமாகத் தலையில் அடி பட்டிருந்தது! அந்தக் காயம் இன்னும் பூரணமாக ஆறாமல் கிராம்டனின் தலையில் இலேசாகத் தெரிந்தது!

திடீரென்று பிரிட்டிஷ் ராணியார் டெனிஸ் கிராம்டனிடம் திரும்பி வந்து, "மிஸ்டர் கிராம்டன்! காயம் பட்ட உங்கள் தலை எப்படியிருக்கிறது? நானும் எனது கணவரும் டெலிவிஷனில் அந்த நிகழ்ச்சியைப் பார்த்துத் திடுக்கிட்டோம்! இப்பொழுது காயம் ஆறிவிட்டதல்லவா?" என்று அன்பாகக் கேட்ட கேள்வி அங்கிருந்த அவ்வளவு கிரிக்கெட் ஆட்டக்காரர்களையும், நிர்வாகிகளையுமே தூக்கிவாரிப் போடச் செய்தது! கிரிக்கெட் ஆட்டம் பாமர மக்களை மட்டுமல்ல, மாட்சிமை பொருந்திய பிரிட்டிஷ் ராணியார் போன்ற உயர்மட்டப் பிரபுக்களையும் கூடக் கவரும் ஆட்டமாகியுள்ளது! கிரிக்கெட் ஆட்டக்காரர்கள்



* வெற்றி பெற்ற ஆந்திரக் குழு.

ஒரு சாதாரணச் சிறுவனிலிருந்து நாடாளும் மன்னர்கள் வரை எல்லோர் மனத்திலும் இடம் பிடித்திருக்கிறார்கள். இன்று டெலிவிஷனில் வரும் சிறுவன், ''கபில்! நானும் 'பூஸ்ட்' சாப்பிட்டு ஒருநாள் உங்களை மாதிரிப் பலசாலி ஆவேன்!'' என்று கூறும் விளம்பரத்திற்கு எவ்வளவு வரவேற்பு இருக்கிறது என்பதை எல்லோருமே அறிவோம்!

'இளம் கிரிக்கெட் வீரர்களை உற்சாகமூட்டி ஊக்குவித்தால், நாளை எதிர்கால இந்தியாவில்' பல சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் உருவாக முடியும். இதை எண்ணியே இளம் கிரிக்கெட் வீரர்களைக் கண்டறியப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவில் 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் 1984—85— ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுப் பிரபலமாகியுள்ளது. இந்தப் போட்டிகளைத் தாங்களே நடத்துவதற்கு பி. எஸ். ஏ. — எஸ். எல். ஆர். பெயரில் முருகப்பா நிறுவனங்கள் முன்வந்துள்ளன.


இதற்கு முன்பு முருகப்பா நிறுவனம் அகில இந்திய அளவில் ஹாக்கிப் போட்டிகளை நடத்திச் சர்வதேச அளவில் ஹாக்கி ஆட்டக்காரர்களை உருவாக்க வழிவகுத்தது நினைவிருக்கும். பி. எஸ். ஏ. — எஸ். எல். ஆர். சைக்கிள்களைச் சிறுவர்களே பயன்படுத்துவதால் அந்தவயது இளைஞர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தற்போது அதன் கவனம் திரும்பியிருக்கிறது! மூன்று வருஷங்களுக்கு இப்போட்டிகளை நடத்த முருகப்பா நிறுவனம் தமிழக கிரிக்கெட் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த இளம் குருத்துக்களில் தலைசிறந்த பௌலர், பாட்ஸ்மன், ஆல்ரௌண்டர் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

தென் மாநிலங்களுக்கான இந்தப் பிரிவில் ஆந்திரம், கோவா, கர்நாடகம், கேரளம், ஹைதராபாத், தமிழ்நாடு மாநிலங்களைச் சேர்ந்த சிறுவர்கள் போட்டியிட்டார்கள்.

இந்தப் பிரிவின் முதல் நாள் போட்டிகளை டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தின் உதவித் தலைவர் திரு. கே. பத்மநாபன் தொடங்கி வைத்தார்.

பதின்மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பந்தயம் என்கிறபோது நிர்வாகிகள் வயது, உயரம், எடை மூன்றையும் கவனித்துச் சிறுவர்களின் பிரிவை முடிவு செய்வது நலம். வயதை மாற்றிக் கொடுத்து இந்தப் போட்டியில் கலந்து கொண்டு சிறுவர்களைத் திணற அடிக்க வருவோருக்கு வாய்ப்பே இல்லாமல் செய்தல் வேண்டும்!

கோவா, ஹைதராபாத், ஆந்திரம்,



படங்கள்: ரமணன், கே. நாராயணசாமி

* இறுதி ஆட்டத்தில் ஆந்திர, தமிழகக் குழு.

கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களைச் சேர்ந்த இளஞ்சிறுவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றார்கள். செமிபைனல் ஆட்டத்தில் கர்நாடகக் குழுவினரை அதிக அளவு ரன் வித்தியாசத்தில் தோல்வியடைய வைத்தனர் ஆந்திர அணியினர். ஆந்திர அணியின் சமீர் 144 ரன்களும், நாகின்குமார் 125 ரன்களும் எடுத்துள்ளது ஆந்திரத்துக்கு வெற்றி வாய்ப்பை உறுதி செய்தது.

மற்றொரு செமி பைனல் ஆட்டத்தில் தமிழ்நாடும், ஹைதராபாத்தும் பங்கு கொண்டன. ஆஃப் ஸ்பின்னர் பந்து வீச்சாளர்கள் முனுசாமியும் தர்மனும் ஹைதராபாத் குழுவினரைத் தோல்வியடைய வைத்த ஹீரோக்கள்!

ஆந்திரச் சிறுவர் அணிக்கும் தமிழகச் சிறுவர் அணிக்கும் நடந்த போட்டியில் ஆந்திர மாநிலச் சிறுவர் அணி வெற்றி பெற்றதில் அதிசயமில்லை. காரணம், ஆந்திர அரசு திட்டமிட்டுப் பயிற்சி அளித்து இவர்களை அனுப்பியுள்ளது. முதலில் இவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்குள் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே மாநில ஆட்டக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். பயிற்சி சாதாரணப் பயிற்சி அல்ல. கடுமையான பயிற்சி. பயிற்சி அளித்தவர்களும் சாதாரணமானவர்கள் அல்ல, மகேந்திர குமாரும், சி. சுப்பிரமண்யமும். இந்தப் பத்து நாள் கடும் பயிற்சியையும் கூடவே இருந்து கண்காணித்து வந்திருக்கிறார் என். வெங்கட்ராவ். இவர்தான் ஆந்திர மாநில கிரிக்கெட் சங்கச் செயலாளர். இவர்கள் சாதனை படைக்காமல் இருந்தால்தான் அதிசயம்.

ஆந்திரக் குழுவினரின் சாதனைப் பட்டியலைப் பார்க்கலாம்!

பன்னிரண்டு வயதுள்ள பிரசாத் முதல் முறையாக ஆந்திரக் குழுவில் இடம்பெற்று வெற்றிக்குப் பாடுபட்டவர்களில் ஒருவன்.

கர்நாடகக் குழுவுக்கெதிராக 125 ரன்களும், தமிழகக் குழுவுக்கெதிராக 97 ரன்களும் எடுத்த வி. நாகினி குமார் வெற்றிக்கு வித்திட்ட இன்னொரு சிறுவன். ஆல்ரௌண்டரான நாகினிகுமார் இறுதிப் பந்தயத்தில் தமிழகக் குழுவின் இரு விக்கெட்களையும் வீழ்த்தியிருக்கிறான்! முதல் தடவை போட்டியில் பங்கேற்கும் இவனது சாதனை மூக்கின் மேல் விரல் வைக்க வைத்தது!

மற்றொரு ஆல்ரௌண்டரான ஐ. சீனிவாசின் பீல்டிங் சிறப்பே வெற்

றிக்கு வழிவகுத்தது. அதோடு ஆஃப் ஸ்பின்னரான சீனிவாஸ் வீழ்த்திய 3 விக்கெட்டுகள் பெருமைக்குரியவை. இச்சிறுவன் ஓங்கோல் பள்ளி மாணவன்!

கர்னூல் மாண்டிசோரி பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவனான டி. விசுவநாத் ஆந்திரச் சிறுவர் குழுவின் காப்டன். சென்ற முறை வெற்றிக் குழுவிலும் இடம் பெற்றவன்! பிராந்தியப் பந்தயத்தில் 98 ரன்களில் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்திய விசுவநாத்துக்குக் காப்டன் பதவி கிடைத்ததில் அதிசயமில்லை.

கர்நாடகக் குழுவுக்கெதிராக எம். ஏ. சமீர் — நாகின்குமாரின் ஒருங்கிணைந்த முயற்சி 295 ரன்கள் மதிப்பிடக் கூடியவை. கர்நூல் செயிண்ட் மேரி பள்ளி மாணவன் சமீர் கர்நாடகக்குழுவுக்கெதிராக 144 ரன்கள் எடுத்து 'டாப் ஸ்கோரர்' என்ற புகழைப் பெற்றான்!

ஸ்பின்னர் ஜகதீஷ் சிங் டோப்ராவும் ஸ்பின்னர் ராம் மோகனும் வெற்றிப் பாதையில் முன்னேறத் தங்கள் பௌலிங்கைப் பயன்படுத்தினர்.

ஆந்திர கோச் சி. சுப்பிரமணியத்திடம், ''இந்த அணியினரில் வருங்காலத்தில் முன்னுக்கு வரக் கூடியவர்கள் யார்?'' என்று கேட்டதும் கிடைத்த பதில்: ''பாட்ஸ்மன்களாக சமீர், நாகின்குமார், ரமேஷ் ஒளிவிசுவார்கள். ஸ்பின்னர்கள் சீனிவாஸ், ஜகதீஷ் சிங் டோப்ரா, ராம்மோகன், ஆகியோர் பௌலிங்கில் சாதனை படைப்பார்கள்.''

தமிழகக் குழு 'ரன்னர்' கேடயம் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது. தமிழக அணியில் பௌலிங்கில் திறமை காட்டிய முனுசாமி பந்தயத்தில் 'தலைசிறந்த ஆட்டக்காரர்' பெருமையைப் பெற்றான். ஆந்திர அணிச் சிறுவர்கள் நாகின்குமார், சீனிவாஸ், ஜகதீஷ் சிங் பாட்ஸ்மன், பௌலிங், பரிசுகளைத் தட்டிச் சென்றனர்!

வெற்றி பெற்ற ஆந்திரச் சிறுவர்களுக்கு BSA — SLR சைக்கிள்களை முருகப்பா நிறுவனத் தலைவர் வெள்ளையன் பரிசாக வழங்கினார்!

இளம் குருத்துக்களின் ஆட்டத் திறமையைக் கண்டு களிக்க முதிர்ந்த ஆட்டக்காரர்களும் வந்திருந்து சிறப்பித்துள்ளது பெருமைக்குரிய தொடக்கம். எதிர்காலத்தில் பல திறமையான கிரிக்கெட் நட்சத்திரங்கள் உருவாக இந்த 13 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பந்தயம் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. போட்டியை நடத்த முதல் முறையாக முன்வந்த முருகப்பா நிறுவனத்தினரைப் பாராட்டுவதோடு, அடுத்து இவர்கள் பந்தயங்களை அகில இந்திய அளவில் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது கிரிக்கெட் விசிறிகளுக்கு இனிப்பான செய்தியாகும்!



• மறைமலை நகரில் இயங்கிவரும் சிட்டுக்குருவி வானொலிச் சிறுவர் சங்கம் அண்மையில் தனது 10 வது ஆண்டு விழாவை பாரதிதாசன் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடியது.

ஏப்ரல் ஃபூல் எப்படி வந்தது?

இந்த 'ஏப்பிரல் ஃபூல்' விளையாட்டு முதன் முதலில் எந்த நாட்டில் தோன்றியது தெரியுமா? — பிரான்ஸ் நாட்டில்! எப்படித் தோன்றியது? — அது ஒரு சுவையான நிகழ்ச்சி. அன்றைய தினம் ஏமாறுபவர்களுக்கு 'ஏப்பிரல் முட்டாள்' என்ற பட்டம் அளிக்கப்படத் தொடங்கியதும் பிரான்சில்தான். ஆனால், துவக்கத்தில் 'முட்டாள்' என்ற பட்டம் அளிக்கப்படவில்லை.

ஏப்பிரல் முதல் நாளன்று, அவர்கள் ஒரு சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வார்கள். அக் கூட்டத்தில் வந்து கலந்து கொள்பவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சில உண்டு. அவற்றிற்கு உடன்படுபவர்கள்தான் அங்கு வரலாம். முக்கியமான முதல் விதி என்ன தெரியுமா? ஆண்கள் எல்லாம் பெண் உடையில் வர வேண்டும்! அதே போல், பெண்கள் ஆணுடை தரித்து வர வேண்டும். அடுத்ததாக, அங்கு வந்துள்ளவர்களிலிருந்தே கூட்டத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர், மறுக்காமல் தலைமை தாங்கிக் கூட்டத்தை நடத்த வேண்டும். அவருக்கு 'கேளிக்கை விழா நாயகர்' பட்டமும் வழங்கப்படும். அவர் அதை ஏற்க மறுக்கக் கூடாது. அதன் பிறகு கூட்டம் தொடங்கும். அப்போது தலைவர் யாரை அழைக்கிறாரோ, அவர் மறுக்காமல் எழுந்து வந்து, மேடை ஏறிப் பேச வேண்டும். அந்தப் பேச்சிற்கும் சில விதிமுறைகள் உண்டு. அப் பேச்சு, நடைமுறை வாழ்க்கையின் எந்த ஒரு விஷயம் பற்றியும் இருக்கலாம். ஆனால்,

ஜி. ஜெயராமன்



அந்தத் துறையில் நடக்கும் செயல்களை அல்லது அவர்களைக் கிண்டல் செய்து கேட்பவர்களுக்கு நகைச்சுவை விருந்து படைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அன்று அவ்வாறு எள்ளி நகையாடப்பட்டவர்கள் எவரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. அல்லது விரோதம் பாராட்டக் கூடாது. இந்தப் பழக்கம்தான் உலகம் முழுதும் இன்று வெவ்வேறு விதங்களில் 'முட்டாள் தின' விளையாட்டுக்கள் ஆகியுள்ளன. அந்தக் கேளிக்கையின் முடிவில், அதில் கலந்து கொண்ட அனைவருக்கும் 'தடபுடலான அறுசுவை விருந்து' கண்டிப்பாக உண்டு.

அந்தக் கேளிக்கை விழா, பிரான்சு நாட்டில், 16 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், அதன் பிறகு காலப்போக்கில் மெல்ல மெல்லப் பல மாற்றங்கள் புகுந்து, பண்டைய கோலாகலம் மறைந்து விட்டது. நகைச்சுவை உணர்வு மறைந்து, ஏப்பிரல் முதல் நாள் என்றாலே, பிறரை முட்டாளாக்கும் நாள் என்று ஆகி விட்டது. அத்தகையோருக்கு வழங்கப்படும் பட்டமும் 'ஏப்பிரல் முட்டாள்' என்பதாகி விட்டது. ஆயினும், அன்று முட்டாளாக்கப்பட்ட எவரும் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பது மட்டும் சர்வதேசச் சம்பிரதாயமாக நிலைத்து விட்டது.

இன்றைய பிரான்சு நாட்டினர் ஏப்பிரல் முதல் நாளன்று பொது இடங்களில் ஒன்றுகூடி, வந்திருப்பவர்களிலிருந்து இரண்டு பேரைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஒருவர் ராஜா, மற்றொருவர் ராணி என்று சிறப்புச் செய்யப்படுகின்றனர். இந்த ஏற்பாடுகளில் கலந்து கொள்ள மறுப்பவர்களுக்குத் தண்டனை உண்டு. வலுக்கட்டாயமாக அவர்கள் முகத்தில் கறுப்புச் சாயத்தைப் பூசித் தலையில் ஒரு ஜோடி மாட்டுக் கொம்புகளை மாட்டி ஒரு பட்டமும் கொடுப்பார்கள். அப் பட்டத்தைக் கூறி 'அவர் ஒரு கழுதை' என்று கிண்டல் செய்வார்கள். அவர் ஆத்திரப்பட்டுச் சிடுசிடுக்கும் வரையில் விட மாட்டார்கள்.

இங்கிலாந்தில் இந்த ஏப்பிரல் முதல் நாளை, நம் நாட்டின் ஹோலிப் பண்டிகை போன்று, குதூகலமாகக் கொண்டாடுவார்கள்.

இத்தாலி நாட்டில் வேலைக்காரர்கள் முதலாளி ஸ்தானத்துக்குச் சென்று வீட்டில் உள்ள மற்றவர்களை வேலை ஏவுவார்கள். முதலாளி ஐயாவையும் அம்மாவையும் விருப்பம் போல் வேலை வாங்குவார்கள். முதலாளி பணிந்தாக வேண்டும். மறுத்தால் தண்டனையும் உண்டு! ஆனால் ஒரு கண்டிஷன். 'வீட்டு வேலைகள்' என்ற வரம்புக்குள் மட்டும்தான் இந்த மாற்றங்கள். அன்றைய தினம் முழுவதற்கும், வீட்டு எஜமானர்கள்தான் சமைக்க வேண்டும். அது மட்டுமல்ல, வேலைக்காரர்களை சாப்பாட்டு மேஜையில் அமர்த்தி அவர்கள் மனம் கோணாமல் பரிமாறவும் வேண்டும். ஒரு வகையில் அதை ஒரு 'தொழிலாளர் சம உரிமை நாள்' என்றே கூறலாம்!





வரிரேகை

வரிக் குதிரைகள் மீதுள்ள வரிகள், மனிதர்களின் கைரேகை போலவே, ஒரு வரிக் குதிரையின் உடலில் உள்ளன போலவே இன்னொரு வரிக் குதிரையில் இருக்காது!

— ஸ்வி. ரவி. கும்பகோணம்.

ஹரால்டு பார்க் ஹர்ஸ்ட் என்பவர் 20,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து தலைகீழாகக் கீழே குதித்தார். தரைக்கு வந்து சேருவதற்குள் முகச் சவரம் செய்து கொண்டு, ஒரு சிகரெட்டையும் பற்ற வைத்துக் குடித்தார். 15,000 அடிகள் கீழே வந்த பிறகே, தமது பாராசூட்டை விரித்தார்.

— ஆ. திலகா, திண்டிவனம்.




புத்திசாலிகளின் பழம்!

நாம் அன்றாடம் சாப்பிடும் வாழைப் பழத்தின் விஞ்ஞானப் பெயர் மூசா செபியாண்டம். இதன் அர்த்தம் என்ன வென்றால், "புத்திசாலிகள் சாப்பிடும் பழம்" என்பதாகும்.

— ஆனந்தன், வந்தவாசி.



சாதனையோ சாதனை!




மார்கோனியே அமைத்தது!

போப்பாண்டவருக்கென தனியான ஒரு வானொலி நிலையம் உள்ளது. இது வானொலி கண்டுபிடித்த மார்கோனியால் அமைக்கப்பட்டது.

— கோவி. மகுடேசுவரன், திருப்பூர்..

இரும்மா இரு!

குரு. சீனிவாசன்



கவிதாவை நினைத்தாலே மாலாவின் நெஞ்சம் கசந்தது.

'அந்தக் கவிதாக் கழுதை என்னவோ பேச்சுப் போட்டிக்குப் போகிறாளாம்! மற்ற கழுதைகள் எல்லாம் அவளுக்கு பாட்டம் பாட்டமா வாழ்த்துச் சொல்றாங்களே!'

'எல்லோரையும் 'மீ'ப் பட்டம் போட்டு, அதட்டி அதிகாரம் பண்ணும் தலைமையாசிரியை கூட, கவிதாவை 'வாப்பா, போப்பா' என்று செல்லம் கொஞ்சுவதுதான் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது!'

'இந்தக் கவிதா அப்படியென்ன பெரிய்ய இவள்!'

'ஏதோ வகுப்பில் முதல் மாணவியாம்; பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்று நாலு பித்தளை ஷீல்டுகளையும், அலுமினியக் கோப்பைகளையும் பள்ளிக்குச் சம்பாதித்துக் கொடுத்து விட்டாளாம்! பொல்லாத பரிசுகள்.

பொறாமைப் புகைச்சலில் உருவான இந்த ஊமை 'மொழிகள், மாலாவின் மனத்திலிருந்து வெப்பப் பெருமூச்சாக வெளியேறிக் கொண்டிருந்தது.

'கவிதாவின் கர்வத்தை அடக்க வேண்டுமே!

மாலாவின் மனத்தில் குரூரம் கொடி கட்டிப்பறந்தது. பலி வாங்கும் ஆர்வம் ஓங்கி உலகளக்கும் விசுவரூபம்கொண்டு வளர்ந்தது. வாய்ப்பை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்!

அன்று பள்ளி எல்லைக்குள் அடியெடுத்து வைத்ததும் மாலாவின் செவிகளில் விழுந்த முதல் செய்தி, 'பேச்சுப் போட்டியில் கவிதாவுக்கு முதல் பரிசு!' என்பதுதான்.

'இருக்கட்டுமே; எதிர் பார்த்தது தானே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவளாகத் தனது வகுப்பில் நுழைந்தாள் மாலா. வகுப்பறைக்குள், பலாப்பழத்தில் மொய்க்கும் ஈக் கூட்டம் போலக் கவிதாவைச் சுற்றி மாணவிகளின் கூட்டம். அவள் கைகளைப் பிடித்துக் குலுக்குவோர், அவளது திறமையை வானளாவப் புகழ்வோர்; தட்டிக் கொண்டு வந்த தங்கப் பதக்கத்தை வாங்கி அழகு பார்ப்போர்.....!

இவற்றையெல்லாம் பார்க்கச் சகிக்காதவளாக மாலா தன் இடத்தில் சென்று அமர்ந்தாள்.

'டாண்.... டாண்.... டாண்!' வழிபாட்டு மணி முழுங்கியது. வகுப்பிலிருந்த அனைவரும் வழிபாட்டுக் கூடம் நோக்கி ஓடி விட்டனர். வகுப்பறைக்குள் மாலாவைத் தவிர ஒரு காக்கை குருவி கூட இல்லை.

மாலா தன் பர்ஸில் இருந்த ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்தாள்.

கவிதாவின் புத்தகப் பையைத் திறந்து, ஜியோமிதிப் பெட்டிக்குள் தான் கொண்டு வந்திருந்த ஐம்பது ரூபாய் நோட்டை வைத்து மூடினாள். பிரேயர் ஹாலுக்கு விரைந்தோடித்

தனக்குரிய இடத்தில் ஒன்றுமே நடவாதது போல நின்று கொண்டாள்.

வழிபாடு நிகழ்ச்சி முடிந்தது. மாலா மேடையை நோக்கினாள். தலைமையாசிரியை தனக்குரிய இடத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் மலர்ச்சி; அருகில் கவிதா வெற்றிப் புன்னகை படர ஆனால் அடக்கமாக நின்றாள்.

'நில்லுடியம்மா, நில்லு. இரும்மா இரு! இன்னும் சில நிமிடங்களில் உன் கௌரவம் படும்பாட்டை நான் பார்க்கத்தான் போகிறேன்!' — தனக்குத்தானே கறுவிக் கொண்டது மாலாவின் மனம்.

''ஆசிரியர்களே! மாணவிகளே...!''— எச். எம். பேச்சை ஆரம்பித்தார்.

''கவிதா தேவியின் புகழ் மாலையைத் தொடங்கப் போகிறாள்; அரை மணி நேரத்துக்கு அறுவை நடக்கும்'— மாலாவின் உள்ளம் சலித்துக் கொண்டது.

'நம் மாநகரில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டியில் நம் கவிதா தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்...!

அரங்கில் எழுந்த கரவொலி முழக்கம் பள்ளிக் கட்டடங்களில் எதிரொலித்துத் திரும்பியது!

''இது அவள் திறமைக்குக் கிடைத்த பரிசு. ஆனால், இப்போது நான் அறிவிக்கப் போகும் பரிசு, மிகமிகப் பெரிய பரிசு!''

'இது என்ன? ஏதோ புதிதாகப் பீடிகை போடுவது போலிருக்கிறதே! மாலாவின் நெஞ்சம் காரணம் விளங்காமல் தவிக்கத் தொடங்கியது.

''கவிதா இன்று புதிதாகப் பெறவிருக்கும் பெருமைக்குரிய பரிசு அவளது நேர்மைக்காகக் கிடைத்தது. செய்தியை அறிய நீங்கள் அனைவரும் ஆவலால் துடிப்பதை என்னால் உணர முடிகிறது. விளக்கமாகச் சொல்கிறேன் கேளுங்கள்.''

மாலா தன் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்கத் தொடங்கினாள்.

''நேற்று பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட கவிதா, வீடு திரும்பிய பஸ்ஸில் ஒரு கைப் பையைக் கண்டெடுத்திருக்கிறாள். அப்பையில் இருபதாயிரம் ரூபாய் ரொக்கமும், ரூபாய் நாற்பதாயிரம் பெறுமானமுள்ள நகைகளும் இருந்திருக்கின்றன. பையின் சொந்தக் காரரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உடனே தன் தந்தையின் உதவியோடு அதைக் காவல் துறை கமிஷனரிடம் ஒப்படைத்து விட்டாள். அவளது மிகச் சீரிய இந்த நேர்மையைப் பாராட்டி, பெரிய பரிசு ஒன்றை வழங்க போலீஸ் கமிஷனரே இங்கே வந்துள்ளார். இப்போது அவரே, தன் கரங்களால் கவிதாவுக்குப் பரிசை வழங்கிக் கௌரவிப்பார்!''

'கவிதாவின் திறமையைப் பற்றித் தலைமையாசிரியை எடுத்துக் கூறினார்கள். ஏழ்மை நிலையிலும் அடுத்தவர்களின் பொருளுக்கு ஆசைப்படாத கவிதாவின் நேர்மை எல்லோருக்கும் வழி காட்டியாக அமைய வேண்டும். வறுமையில் செம்மை என்பதற்கு ஏற்ப வாழ்ந்து காட்டும் கவிதாவின் நேர்மையைப் பாராட்டி, பணப்பைக்குரிய சொந்தக்காரரின் விருப்பத்தின் படி ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அவளுக்குப் பரிசாக வழங்குவதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.'' — கமிஷனர் முடித்தார்.

கரவொலிகள் காதுகளைச் செவிடாக்கின.

'கேட்பாரற்றுக் கிடந்த பல

"சொன்ன பேச்சைக் கேக்கலே. ராத்திரிச் சாப்பாடு கிடையாது."

"ராத்திரி என்ன சாப்பாடு? அதை முதல்லே சொல்லு."

— ஸ்ரீ மனோ பாரதி, புதுவை — 3.





ஆயிரம் ரூபாய்ச் சொத்தை உரியவரிடம் சேர்த்து, தன் நேர்மைக்கு ஊர் அறிய — உலகறிய உறுதிப் பத்திரம் பெற்று விட்ட இந்தக் கவிதா, அற்பம்; ஐம்பது ரூபாய்க்கு ஆசைப் பட்டுத் திருடினாள் என்று குற்றம் சுமத்தினால் என்னைத்தான் பைத்தியம் என்பார்கள்' — தனக்குத்தானே தீர்க்கமான முடிவுக்கு வந்த மாலா எல்லோருடனும் வகுப்பறைக்குள் நுழைந்தாள்.

'குன்றி மணி குப்பையில் தானே கிடக்கிறது என்று அதன் மீது கரியைப் பூச நினைத்தேன். ஆனால் காலம் எனக்கு நல்ல பாடத்தைக் கற்பித்து விட்டது' — என்று தன் குற்றத்தையும் தோல்வியையும் உணர்ந்து கொண்டே, கவிதாவை நெருங்கினாள். அவளது கைகளைப் பிடித்துக் குலுக்கி, "என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!" என்று குழைவாகக் கூறினாள். கவிதா அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு, "நன்றி மாலா!" என்று அன்பொழுகச் சொன்னாள்.

"கவிதா, உன் ஜாமென்டரி பாக்ஸில் உனக்காக ஒரு சிறிய பரிசை வைத்திருக்கிறேன். மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறும்போதே மாலாவின் கண்களில் நீர் மல்கியதோடு, வார்த்தைகளும் தடுமாறின.

ஏதோ புதிர் ஒன்றைக் கேட்டவள் விடையைத் தேடுவது போலக் கவிதா ஆர்வத்தோடு தனது ஜியோமிதிப் பெட்டியை எடுத்து அவசர அவசரமாகத் திறந்து பார்த்தாள். அதற்குள் இருந்த ஐம்பது ரூபாய் நோட்டைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் திகைத்துப் போய் விட்டாள். உடனே அதைக் கையில் எடுத்துக் கொண்டு, "என்ன மாலா இது விளையாட்டு? உன் அன்புதான் எனக்குப் பெரிய பரிசு. வேண்டுமானால் சாக்லெட் கொடு; வாங்கிக் கொள்கிறேன்!" என்று கூறி, அந்த ரூபாயை மாலாவின் கைகளில் திணித்து, அவளைத் தள்ளிக் கொண்டு போய் அவளுக்குரிய இடத்தில் அமரச் செய்து விட்டுத் தன் இருக்கையை நோக்கி நடந்தாள்.

மறுக்க முடியாத மாலா கவிதாவையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்தில் இப்போது சிறிதுகூடப் பொறாமையே இல்லை!




கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு.கணேசன்

● பூனையின் முடி வயிற்றுக்குள் சென்றால் ஆஸ்துமா வரும் என்கிறார்களே! இது உண்மையா?


— எஸ். எஸ். கார்த்திகேயன், ஆண்டார்குப்பம்.



● பூனையின் முடி வயிற்றுக்குள் சென்றால் ஆஸ்துமா வரும் என்று சொல்வதற்கில்லை! சில பேருக்கு பூனை முடியின் வாசனை வேண்டுமானால் ஒவ்வாமை (ALLERGY) காரணமாக ஆஸ்த்துமாவை வரவழைக்கும்!

● 'மண்ணெண்ணெயை உள்ளுக்குச் சாப்பிடுவதினால் தீது ஒன்றுமில்லை! நன்மையே!' என்கின்றனர் எங்கள் கிராமத்தில்... அப்படியா?


— எஸ். மனோகரன், சங்கமங்கலம்.



● மண்ணெண்ணெயை வயிற்றுக்குச் சாப்பிடுவதினால் தீமை ஒன்றுமில்லை என்பது உண்மைதான்! ஆனால் அப்படிச் சாப்பிடும் போது எசகுபிசகாகப் புரையேறி விட்டது என்று வைத்துக் கொள்! அப்போதுதான் நமக்கு ஆபத்து! புரையேறும் போது மண்ணெண்ணெய் நுரையீரலுக்குள் நுழைந்து, அதை அரித்துப் புண்ணாக்கி விடும். இதனால் 'நியூமோனியா' (PNEUMONIA) என்று சொல்லக்கூடிய ஆபத்தான நோய் நமக்கு வரக்கூடும். எனவே, விளையாட்டுக்குக் கூட மண்ணெண்ணெயைச் சாப்பிடுவது நல்லதில்லை! புரிந்ததா மனோகரன்?

● விளையாடிவிட்டு வியர்வையுடன் வந்து குளித்தால் உடனே சளிப் பிடித்துவிடும் என்கிறார்களே...?

— அ. திருமுருகன், செஞ்சி — 2.




● இது உண்மையில்லை! வியர்வைக்கும் சளிப் பிடிப்பதற்கும் சம்பந்தமில்லை. இன்னும் சொல்லப் போனால், விளையாடி முடித்ததும் குளித்தால்தான் உடம்பு சுத்தமாக இருக்கும்.

● எங்களுக்கு இளம் வயதிலேயே தலைமுடி நரைக்கத் தொடங்கிவிட்டது. இதற்கு என்ன காரணம்? இக்குறையைப் போக்க ஏதாவது

வழிமுறைகளைக் கூறுங்களேன்!

— எம். கணேசன், ரெட்டியார்பட்டி.

— ஆர். ராஜ்குமார், தத்தனூர்.



● இளமையிலேயே தலைமுடி நரைப்பதற்கு முதற்காரணம் பரம்பரை. அம்மா வழியிலோ, அப்பா வழியிலோ யாருக்காவது இளம் வயதில் நரைத்திருந்தால் உங்களுக்கும் இளம் வயதில் நரை தோன்றியிருக்கும். இதற்குச் சிறப்பான சிகிச்சை எதுவுமில்லை! புரதச் சத்துக் குறைவினாலும், இரத்த சோகை நோயினாலும் உடம்பின் தற்காப்புச் சக்தியில் (Immunity) ஏற்படும் கோளாறுகள் காரணமாகவும் நரைமுடி தோன்றலாம். இவற்றுக்குச் சிகிச்சை உண்டு. எனவே, உங்கள் நரை முடிக்கு என்ன காரணம் என்பதை அறிந்த பின்பே சிகிச்சைகளைக் கூற முடியும். எதற்கும், உங்கள் குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது!

● ஆர். ராம்குமார், கும்பகோணம்.

● து. சிவராமகிருஷ்ணன், வந்தவாசி.

இனிப்பான ஒரு பொருளைச் சாப்பிட்டு விட்டு, மீண்டும் வேறு ஓர் இனிப்புப் பொருளைச் சாப்பிட்டால் அதன் இனிப்புச் சுவை தெரிவதில்லையே, ஏன்?



● கிணற்றில் ஒரு பெரிய கல்லை எடுத்துப் போடுகிறீர்கள் வட்ட அலைகள் நீரில் எழுவதைக் காண்பீர்கள். இப்போது சிறிய கல் ஒன்றை நீரில் போட்டால், இது எழுப்பும் அலை நமக்குத் தனியாகத் தெரிவதில்லை. ஏற்கனவே உள்ள அலைகள் மட்டுமே தெரியும். சரி, இப்போது மிகப் பெரிய கல்லை நீரில் போடுங்கள். இதனால் அலை எழும்புவது தனியாக உங்களுக்குத் தெரியுமே! இம்மாதிரிதான் நம் நாக்கில் உள்ள சுவை மொட்டுக்களின் உணர்வு நரம்புகள் முதலில் சாப்பிட்ட இனிப்புப் பொருளால் தூண்டப்படும் போது, அதன் இனிப்புச் சுவையை நம்மால் உணர முடிகிறது. மீண்டும் அதே அளவு இனிப்புச் சுவை உடைய வேறொரு இனிப்புப் பொருளைச் சாப்பிடும் போது, ஏற்கனவே உணர்வு நரம்புகள் முதலில் சாப்பிட்ட இனிப்புப் பொருளால் தூண்டப்பட்டிருப்பதால்—இரண்டாவது இனிப்புப்பொருளின் சுவை நமக்குத் தெரிவதில்லை அல்லது சுவை குறைவாகத் தெரிகிறது. அதே சமயம் முதலில் சாப்பிட்ட இனிப்பை விட அதிக இனிப்புடைய இனிப்புப் பொருளைச் சாப்பிட்டோமானால், ஏற்கனவே தூண்டப்பட்ட உணர்வு நரம்புகள் மேலும் தூண்டப்பட்டு, அதன் சுவையை நமக்கு உணர்த்தும்! தெரிந்து கொண்டீர்களா, தம்பிகளே!


● தேமல் உடம்பில் பரவுவதைத் தடுக்க வழி சொல்லுங்கள், டாக்டர்!

— பி. எஸ். மணிமாறன்,
பரங்கிப்பேட்டை.



● 'சுத்தம் சுகம் தரும்' என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறாயா, மணிமாறன்? அந்த சுத்தமே தேமலைத் தடுக்கும்; போக்கும்! எப்படி? தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் சோப்புப் போட்டு நன்றாக அழுக்குத் தேய்த்துக் குளிக்க வேண்டும். எப்போதும் சுத்தமான ஆடைகளையே அணிய வேண்டும். இறுக்கமான ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். உடம்பில் வியர்வை உண்டானால் அவ்வப்போது அதைத் துடைத்து சுத்தப்படுத்த வேண்டும். மற்றவர்கள் உபயோகித்த சோப்பு, சீப்பு, துவாலை, படுக்கை விரிப்புகள், மற்றும் ஆடைகளை உபயோகிக்கக் கூடாது! இத்தனை வழிமுறைகளையும் நீ கடைப்பிடித்தாயென்றால் தேமல் உடம்பில் பரவாது என்பது உண்மை!

ஒரே டாக்டர் மயம்!



* இரண்டு படக் கதைகளும் தேன் சொட்டு!

சென்னை — 88. இரா. மணிகண்டன்.

* சாதனைப் பட்டியலில் சிறியவர்கள் தான் முதலிடம் வகிக்கிறார்கள். இப்பொழுது! விஸ்வநாத் ஆனந்த், மணிகண்டன்! ஏ அப்பா!

அழகர் கோயில். கா. மன்னர் மன்னன்.

* டாக்டர் பூவண்ணன், டாக்டர் ஸ்ரீதரன், டாகடர் கணேசன் — ஒரே டாக்டர்மயமாக கோகுலம் இருக்கிறதே!

தோட்டக்குறிச்சி. பூபாலன்.

* மோட்டார் ரேஸ் சூப்பர்! எத்தனை தெரியாத விஷயங்கள்! குண்டுமணி சாரின் கட்டுரை சூப்பர்தான்!

மொரப்பூர். அ. நவ்சாத்.

* போதி மரம் கதை அபாரம்! சின்னத் தனத்திற்கு சாட்டையடி. பரிசு பெற ஏற்ற கதை.

ராஜங்காமங்கலம். சித்தியா.

* கேசவன் என் மனதில் நீங்கா இடம் பெற்று விட்டது!

பூந்தோட்டம். து. பாண்டியன்.

* 'சினிமாவுக்கா போனே?' — கதை இளைய சமூகத்தினரைத் திருத்தும் அருமையான கதை.-

கூத்தாநல்லூர். டி. எஸ். ரமேஷ்.

* 'நீதான் உடைச்சியா?' — உண்மையின் உயர்வைப் படம் பிடிக்கிறது!

புதுக்கோட்டை. சிற்பி சோமு.

* மந்திரப் பேழையைத் திரும்பத் திரும்பப் படித்தேன்.

தக்கோலம். அ. முஸ்தபா.

* கேள்வி கேட்கும் குழந்தைகள் அறிவுத் தூண்டலால்தான் கேட்கிறார்கள் என்பதை மறைமுகமாக உணர்த்தியது மூட்டைப் பூச்சி வந்தாச்சு.

வண்ணாரப்பாளையம். என். சாரதா.

* செருப்புக் கோழி இணையில்லாத ஒரு அறிவு விளக்கக் கதை.

பாணாம்பட்டு. செ. சங்கர்.

* சைக்கிள் விநோதம் எத்தனை பாராட்டினாலும் தகும்.

திருவள்ளூர். கே. பி. மதன் மோகன்.

* பகத் சிங்கைப் படித்த போது நாடி நரம்பெல்லாம் புடைத்தது!

குடந்தை. எஸ். கே. மூர்த்தி.

* மாற்றத்தின் மர்மம் கண்ணீரை வர வழைத்தது.

நாமக்கல். பி. பொன்னுசாமி.

* பிறந்த நாள் கவியரங்கமும், ராபர்ட் புருசும் ஒரே அட்டகாசம்தான்!

கொரடாச்சேரி. ஜெ. கே. ராமன்.

* செல்லா இடத்துச் சினம் — எல்லாக் குழந்தைகளும் படிக்க வேண்டிய கதை.

விழுப்புரம். க. சிதம்பரம்.

* அப்பாவை அழைத்து வா! ஆசிரியர்களை அரியணையில் அமர்த்திய நாடகம்! பெற்றோர்களுக்குப் பொறுப்பை உணர்த்தும் படைப்பு!

பொன்னகரம். சாந்தியாலோ.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190, ஆசிரியர் குழு: 434145.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka